விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 10 திங்கட்கிழமை (23.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 156

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே

# அனர்த்தங்களில் சிக்கி 84 பேர் உயிரிழப்பு




## பலியெடுப்புக்கள் அதிகரிக்கலாம் என அனர்த்த முகாமைத்துவ மையம் அச்சம்

(கொழும்பு)

நாட்டில் தொடர்ந்து பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 84ஆக அதிகரித்துள்ளதாக தெரிவித்த அனர்த்த முகாமைத்துவ மையம், இந்த இயற்கை அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## தலாய் லாமா இரங்கல் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்த இழப்புக்களுக்கு திபெத்தின் ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா இரங்கல் வெளி 24ஆம் பக்கம் பார்க்க....

## உடனடி நிவாரணம் ஜனாதிபதி பணிப்புரை



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெள்ளத்தினால் பாதிககப்பட்ட வெல்லம்பிட்டிய, மீதொட்டுமுல்ல, கொலன்னாவை பகுதியிலுள்ள மக்களை நேற்று சந்தித்தார். 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளே மத்திய வங்கி நட்டமடைவதற்கு காரணம்

### ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தின் தூர நோக்க மற்ற நடவடிக்கைகளே இலங்கை மத்திய வங்கி மூன்று ஆண்டுகளாக நட்டத்தில் இயங்குவதற்கான காரணம் என்று வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தென்பகுதி ஊடகம் ஒன்றுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கயுள்ளார்.

குறித்த நேர்காணலில் அர்ஜுன் மகேந்திரன் தொடர்ந்தும் தெரிவித்



துள்ளதாவது, கடந்த 2010-ம் ஆணடில் மகிந்த அரசாங்கம் மத்திய வங்கியின் ஊடாக தங்கத்தில் முதலீடு செய்தது.

அக்கால கட்டத்தில் சர்வதேச சந்தையில் தங்கம் அதிக விலைக்கு விற்கப்பட்டது. ஒரு அவுன்ஸ் தங்கம 1800 அமெரிக்க டொலர்கள் வரை விற்கப்பட்டது. ஆனால் தற்போது ஒரு அவுன்ஸ் 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவின் ஊழல் எனக்குத் தெரியும்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தாருடன் நன்கு பழகியவர் என்ற ரீதியில், அவருக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கோடிக்கணக்கான சொத்துக்கள் உள்ளமை தமக்குத் தெரியும் என்றும், அது குறித்து அர 24ஆம் பக்கம் பார்க்க....

## மீண்டும் ஒரு போர்த்திணிப்பாக வடக்கு ஆளுநரின் கருத்துக்கள்

### சிறிதரன் எம்.பி குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவிக்கும் கருத்துக்கள் தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒரு போரை திணிக்கும் செயறபாடாக 24ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரியின் ஆட்சியிலும் மகிந்தவின் கொள்கை!

### அருட்தந்தை இம்மானுவேல் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்ல நோக்கங்களைக் கொண்டிருந்தாலும், இலங்கையின் அரச இயந்திரத்தின் பொறிமுறையானது பழையபடி மகிந்த ஆதரவுப் போக்கைக் கொண்டிருப்பதாக உலகத் தமிழர் பேரவைத் தலைவர் அருட்தந்தை எஸ்.ஜே.இம்மானுவேல் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு மின்னஞ்சல் மூலமாக வழங்கிய நேர்காணலின்போது அவர் இதனைக் குறிப் 23ஆம் பக்கம் பார்க்க....

## அரசாங்கம் செய்த நலன்புரிகள் என்ன?

(கொழும்பு)

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம்செய்த நலன்புரிகள் என்ன? செலவுகள் என்ன? பாதிக்கப்பட்டவர்களின் உண்மை நிலை என்ன? என்ற உண்மைகளை பாராளுமன்றுமமக்களும் தெரிந்துகொள்ள வேணடும்.

இதற்காகவே பாராளுமன்றத்தில் விவாதம் கேட்டோம் என பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பனர் வாசுதேவ 24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய சூழலில் நெருக்கமாக பணியாற்ற விரும்புகின்றோம்

### ஜெயலலிதாவுக்கு மங்கள வாழ்த்து

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னரான புதிய சூழலில் உங்களுடன் நெருக்கமாகப் பணியாற்ற விரும்புகின்றோம் என தமிழகத்தில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற சட்ட 24ஆம் பக்கம் பார்க்க....



## அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக இரு நாள் உணவை தானம் செய்யும் கைதிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள சிறைக் கைதிகள் தமது இரண்டு நாள் பகலுணவை வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளதாக மட்டக்களப்பு சிறைசசாலையின் பிரதம அத்தியட்சகர் கே.எம்.யு.எச்.அக்பர் மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் என்.பிரபா ஆகியோர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள அனைத்துக் கைதிகளும் நேற்று முன்தினமும் நேற்றும் தமக்கு வழங்கப்படும் 24ஆம் பக்கம் பார்க்க....

போரில் காலை இழந்தவர்

# வெங்காயவெடி வெடித்து கைவிரல்களை இழந்தார்

(வவுனியா)

வவுனியா மறவன்குளம் பகுதியில் பாக்கு என எண்ணி வெங்காய வெடியை சுத்தியலால் அடித்தவர், அது வெடித்ததில் படுகாயமடைந்தார். நேற்று முன்தினம் காலை நடந்த இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மறவன்குளம் பகுதியில் சைக்கில் திருத்தும் கடையினை நடத்திவரும் ஆறு பிள்ளைகளின் தந்தையான சி.திருச்செல்வம் (44 வயது) பிறிதொரு ஒரு நபரிடம் விலை கொடுத்து பாக்கு வாங்கியுள்ளார்.

அதற்குள் வெங்காய வெடி பாக்கு மாதிரியான தோற்றத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்துள்ளது. குறித்த குடும்பஸ்தர் அதனை பாக்கு என நினைத்து சுத்தியலைக் கொண்டு தாக்கியபோது வெங்காய வெடி வெடித்தது.

இச்சம்பவத்தில் இரு கையின் விரல்களும் சிதறிய நிலையில் குடும்பஸ்தர் வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் காலை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆறு பிள்ளைகளின் தந்தையான இவர் நெடுங்கேணியிலிருந்து இறுதியுத்தத்தில் கால் ஒன்றினை இழந்து விஷேட தேவைக்குட்பட்டவராக இருந்து வரும் நிலையில் சைக்கிள் திருத்தும் நிலையம் ஒன்றினை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# போலிக் கடவுச்சீட்டு வைத்திருந்த இலங்கையர் நாடு கடத்தப்பட்டார்

(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டு வைத்திருந்த இலங்கையர் ஒருவரை தாய்லாந்து அரசாங்கம் நாடு கடத்தியுள்ளது.

தாய்வான் தாயுவான் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக போலியான சிங்கப்பூர் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி நியூசிலாந்து செல்ல முயற்சித்த இலங்கையரே நாடு கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகத்திற்கு இடமான வகையில் விமான நிலையத்தில் நடந்து கொண்ட குறித்த இலங்கையரை அந்நாட்டு குடிவரவு குடியகல்வு முகவர் நிறுவன அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். விசாரணைகளின் போது குறித்த நபரின் கடவுச்சீட்டு போலியானது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

சமையற்கலை வல்லுநரான குறித்த நபர், பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வாறு சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களிடம் பணம் செலுத்தி போலிக் கடவுச்சீட்டு ஊடாக நியூசிலாந்து செல்ல முயற்சித்துள்ளார்.

ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளுக்கான சட்டவிரோத குடியேற்றங்கள் உன்னிப்பாக கண்காணிக்கப்படுவதனால் இவ்வாறு நியூசிலாந்து செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக விசாரணைகளின் போது அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

# வாழைப்பழம் தொண்டையில் இறுகி குழந்தை உயிரிழப்பு

வாழைப்பழத் துண்டு தொண்டையில் இறுகியதன் காரணமாக ஒன்றரை வயது ஆண் குழந்தை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் பதுளை கயிலாகொட பிரதேசத்தில் நடந்துள்ளது.

குறித்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, தாய் குழந்தைக்கு வாழைப்பழத்தை ஊட்டிக்கொண்டிருந்த போது அதில் ஒரு துண்டு குழந்தையின் தொண்டையில் இறுகியுள்ளது.

இதனையடுத்து தாய் குழந்தையை பதுளை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

இதன்போது சிகிச்சை பெற்று வந்த நிலையில் குழந்தை திடீரென இறந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒரு வயதும் 4 மாதங்களுமே ஆன ஆண் குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

வாழைப்பழத்துண்டு தொண்டையில் இறுகியதன் காரணமாகவே இந்த குழந்தை இறந்ததாக பிரேதப் பரிசோதனைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (செ-12)

# நாடாளுமன்ற கட்டிடத்தில் சூரியசக்தி பயன்பாடு

(கொழும்பு)

நாடாளுமன்ற கட்டிடத்தில் மின்சக்திக்கு பதிலாக சூரிய சக்தியை பயன்படுத்துவதற்கு கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக, அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் குறித்து ஏற்கெனவே ஆராயப்பட்டதில், சூரிய சக்தி பயன்பாடு, செலவு குறைந்த ஒன்றாகவும் இலங்கைக்கு உகந்ததாகவும் காணப்பட்டதாக மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு சக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சூரிய சக்தி பயன்பாட்டின் மூலம், இலங்கையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில், நீடித்த வலு சக்தி அதிகாரசபையும் ஆலோசனை வழங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்கால மின்சார பயன்பாட்டை நோக்குமிடத்து, இலங்கையில் இன்னும் சில வருடங்களில் மின்சார தட்டுப்பாடு ஏற்படுமென ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், சூரிய சக்தி பயன்பாடு அதனை ஓரளவு நிவர்த்திக்குமென நம்பப்படுகிறது. (செ-12)

# மறு அறிவித்தல் வரையில் 52 பாடசாலைகளுக்கு பூட்டு

சப்ரகமுவ மாகாணத்தின் 52 பாடசாலைகளை காலவரையறை குறிப்பிடாமல் மூட அம் மாகாண கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் 52 பாடசாலைகளே இவ்வாறு மூடப்படவுள்ளன.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் 33 பாடசாலைகள் மற்றும் பாதிக்கப்பட்ட 19 பாடசாலைகள் தொடர்பிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, சப்ரக முவ மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி கேகாலை மாவட்டத்தின் 46 பாடசாலைகளும் இரத்தினபுரி மாவட்டத்தின் 6 பாடசாலைகளும் இவ்வாறு மறு அறிவித்தல் வரை மூடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# இலங்கைக்கு அமெரிக்கா மேலும் நிவாரண உதவி

## 36 மில்லியன் ரூபாயை வழங்குகின்றது

ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் மேலும் 36 மில்லியன் ரூபாயை அனர்த்த நிவா ரண உதவியாக இலங்கைக்கு வழங்கியுள்ளது.

ஏற்கெனவே வழங்கப்பட்ட 7.2 மில்லியன் ரூபாயுக்கு மேலதிகமாக குறித்த தொகை வழங்கப்படவுள்ளதாக அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மூன்று வருடத்திற்கான மனிதாபிமான உதவித் திட்டத்தின் அடிப்படையில், இந்த நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன.

இந்தநிலையில், பாதுகாப்பு நடவடிக்கை, அனர்த்த மீளமைப்புகள், வெள்ளப்பெருக்கு மற்றும் வரட்சி நிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான சுத்தமான குடிநீர் விநியோகம் என்பவற்றுக்காக 144 மில்லியன் ரூபா நிதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் அண்மைக் காலங்களில் ஏற் பட்ட அனர்த்த நிலைமைகள் மற்றும் பாதிப்புகளின் போது நேரடி நிவாரண நடவடிக்கைகளுக்காக அமெரிக்க அரசாங்கம் 187 மில்லியன் ரூபா நிதியை வழங்க முன்வந்துள்ளது.

இதுதவிர, அனர்த்த முகாமைத்துவ ஒழுங்குமுறை, மற்றும் ஒத்துழைப்பு அடிப்படையில் நீண்டகால செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்க அரசாங்கம் தெரிவித்து ள்ளது.

இதன்பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக மனிதாபிமான தகவல் முகாமைத்துவம் மற்றும் ஒத் துழைப்பு பணிகளை இலங்கையின் அனர் த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேற்கொள்ளவுள்ளது. (செ-12)

# கத்திக்குத்து ஒருவர் படுகாயம்

இருவருக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிந்ததில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.


இச் சம்பவம் நேற்று இரவு 9.30 மணியளவில் யாழ்.பேருந்து நிலையத்தை அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த தி.யோகராஜா (வயது 35) என்பவரே படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 23.04.2016 சனிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
**அமரர் கிட்டிணன் சந்திரசேகரம் (சந்திரன்)**



அவர்களின் அந்தியேட்டிக்
கிரியைகள் இன்று
23.05.2016 திங்கட்கிழமை
அதிகாலை 5.30
மணியளவில் கீரிமலை
புனித தீர்த்தக்கரையில்
நடைபெறும். அந்
நிகழ்விலும் தொடர்ந்து
அன்னாரது இல்லத்தில்
மு.ப 11.30மணியளவில்
நடைபெறவிருக்கும் சபிண்டீகரண
நிகழ்விலும், ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும்,
மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு தங்களை
அன்புடன் அழைக்கின்றோம்

(சி-4664)

கூவில்,
புலோலி தெற்கு,
புலோலி.

-குடும்பத்தினர்



# கண்ணீர் அஞ்சலி

**திரு.முத்தையா மாணிக்கம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



யா/இந்து மகளிர் ஆரம்ப
பாடசாலை அதிபர்
**செல்வி சாந்தினி மாணிக்கம்**
அவர்களின் அன்புத்
தந்தையார்
திரு.**முத்தையா மாணிக்கம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
அவர்களின் மறைவுக்கு எமது
கண்ணீர் அஞ்சலியை
செலுத்தி அவரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(சி-4670)

அதிபர் சங்கம்
நல்லூர்க் கோட்டம்.

# நான் கூட்டு எதிர்க்கட்சியினரின் தாளத்திற்கு ஆடத்தயாரில்லை



## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் திட்டவட்டம்

(கொழும்பு)

**கூட்டு எதிர்க்கட்சியினரின் தாளத்துக்கு ஏற்ப ஆட தான் தயாரில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் வெளியாகும் சிங்கள வாரஇதழ் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், நான் நீண்டகாலமாக எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து நாடாளுமன்றத்தில் பணியாற்றியவன். எனக்கு அரசாங்கத் தரப்பில் இணைந்து செயலாற்றிய அனுபவம் கிடையாது.

அந்த வகையில் எதிர்க்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் நான்தான் என கூறியுள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில், நான் தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதனால் அரசாங்கத்தின் அனைத்து திட்டங்களையும் எதிர்க்கத் தேவையில்லை. அரசாங்கத்தின் நல்ல செயற்றிட்டங்களுக்கு பாராட்டு தெரிவிக்க வேண்டும்.

அதேநேரம் பொதுமக்கள் நலனுக்கு எதிரான திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்த முயற்சிக்கும்போது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும் வேண்டும் என சம்பந்தன் தெளிவுபடுத்தியுள்ளார். (இ-5)

# லிந்துலையில் திடீரென தாழ் இறங்கியது நிலம்

### உடனடியாக 57 பேர் வெளியேற்றம்



நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட லிந்துலை ஊவாக்கலை 3 ஆம் இலக்க தோட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நிலம் கீழ் இறங்கியதால் குடியிருப்புகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ள காரணத்தினாலும் மண்சரிவு அபாயத்தின் காரணமாகவும் 12 குடும்பங்களை சேர்ந்த 57 பேர் இடம்பெயர்ந்து தோட்ட விளையாட்டு மைதானத்தில் தற்காலிக கூடாரங்கள் அமைத்து தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம்மாலை பெய்த கடும் மழையினால் 12 வீடுகளை கொண்ட லயன் தொகுதிக்கு முன்னால் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டதுடன் லயன் தொகுதிக்கு பின்னால் காணப்பட்ட மண்மேடு சரிந்து விழும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால் இக்குடியிருப்பு பகுதியில் வசித்த இவர்களை பாதுகாப்பான இடத்திற்கு இடம்பெயருமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் மற்றும் நுவரெலியா பிரதேச செயலகத்தின் அதிகாரிகள் நேற்று தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, இவர்கள் குறித்த பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டு பிரதேச செயலகத்தினூடாகவும் இராணுவ படையினர் ஊடாகவும் அத்தோட்ட விளையாட்டு மைதானத்தில் தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர். (இ-5)

## 3000 மில்லி கிராம் கேரள கஞ்சா மீட்பு

திருகோணமலை, நிலாவெளிக் கடற்கரையில் 3000 மில்லிகிராம் கேரளா கஞ்சாவுடன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் அநுராதபுரத்தைச் சேர்ந்த 19 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் வெசாக் தினத்தை முன்னிட்டு அநுராதபுரத்திலிருந்து திருகோணமலைக்கு சுற்றுலா வந்துள்ளார். குறித்த நபர் நிலாவெளிக் கடற்கரையிலிருந்து கஞ்சா பாவிப்பதற்குத் தயாரான நிலையில் அங்கிருந்த பொலிஸாரினால் கைது செய்ய ப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணையினை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கிண்ணியா கடற்கரையில் கண்ணி வெடிகுண்டு மீட்பு

திருகோணமலை கிண்ணியா கடற்கரையில் கண்ணி வெடியொன்று மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கடல் அலையினால் அடித்து வரப்பட்டு இந்தக் கண்ணிவெடி கரையொதுங்கியுள்ளது.

கடலில் குளிக்கச் சென்ற இரு இளைஞர்கள் குண்டொன்று கரையில் இருப்பதைக் கண்டு அது குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து அங்கு சென்று கண்ணிவெடியை மீட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## வெள்ள அனர்த்தத்தை பயன்படுத்தி ஆட்டையப் போட்ட 15 பேர் கைது

(கொழும்பு)

வெள்ளம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறியவர்களின் வீட்டில் திருடிய 15 நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு வடக்கு பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன இதனை தெரிவித்தார்.

இத்தகையவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக்க வேண்டும் எனவும் அனர்த்தங்களுக்கு உட்பட்ட பொது மக்களின் சொத்துக்களைப் பாதுகாக்க விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கேகாலையில் மண்சரிவு அபாயம் ஆயிரத்து 315பேர் வெளியேற்றம்

தெஹியோவிற்ற டெனிஸ்வர்த் தோட்டம், புளத்கோபிடிய கருப்பான தோட்டம், அரநாயக்க சிரிபுர பகுதியில் ஏற்பட்ட பாரிய மண்சரிவினை தொடர்ந்து சீரற்ற காலநிலை காரணமாக கேகாலை மாவட்டத்தில் பல தோட்டங்களிலும் மண்சரிவு அபாயம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த வகையில் கேகாலை மாவட்டத்தில் எட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அலுகொல்ல தோட்டம், கிரிபோருவ தோட்டம், லைவன்ட் கீழ்பிரிவு, லைவன்ட் மேல்பிரிவு மற்றும் பூனுகல தோட்டமும், புளத்கோபிடிய பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கருப்பான தோட்டமும், கேகாலை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அட்டாளை பிந்தெனிய தோட்டமும், ருவன்வெல்ல பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட முள்ளுகாமம் தோட்டமும், தெஹியோவிற்ற பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அம்பா இறப்பர் தோட்டமும், யோகம, பட்டாங்கல, டெனிஸ்வர்த், ஈரியகொல்ல ஆகிய தோட்டங்களும் மண்சரிவு அபாயத்தில் இருப்பதாக தோட்ட நிர்வாகத்தினால் அறிவிக்கப்பட்டதையடுத்து ஆயிரத்து 315 பேர் நேற்று பாதுகாப்பாக பாடசாலைகளிலும் கோயில்களிலும் சிறுவர் முன்பள்ளி நிலையங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (இ-5)

# பாரிய பாறை நகர்வு; 101 பேர் இடப்பெயர்வு

தெல்தொட்ட பிரதேச செயலகத்திற்குட்பட்ட பட்டியகம பிரதேசத்தில் நேற்றுக் காலை பாரிய பாறைகள் நகர்வு காரணமாக 26 குடும்பங்களை சேர்ந்த 101 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.



இடம்பெயர்ந்த மக்கள் தெல்தொட்ட மலைமகள் இந்து கல்லூரியில் குடியமர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்க படுகின்றது.

இந்த மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் தங்குமிட வசதிகள் என்பவற்றுக்கான ஒழுங்குகள் பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவினரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-5)

# சுவீகரிப்புக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம்





யாழ்.பொலிகண்டி கிழக்கு குப்பிழியில் உள்ள கடற்றொழிலாளர்கள் பகுதி நிறுத்தும் இடத்தினை சுவீகரிப்பு செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடற்றொழில் பிரதேசங்களை சுவீகரிப்பு செய்வதற்கு எதிரான கவனயீர்ப்பு போராட்டம் எனத் தெரிவித்து பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கத்தினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பொலிகண்டி ஆலடிப் பகுதியில் இக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

கடற்றொழில் சங்கத்தினர், கடற்றொழிலாளர்கள், சமாசத்தினர் உட்பட ஆண்கள் பெண்கள் என நூற்றுக் கணக்கானோர் இக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.


இதில் வட மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன், பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனும் பங்கெடுத்திருந்தனர்.

இக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் எம் மண்ணில் எமது தொழில் உபகரணங்களை பாதுகாப்பாகநிறுத்திவைப்பதற்கு இடம் இல்லையா?, அரச அதிகாரிகளே மீனவ சமூகத்தை ஒதுக்காதீர், மீனவர்களுக்கு கடல் மட்டும்தான்சொந்தமா? போன்ற வாசகங்களை தாங்கியிருந்தனர். (இ-60)

### யூசுப்பின் துடுப்பாட்டமும் சுழல்பந்தாளர்களும் கைகொடுக்க

# பிளே ஓப் சுற்றில் கொல்கத்தா

சொந்த மண் அனுபவமும், சுழல் பந்துவீச்சாளர்களின் அசத்தலான சுழலும் கைகொடுக்க சன்ரைசர்ஸ் அணிக்கு எதிரான தீர்மானமிக்க போட்டியில் 22 ஓட்டங்களால் வெற்றி பெற்ற கொல்கத்தா அணி பிளே ஓப் சுற்றுக்கு ஜோராக முன்னேறியது.



இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல்., லீக் தொடர் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இத்தொடரின் 55ஆவது லீக் போட்டி நேற்று நடைபெற்றது.

இப்போட்டியில் கொல்கத்தா அணி, சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை கொல்கத்தாவில் சந்தித்தது.

இப்போட்டியானது கொல்கத்தா அணிக்கு முக்கியம் வாய்ந்த போட்டியாக அமைந்தது.

ஏனெனில் இப்போட்டியில் வெற்றி பெற்றால் மாத்திரமே கொல்கத்தா அணி பிளே ஓப் சுற்றுக்கு தகுதி பெற முடியும். மறுபுறம் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி ஏலவே பிளே ஓப் சுற்றுக்கு தகுதி பெற்றிருந்ததால் அந்த அணிக்கு போட்டியின் முடிவு பாதிப்பை ஏற்படுத்தாது.

இத்தகைய சூழ்நிலைகளின் மத்தியில், நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சன்ரைசர்ஸ் அணித் தலைவர் வோர்னர் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதன்படி கொல்கத்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

**யூசுப் விளாசல்**


கொல்கத்தா அணிக்கு உத்தப்பா (25) அதிரடி ஆரம்பம் கொடுத்தார். ஹூடா 'சுழலில்' அணித் தலைவர் காம்பிர் (16), முன்ரோ (10) சிக்கினர். பின் இணைந்த மணிஷ் பாண்டே- யூசுப் பதான் ஜோடி அதி விரைவாக ஓட்டங்களைக் குவித்தது. கரண் சர்மா பந்துவீச்சில் தொடர்ந்து 2 சிக்ஸர்கள் அடித்த மணிஷ் பாண்டே 48 ஓட்டங்களுடன் வெளியேறினார். யூசுப் பதான் (52*) அரை சதம் கடந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் கொல்கத்தா அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் சன்ரைசர்ஸ் அணி சார்பில் புவ்னேஸ்வர் குமார், தீபக் ஹூடா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**சுழல் ஜாலம்**

172 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு கொல்கத்தாவின் சுழல் பந்து வீச்சாளர்கள் தொல்லை கொடுத்தனர்.



நரைன் பந்துவீச்சில் அணித் தலைவர் வோர்னர் (18), நமன் ஓஜா (15) சிக்கினர். அதிரடி வீரர் யுவ்ராஜ் 12 பந்துகளில் 19 ஓட்டங்கள் எடுத்தார். குல்தீப் சுழலில் வீல்லியம்சன் (7) ஆட்டமிழந்தார். தவான் (51) அரைச்சதம் கடந்து ஆறுதல் கொடுத்தார். மற்றையவர்கள் விரைவில் திரும்ப,

ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்கள் எடுத்து 22 ஓட்டங்களால் கொல்கத்தாவிடம் வீழ்ந்தது.

பந்துவீச்சில் கொல்கத்தா அணி சார்பில் சிறப்பாக பந்துவீசிய நரைன் 4 ஓவர்களில் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் குல்டிப் யாதவ் 28 ஓட்டங்களுக்கு 2 வக்கெட்டுக்களையும் கைப்பற்றினா.

போட்டியின் ஆட்ட நாயகனாக கொல்கத்தா அணியின் யூசுப் பதான் தெரிவானார்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி, சன்ரைசர்ஸ் அணியுடன் இணைந்து (16 புள்ளிகள்) 'பிளே-ஓப்' சுற்றுக்கு தகுதி பெற்றது.

### எப்.ஏ கிண்ண கால்பந்து

## மன்செஸ்டர் யுனைரெட் சம்பியன்



எப்.ஏ கிண்ண உதைபந்தாட்ட தொடரில் மான்செஸ்டர் யுனைரெட் அணி சம்பியனாகியது.

இறுதிப் போட்டியில் கிறிஸ்டல் பேலஸ் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியே மன்செஸ்டர் யுனைரெட் அணி சம்பியன் பட்டம் வென்றது.

இங்கிலாந்தில் கழக மட்டத்திலான பிரிமியர் லீக் போட்டிகள் பிரபலம் வாய்ந்தது. 2015-16 பருவகாலத்துக்கான போட்டியில் 20 அணிகள் பங்கேற்றன.

இங்கிலாந்தின் பல்வேறு பகுதியில் பிரிமியர் லீக் உதைபந்து தொடர் நடந்தது. இதில் வெம்ப்லி நகரில் நடைபெற்ற இறுதி போட்டியில் கிறிஸ்டல் பேலஸ்- மான்செஸ்டர் யுனைடெட் அணிகள் மோதின.

ஆட்டத்தின் முதல் பாதி முடிவில இரு அணிகளும் ஏதும் கோல் அடிக்கவில்லை. இரண்டாவது பாதியின் 78ஆவது நிமிடத்தில் கிறிஸ்டல் போலஸ் அணி வீரர் ஜேசன் கோல் அடித்தார்.

இதன்மூலம் கிறிஸ்டல் பேலஸ் அணி முன்னிலை பெற் றது. இதற்கு பதிலடியாக 81ஆவது நிமிடத்தில் மான்செஸ்டர் யுனை ரெட் அணி வீரர் ஜுவான் மாட்ரா கோல் அடித்து போட்டியை சமன் செய்தார்.

ஆட்டத்தின் இறுதிகட்டத்தில் இரு அணிகளுக்கும் இடையேயான போட்டி கடுமையான நிலையில், 110 நிமிடத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணி வீரர் ஜெசி லின்கார்ட் கோல் அடித்து மன்செஸ்டர் ரசிகர்களுக்கு உற்சாகம் அளித்தார்

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியின் முடிவில் மான்செஸ்டர் யுனைரெட் அணி 2-1 கோல் கணக்கில் வெற்றி பெற்று எப்.ஏ கிண்ணத்தை கைப்பற்றியது.

24 ஆண்டுகளுக்கு பிறகு மன்செஸ்டர் அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.




### விராட் ஹோலி சுப்பர் போர்ம்

## டில்லியை தெறிக்கவிட்டது பெங்களூர்

சுப்பர் 'போர்மில் இருக்கும் விராட் ஹோலி, தனது அசத்தலான துடுப்பாட்ட திறமையால் பெங்களூரு அணியை ஐ.பி.எல்., தொடரின் 'பிளே-ஓப்' சுற்றுக்கு சுலபமாக அழைத்துச் சென்றார்.

சட்டீஸ்கர் தலைநகர் ராய்ப்பூரில் நேற்று நடந்த 9ஆவது ஐ.பி.எல்., தொடருக்கான கடைசி லீக் போட்டியில் (56) டில்லி - பெங்களூர் அணிகள் மோதின.



நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

**குயின்டன் அரைச் சதம்**

டில்லி அணிக்கு ரிஷாப் (1) மோசமான ஆரம்பம் கொடுத்தார். யுவேந்திரா சாகல் 'சுழலில்' கருண் நாயர் (11), சஞ்சு சாம்சன் (17) சிக்கினர். பில்லிங்ஸ் (4), பவான் நேகி (6), பிராத்வெய்ட் (1) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். பொறுப்பாக ஆடிய குயின்ரன் டி ஹொக் (60) அரைசதம் கடந்தார். கிறிஸ் மோரிஸ் ஓரளவு கைகொடுக்க, டில்லி அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்கள் எடுத்தது.

மோரிஸ் (27) ஆட்டமிழக்காமல் இருந்தார். பெங்களூர் சார்பில் சாகல் 3, ஹெய்ல் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**ஹோலி அபாரம்**

சுலப இலக்கை விரட்டிய பெங்களூர் அணிக்கு கிறிஸ் ஹெய்ல் (1), டி வில்லியர்ஸ் (6) ஏமாற்றினர். பின் இணைந்த அணித் தலைவர் ஹோலி, லோகேஷ் ராகுல் ஜோடி பொறுப்பாக விளையாடியது. மூன்றாவது விக்கெட்டுக்கு 66 ஓட்டங்கள் சேர்த்தபோது லோகேஷ் (38) ஆட்டமிழந்தார். வோட்சன் (14) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய அணித் தலைவர் ஹோலி அரைச்சதம் கடந்தார். பெங்களூர் அணி 18.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 139 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஹோலி (54), ஸ்ரூவேர்ட் பின்னி (16) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் பெங்களூர் அணி 16 புள்ளிகளுடன் 'பிளே-ஓப்' சுற்றுக்கு முன்னேறியது. ஜாகிர் கானின் டில்லி அணி வெளியேறியது.

போட்டியின் ஆட்டநாயகனாக பெங்களூரின் விராட் ஹோலி தெரிவானார்.

லீக் சுற்றின் முடிவில் குஜராத் (18 புள்ளி), பெங்களூர் (16), ஹைதராபாத் (16), கொல்கத்தா (16) அணிகள் முறையே முதல் நான்கு இடங்களை பிடித்தன.

நாளை பெங்களூருவில் நடக்கவுள்ள தகுதிச் சுற்று-1இல் முதலிரண்டு இடங்களை பிடித்த குஜராத் பெங்களூர் அணிகள் மோது கின்றன. மே 25ல் 25ல் டில்லியில் நடக்கவுள்ள 'எலிமினேட்டர்' போட்டியில் 3, 4ஆவது இடங்களை பிடித்த ஹைதராபாத், கொல்கத்தா அணிகள் விளையாடுகின்றன. தகுதிச் சுற்று - 2 டில்லியில் வரும் மே 27ல் நடக்கவுள்ளது. இறுதிப் போட்டி மே 29ல் பெங்களூருவில் நடக்கும்.



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் கிவிடோவா 6:2, 4:6, 7:5 என்ற கணக்கில் டன்கா கோவினிக்கை வீழ்த்தினார்.

## சிரமதானப்பணி

வயாவிளான் மானம்பராய் பிள்ளையார் ஆலயத்தில் சிரமதான நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெறும். ஆலயத்தைச் சூழவுள்ள பகுதியை துப்புரவாக்க படையினர் அனுமதியளித்துள்ளனர்.

எனவே இதில் அனைவரையும் பங்கேற்குமாறு வயாவிளான் மானம்பராய் பிள்ளையார் ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (இ-7)



நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக கேகாலை மாவட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தம் போன்றவற்றால் அரநாயக்க என்ற பிரதேசத்தில் வீடுகள் தரைமட்டமாகின. இதன்போது தான் வாழ்ந்த வீடு தரைமட்டமான இடத்திற்கு நாய் ஒன்று வந்துள்ளது.

## பிக்குகளின் பாதுகாப்பு நாட்டுக்கே அவசியம்

### மகிந்த தெரிவிப்பு



பௌத்த பிக்குகளின் பாதுகாப்பு தனக்கு அல்ல நாட்டுக்கே அவசியமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது பிக்குகளின் எண்ணிக்கை குறைவாக காணப்படுகின்றது எனவும் தனது பாதுகாப்புக்காக பிக்குகள் முன்வந்தமைக்கு பாராட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ரன்ன பிரதேசத்தில் விகாரையொன்றில் இடம்பெற்ற பௌத்த மத நடவடிக்கையின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார். (இ-5)

# விழிநீர் சொரியும் இரண்டாம் ஆண்டின் நினைவலைகள்

## அமரர் சண்முகலிங்கம் புஸ்பலீலா (புஸ்பா)

தோற்றம்: 26.10.1962

மறைவு:- 14.06.2014





திதி: அபரபக்க துவாதசி

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
உன்னுடன் வாழ்ந்த காலங்கள் என்
நினைவை விட்டு அகலுவதில்லை
அன்றில் பறவைகள் போன்று
வாழ்ந்த நம் வீட்டில்
இன்று கருநாகம் குடிபுகுந்து ஆட்சி
செய்ய நினைக்கின்றதே
யாரிடம் என் குறையைச் சொல்ல யார்
வந்து என்னை தேற்றுவார்
நீ போனாலும் போனாய் உன்னுடன் என்
நிம்மதியான வாழ்வும்
தொலைந்து போனதே.

இல. 02, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி.

என்றும் உன் பாசமிகு கணவன்
அருணாசலம் சண்முகலிங்கம் (குமார்)

(சி-4744)

## இராசி பலன்

23.05.2016

(வைகாசி 10, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
துதியை பின்னிரவு 5.26 மணிவரை
கேட்டை முன்னிரவு 11.26 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
வற்றாப்பளை கண்ணகியம்மை பொங்கல்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி சுக் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கார்த்திகை, ரோகினி இரவு 11.36ற்கு தனு-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி சந் செவ் | | |

**மீனம்:** சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும், புதிய முயற்சியில் உத்வேகம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்.

**மேடம்:** தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம்,எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக முயற்சி எடுக்கும் சூழ்நிலை உருவாகும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**இடபம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** வியாபார விருத்தியுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கௌரவமான நாள்.

**கும்பம்:** அருமையான நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், கட்டடப்பணிகளை தொடரும் எண்ணம் உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழும் நாள்.

**கடகம்:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்:** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியான நாள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**தனுசு:** தொழில் நலன்கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்:** தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது, புத்தி சாதுரியமாக நடந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள், தொழில் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், போசனசுகமுண்டு.

# முகாம்களில் வாழும் மக்களுக்கு பூமிதானம் செய்ய முன்வாருங்கள்

## சைவ மகா சபை கோரிக்கை

முகாம்களில் வாழும் காணிகள் அற்ற மக்களுக்கு பூமி தானம் செய்ய புலம்பெயர்ந்தவர்கள், ஆலய பரிபாலன சபைகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் முன்வர வேண்டும் என அகில இலங்கை சைவ மகாசபை கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கில் வீடுகள் அற்ற மக்களுக்கு அரசினாலும் பல தொண்டு நிறுவனங்கள் ஊடாகவும் பல்வேறு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றில் அதிகமாக மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு வழங்கப்படுவதற்கான தெரிவுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் குறிப்பாக நலன்புரி முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தற்காலிகமாக தங்கியுள்ளனர். இவர்களில் பல குடும்பங்களுக்கு சொந்தமாக காணிகள் இல்லை. தொடர்ச்சியாக இவர்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்த வண்ணம் உள்ளனர். உதாரணமாக இயற்கை அனர்த்தங்களின் போது சுகாதார சீர்கேடுகளினால் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.


காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் குறித்த பகுதிகளில் அவர்களுக்கு தற்போது சொந்தமாக காணி இல்லாத நிலை காணப்படுவதால் அரசினால் வழங்கப்படும் இலவச திட்டங்களை இழக்கும் நிலையில் உள்ளார்கள்.

எனவே பல ஆண்டு காலமாக எமது மக்கள் அனுபவித்து வந்த துயர வாழ்க்கையில் இருந்து அவர்களை விடுவிக்க மக்கள் பிரதிநிதிகள் புலம்பெயர்ந்தவர்கள். சமய பிரதிநிதிகள் முன்வர வேண்டும். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் புலம்பெயர்ந்தவர்களுக்கு அதிகளவான காணிகள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் முடிந்தளவு பூமிதானம் வழங்குவதற்கு முன்வாருங்கள். இதன்மூலம் அவர்கள் வீட்டுத் திட்டத்தை பெற்று தமது வாழ்வை முன்னேற்றுவதற்கு பேருதவியாக இருக்கும்.

காணிகள் அற்று அல்லலுறும் மக்களுக்கு கலை கலாசாரங்கள் பற்றி பேசுவோர் குறித்த காணிகளை மக்களுக்கு வழங்குவதற்கான முயற்சிகளை எடுத்து கலாசாரச் சீரழிவுகளை தடுப்பதற்கும் எமது மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும் உதவி செய்ய வேண்டும் .காணிகள் அற்ற மக்களின் விபரங்கள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு சைவ மகாசபையின் தலைவர் சிவத்திரு எஸ். சோதி மூர்த்தியுடன் 0770204148 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# உயிரைக் குடிக்கக் காத்திருக்கும் பாதுகாப்பற்ற கிணறுகள்





வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் தற்போதும் பாதுகாப்பற்ற கிணறுகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு காணப்படும் கிணறுகள் மேற்கட்டு இன்றி நில மட்டத்துடன் காணப்படுவதுடன் அண்மையில் பெய்த மழை காரணமாக நீர் நிறைந்து காணப்படுகின்றது.

வடமராட்சிப் பகுதிகளில் பட்டம் விடச் சென்ற சிறுவர்கள் பாதுகாப்பற்ற கிணறுகளில் வீழ்ந்து மரணமடைந்தமையினை அடுத்து பருத்தித்துறை பிரதேச சபையினரால் பாதுகாப்பற்ற கிணறுகள் வேலி அடைத்து பாதுகாக்கப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இதனையடுத்து சில இடங்களில் உள்ள பாதுகாப்பற்ற கிணறுகளுக்கு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சில இடங்களில் உள்ள கிணறுகள் பாதுகாக்கப்படாது காணப்படுகிறது. புலோலி- கொடிகாமம் வீதியில் உள்ள புளியங்கியான் என்னும் இடத்தில் வீதிக்கு அருகாமையில் நீர் நிரம்பிய நிலையில் கிணறு ஒன்று காணப்படுகிறது.

இதேபோன்று குடத்தனைப் பகுதியிலும் இரண்டு கிணறுகள் காணப்படுகின்றன.

பருத்தித்துறை -மருதங்கேணி வீதியில் குடத்தனைச் சந்திக்கும் ஆறாம் கட்டைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் நீர்நிறைந்த நிலையில் நிலமட்டக்கிணறு ஒன்று காணப்படுகிறது. மேலும் குடத்தனைச் சந்திக்கும் அம்பன் எல்லைக்கும் இடைப்பட்ட பகுதியிலும் இவ்வாறான பாதுகாப்பற்ற கிணறு ஒன்று காணப்படுகின்றது.


இவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் உயிர் குடிக்கக் காத்திருக்கும் கிணறுகளை பாதுகாப்பானதாக மாற்றுவதற்கு காணி உரிமையாளர்களும் அதிகாரிகளும் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-60)

# இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் ஆட்டோக்களில் மீற்றர் அவசியம்

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் ஆட்டோக்கள் அனைத்தும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக கட்டண மீற்றர் மானி பொருத்தப்பட வேண்டும் என யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபருடன் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. கட்டணங்கள் விபரம் பின்வருமாறு:-

ஆரம்பக் கட்டணம் 70/= வாகவும் அடுத்து வரும் கி.மீ. 50 ரூபாவாகவும் தாமதக் கட்டணம்2ரூபாவாகவும்வாடகை ஏற்றி திரும்பிவரும் கி.மீ.20 ரூபாவாகவும் தீர்மானிக்கப்பட்டது. 18.05.2016 இல் யாழ்.அரசஅதிபருடன்ஆட்டோ சேவைச்சங்கம் கலந்துரையாடல் நடைபெற்றது. மீற்றர் மானி பொருத்தப்படாத ஆட்டோக்களை யாழ். மாவட்ட செயலகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புப்பிரிவு மற்றும் மோட்டார் போக்குவரத்து பரிசோதகர் மற்றும் பொலிஸார் இணைந்து சட்ட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டது. எனவே இதனைக்கருத்தில் கொண்டு அனைத்து ஆட்டோ உரிமையாளர்களும் சங்கத்தினூடாக மீற்றர் மானியைப் பொருத்துமாறு சங்கம் அறிவித்துள்ளது. (இ-5)



யாழ்.பாதுகாப்புத்படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் யாழ்.நூலக திறந்த வெளி அரங்கில் வெசாக் பண்டிகையை முன்னிட்டு வெசாக் கூடுகள் மற்றும் அன்னதான நிகழ்வுகள் நடை பெற்றன.இதில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கலந்து கொண்டு அன்னதான நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

(படங்கள்: கு.கஜரூபன்)

# அரநாயக்கவில் மீட்புப்பணிகளை இராணுவம் நேற்றுடன் நிறுத்தியது

## 141 பேரின் கதி என்னவென தெரியவில்லை

(கொழும்பு)

கேகாலை மாவட்டத்தில் உள்ள அரநாயக்க பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் புதைந்து போன மூன்று கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த தேடுதலை இராணுவம் நேற்றுடன் நிறுத்தியுள்ளது. அரநாயக்க பகுதியில், ஏற்பட்ட நிலச்சரிவினால், மூன்று கிராமங்களின் பெரும்பாலான பகுதிகள் புதைந்து போயுள்ளன. அங்கிருந்த 141 பேரின் கதி இன்னமும் தெரியாதுள்ளது. இவர்கள் நிலத்தில் புதைந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.



இனிமேலும் இவர்களை உயிருடன் மீட்கும் வாய்ப்புகள் இல்லை என்பதாலும், மீட்புப் பணிகளுக்குச் சாதகமான காலநிலை இல்லை என்பதாலும், மீட்புப்பணிகளைக் கைவிட இராணுவம் முடிவு செய்துள்ளது.

நிலச்சரிவு ஏற்பட்ட மூன்று கிராமங்களின் பெரும்பாலான பகுதிகள், சுமார் 5 தொடக்கம், 15 அடி வரையிலான சேற்று மண்ணினால் மூடப்பட்டுள்ளன.

இதனை முற்றாக அகற்றி மீட்புப்பணிகளை முன்னெடுப்பது சாத்தியமற்றது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, நிலச்சரிவு மீட்புப்பணிகளில் இருந்து விலக்கப்பட்ட இராணுவத்தினரை, பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி மற்றும் நிவாரணப்பணிகளில் ஈடுபடுமாறு இராணுவத்தளபதி உத்தர விட்டுள்ளார். (இ-5)

## புலத்கொஹூபிட்டியவில் மீட்பு நடவடிக்கை முடிவு



மண்சரிவு அனர்த்தத்தில் கேகாலை, புலத்கொஹூபிட்டிய பிரதேசத்தில் காணாமற்போனவர்களைத் தேடும் இராணுவ நடவடிக்கை நிறைவடைந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்தத்தில் இப்பிரதேசத்தில் 16 பேர் காணாமற்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதில் 14 பேருடைய சடலங்கள் மீட்கப்பட்டன. இன்னும், 2 பேருடைய உடல் பாகங்கள் கண்டெடுக்கப்படவில்லை.

இதனால், இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த இராணுவ தேடல் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாகவும், ஏனைய பிரதேசங்களில் இன்னும் இந்நடவடிக்கை தொடர்வதாகவும் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ-5)


## புதிய மாணவர்களுக்கான அனுமதி

யாழ்.விஷனின் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு அறநெறிப் பாடங்களான சமயம், தேவாரப் வகுப்பு, கைவேலை (சித்திரம், தோரணம், கோலம்) யோகாசனம், நடனம், வயலின், மிருதங்கம் ஆகிய வகுப்புக்கள் இலவசமாக கற்பிக்கப்படுகின்றன.

வெள்ளிக்கிழமை 4 மணி தொடக்கம் 6 மணி வரை தேவார வகுப்புக்களும் ஞாயிற் றுக்கிழமைகளில் 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை ஏனைய அறநெறி வகுப்புக் களும் நுண்கலை வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (மதிய போசனம் வழங்கப்படும்)

ஏனைய நாட்கள் 3.45 மணி தொடக்கம் 6 மணிவரை தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகிறது.

இவை அனைத்தும் முற்றிலும் இலவசமாக நடைபெற்று வருகின்றது.

**தொடர்புகளுக்கு**

யாழ்.விஷன்,
கிருஷ்ணா அறநெறிப்பாடசாலை,
இல.19, கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொலைபேசி இலக்கம்
021 221 2255
021 720 0719

(C-4668)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா:98செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/வங்கி முகாமையாளர்<br>தொ.இ: B/5849 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 62செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/5885 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 5<br>தகைமை/தொழில்:O/Lபிரான்ஸ் PR<br>தொ.இ: B/5851 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 12செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5887 |
| பிறப்பு: 1984RC<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/5852 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 30<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/5893 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 53செவ் 1 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:QS/கட்டார்<br>தொ.இ: B/5853 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 26<br>செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:BBA/கணக்காளர்<br>தொ.இ: G/5895 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

# முள்ளிவாய்க்கால் நினைவுநாள் நிகழ்வைக்கூட ஒன்றாக இணைந்து கொண்டாட முடியவில்லை

## கவிஞர் பொன்காந்தன் சுட்டிக்காட்டு



(மல்லாவி)

முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வைக் கூட ஒன்றாக இணைந்து கொண்டாட முடியவில்லை என கவிஞர் பொன்.காந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான ரெலோ அமைப்பின் கட்சி அலுவலகம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் ரெலோ அமைப்பின் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனினால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வு கவிஞர் பொன்.காந்தன் தலைமையில் நடைபெற்றது.இந் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் மக்கள் அதிகளவில் படுகொலை செய்யப்பட்ட இடமான முள்ளிவாய்க்கால் பகுதியில், கடந்த சில தினங்களிற்கு முன்னர் முள்ளிவாய்க்கால் நினைவு தினமாக உலக வாழ் தமிழர்கள் அனுஷ்டித்தனர்.

ஆனால் முள்ளிவாய்க்கால் பகுதியில் நான்கு இடங்களில் வெவ்வேறாக இந் நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டமை தமிழ் அரசியல் தலைமைகளின் ஒற்றுமையை கேள்விக்குள்ளாக்கியதாக அவர் குறிப்பிட்டார்.

ஒரே நாளில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை காவு கொண்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கூட எம்மால் ஒற்றுமையாக அனுஷ்டிக்க முடியவில்லை என்பதையிட்டு அனைவரும் வெட்கப்பட வேண்டும்.

நான்கு பகுதிகளில் விளக்கேற்றி நினைவேந்தல் செய்யப்பட்டமையானது எமது தமிழ் அரசியல் தலைமைகளின் ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவித்த அவர், குறித்த நிகழ்வுகளையாவது அனைத்து தமிழ் சமூகமும் ஒற்றுமையுடன் அனுஷ்டிக்க முடியாமையை இட்டு நாம் வெட்கப்பட்டே ஆகவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலைமைகள் மாறி தமிழ் மக்களின் உரிமைகளையும், மரபுகளையும் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபடவேண்டிய காலம் இது. இந்நிலையிலேயே கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் தேர்தல் காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் நிலவுவதாக அவர் குறிப்பிட்டார்.

மாவட்டத்தில் தேர்தல்காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையே தொடர்ந்தும் காணப்படுவதாகவும், அவ்வாறான நிலையை மாற்றி மக்களின் தேவைகளை ஈடு செய்யும் வகையில் இவ்வலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் நான்கு இடங்களில் நினைவேந்தல் இடம்பெற்றது போலல்லாது, கிளிநொச்சி மாவட்டத்தின் உள்ளூர் கட்டமைப்புகள் சீர் செய்யப்பட்டு மக்களின் வாழ்வுக்கு ஏற்ற விதமாய் மாற்றி கொடுக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய அடைக்கலநாதன் குறிப்பிடுகையில்,

கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்டம் பல்வேறுமட்ட வெளிநாட்டு பிரதிநிதிகளின் கவனத்தில் இருந்ததாகவும், எந்தவொரு வெளிநாட்டு முக்கியஸ்தரும் வருகை தந்த பெருமை கிளிநொச்சி மாவட்டத்திற்கே உரியது. கிளிநொச்சி விஜயத்தின் பின்னரே கொழும்பிற்கு செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் இன்றைய நிலையில் கிளிநொச்சி மாவட்டம் எவராலும் கண்டு கொள்ளாத மாவட்டமாக மாறியுள்ளது.

இன்று கிளிநொச்சி மாவட்டம் பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வலுவலகம் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு தேவைகளையும், மக்களின் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க முடியும் என்ற எதிர்பார்ப்பு உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிவம் அறக்கட்டளை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 100 மாற்று திறனாளிகளிற்கு உதவி பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)




## வவுனியாவில் இரு தினங்கள் மாபெரும் தொழிற்சந்தை

( வவுனியா)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகம் எதிர்வரும் மே 27, 28 ஆம் திகதிகளில் மாபெரும் தொழிற்சந்தை ஒன்றை பம்பை மடுவிலுள்ள வவுனியா வளாகத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், ஆடை தொழிற்சாலை நிறுவனங்கள் மற்றும் உயர்கல்வி, தொழில்சார் கற்கை, தொழில் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் உட்பட 30இற்கு மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன.

இந்நிறுவனங்கள் தமக்கு தேவையான தொழில் வல்லுநர்களை பல்வேறு துறைகளில் நேரடியாக தெரிவு செய்து வேலை வாய்ப்புக்களை வழங்கவுள்ளன.

இவ் வேலை வாய்ப்புக்கள் பல்வேறு தகைமையுடையவர்களுக்கும் ஏற்ற வகையில் இருக்கும் இந்நிகழ்வானது 27 ஆம் திகதி அனைத்து பல்கலைக்கழக பட்டதாரிகள் மற்றும் இறுதியாண்டு மாணவர்களுக்காகவும் 28 ஆம் திகதி அனைத்து வேலை தேடுபவர்களுக்காகவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் இலவச தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் இரண்டு நாட்களும் இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வுகள் இரு நாட்களும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இடம்பெறும்.

அத்துடன் இந் நிகழ்வுக்கு பல நிறுவனங்கள் கலந்து கொள்ளவிருப்பதால் வருகை தருபவர்கள் தமது சுய விபரக் கோவையின் பல பிரதிகளை எடுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இது தவிர இந் நிகழ்விற்கு நேர காலத்துடன் வருகை தந்து கலந்து கொள்வதன் மூலம் தாம் தெரிவு செய்யப்படாத ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளும் படியும் கேட்கப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கு 077 844 3891 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## கிளிநொச்சியிலிருந்து வற்றாப்பளைக்கு விசேட பேருந்துச் சேவை

வற்றாப்பளை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று நடைபெறுகின்றது.

இதனையொட்டி கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இன்று கிளிநொச்சி இ.போ.ச. சாலையினால் விசேட பேருந்துச் சேவை நடைபெறும் என கிளிநொச்சி இ.போ.ச. சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (2)

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 444 குடும்பங்களுக்கு நிவாரணப்பொதிகள்




( பரந்தன்)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுடன் இணைந்து பரந்தன் ஒன்றியம் நிவாரப்பணியினை ஆரம்பித்துள்ளது

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணியை, முன்னெடுத்த சுவிஸ் நாட்டை தளமாக கொண்டு புலம்பெயர் தமிழ் மக்களின் நிதி அனுசரணையுடனும் பரந்தனில் உள்ள செயற்குழுவுடன் இயங்கும் பரந்தன் ஒன்றியம் 444 குடும்பங்களுக்கு நிவாரணப்பொதிகளை நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

பரந்தன் பகுதியை அண்மித்துள்ள காஞ்சிபுரம் கிராமத்தில் வசிக்கும் 94 குடும்பங்களுக்கும் குமரபுரம் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 230 குடும்பங்களுக்கும் உருத்திரபுரம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் 120 குடும்பங்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுடன் இணைந்து வழங்கி வைத்துள்ளனர்

இவ் நிவாரணப்பணியில் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள்,கிராம சேவையாளர்கள், பரந்தன் ஒன்றிய நிர்வாகத்தினர்,மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312)



வெசாக் பண்டிகை நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாக கிளி/ மத்திய மகா வித்தியாலயத்தில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வெசாக் தோரணைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதனைவிட பொலிஸ் நிலையம், அரச திணைக்களங்கள் எனப் பல இடங்களிலும் வெசாக் தோரணைகள்

# நிறுத்தல் அளவை கருவிகள் சீரான நிறையை காட்டுவதில்லை

## நுகர்வோர் கவலை



கிளிநொச்சி பொதுச் சந்தையில் வியாபாரிகளினால் நிறுவைக்கு பயன்படுத்தப்படும் தராசுகள், படிகள் என்பன சரியான எடைகளை காட்டவில்லையென பொதுமக்கள், நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர்.

படி கற்களுக்கு பதிலாக ரேசர்கள் வேறு பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் தாம் கொள்வனவு செய்யும் பொருட்களின் நிறைகுறைவாக இருப்பதாக நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.


இவ்விடயம் தொடர்பில் கரைச்சி பிரதேச சபை செயலாளரின் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு சென்ற போதிலும் அவர்கள் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் நுகர்வோர் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. தமது வருமான வரியில் மட்டும் அக்கறை செலுத்தும் பிரதேச சபையினர் மக்களின் நலனில் அக்கறை செலுத்தாதது ஏன்? என கேள்வி எழுப்புகின்றனர்.

நுகர்வோர் தொடர்ந்தும் பாதிக்காதவாறு நிறுத்தளவை கருவிகளை உரிய முறையில் சீரமைக்கும் நடவடிக்கையை பிரதேச சபை செயலாளர் எடுக்க வேண்டுமென அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை நுகர்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடு செய்யும் வகையில் கிளிநொச்சியில் அலுவலகம் ஒன்றினை அமைத்துத்தர கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மாவட்டத்தில் இவ்வாறு நுகர்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் சம்பந்தப்பட்டவர்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

# ஆபத்தான நிலையில் இரு பாலங்கள்



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அருகில் காணான் ஜெப ஆலய வீதியில் அமைக்கப்பட்டு ஒரு மாதமும் பூர்த்தியாகாத நிலையில் உள்ள இரண்டு பாலங்கள் ஆபத்தான நிலையில் காணப்படுவதாவும் அதனை விரைவாக புனரமைத்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் கொட்டித் தீர்த்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் குறித்த இரு பாலங்களைச் சுற்றியும் மண் அடித்துச் செல்லப்பட்டு பாலம் மட்டும் நிலத்தின் பக்க பிடிப்பு அற்ற நிலையில் காணப்படுகிறது.

இதன் ஊடாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்பட்டு வருகிறது. தொடர்ச்சியாக பாலம் இவ்வாறு காணப்படின் உடைந்து விழும் என பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-312)

# புதறிகுடா குளத்திற்கு அருகில் வயோதிபரின் சடலம் மீட்கப்பட்டது

முல்லைத்தீவு முள்ளியவளை 4 ஆம் வட்டாரம் புதறிகுடா குளத்திற்கு அருகில் நேற்று முற்பகல் 11 மணியளவில் வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பிரஸ்தாப நபரின் பையினுள் இருந்த வங்கி புத்தகத்தின்படி யாழ்ப்பாணம் நெல்லியடியைச் சேர்ந்த ரி.எஸ். சிவபாதன் (வயது-74) என அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த சடலம் முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. உறவினர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-310)







முல்லைத்தீவு மாவட்டத்தின் வன்னி விளாங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் அண்மையில் இடம்பெற்ற போது...


(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# மன்னார் நகர அபிவிருத்தி பணி மந்த கதியில்

# அரைகுறையான கல்வெட்டுக்களை பூரணப்படுத்தி வீதியை விரைந்து திருத்தி அமைக்க கோரிக்கை

(பனிக்கன்குளம்)

மன்னாரில் இடம்பெற்று வருகின்ற நகர அபிவிருத்தி பணிகள் மந்த கதியில் இடம் பெற்று வருவதாகவும், இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் அம்மாவட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மன்னார் பொலிஸ் நிலைய பிரதான வீதியில் இருந்து மன்னார் பொதுவைத்தியசாலை வரை பாரிய மூன்று கல்வெட்டுக்கள் அமைக்கப்பட்டு வருகின்ற போதும், குறித்த வேலைத்திட்டங்கள் பல மாதங்களாக மந்தகதியில் இடம்பெற்று வருவதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.



வீதிஅபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியோடு யுனொப்ஸ் அமைப்பின் நிதியுதவியுடன் குறித்த அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாரிய கல்வெட்டுக்கள் அமைக்கும் பணி தற்போது இடம்பெற்று வருகின்றது. மன்னார் பொலிஸ் நிலையம் முன்பாகவும் டெலிகொம் சந்தி மற்றும் வைத்தியசாலை பிரதான வீதி ஆகிய மூன்று இடங்களில் குறித்த கல்வெட்டுக்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்வெட்டுக்கள் அனைத்தும் அமைக்கும் பணிகள் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் குறித்த வேலைத்திட்டங்கள் பல மாதங்களாக இடை நடுவில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. வேலைத் திட்டங்கள் தரமற்றதாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அந்த வீதியூடான போக்குவரத்துக்களும் பாதிப்படைந்துள்ளதோடு, மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அண்மையில் பெய்த கடும்மழை காரணமாக தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான குறித்தவீதி முழுமையாக சேதடைந்துள்ளது. மன்னார் பொலிஸ் நிலையத்தில் இருந்து வைத்திய சாலை வரையிலான குறித்த வீதி மிக முக்கிய பிரதான வீதியாக காணப்படுகின்றது.

விசேடமாக மன்னார் பொது வைத்திய சாலையில் இருந்து நோயாளர்களை அம்புலன்ஸ் வண்டி மூலம்வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்கு இந்த வீதியே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கரிசனை கொண்டு அரைகுறையாக காணப்படுகின்ற கல்வெட்டுக்களை பூரணப்படுத்தி, குறித்த வீதியை உரிய முறையில் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281)




# அகவை நிறைவும் பரிசளிப்பு விழாவும்

(சோலைநகர்)

கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் 66 ஆவது ஆண்டு அகவை நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி. மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் க.முருகவேள், சிறப்பு விருந்தினராக முகாமைத்துவ உதவியாளர் சி.சுஜீபன், கௌரவ விருந்தினராக பழைய மாணவன் ந.விஜயராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை கிளி/இராமநாதபுரம் அ.த.க.பாட்சாலை ஆசிரியர் திருமதி. அனுசா முருகவேள் வழங்கி வைப்பார். (2-309)

# சேவைநலன் பாராட்டு-23.05.2016



**அருள்மிகு தாவடி அம்பலவாண வேத விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை**

யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியையாக நீண்ட காலம் கடமையாற்றிய செல்வி. மகாலட்சுமி மாரிமுத்து அவர்கள் தான் கற்பித்தல் கடமையைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து மிகத் திறமையாகப் பணியாற்றியமை மகிழ்ச்சிக்குரியதாகும். 1961ஆம் ஆண்டில் இப்பாடசாலையில் கல்வி கற்றவர், அதே பாடசாலையில் ஆசிரியராகக் கடமை புரிவது, இப் பகுதிக்கே பெருமை தேடித்தந்துள்ளது.

இவருடைய கல்வி கற்பித்தல் காரணமாக மாணவர்கள் பரிசில்கள், பட்டங்கள், விருதுகள் பெற்றதும், கல்லூரியின் வளர்ச்சியில் கல்வி, இணைபாட விதானம் என்பவற்றின் செயற்பாடுகளைத்திட்டமிட்டு முன்னெடுக்க உதவி புரிந்தார். மேலும் கல்லூரியின் உயர்வுகளில் மிகக் குறுகிய காலத்தில் பெரும் மாற்றத்தையும், உயர் நிலையையும் ஏற்படுத்த ஏனைய ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கு வழிகாட்டியாக அமைந்திருப்பவர். இவரது ஓய்வுக் காலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுவதோடு, எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் கூறிக் கொள்கிறேன்.

**சிவஸ்ரீ.ப.சிவசங்கரக் குருக்கள், ஆலயப் பிரதம குரு , தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலயம், தாவடி கொக்குவில்.**



**செயற்றிறன் மிக்க ஆசிரியை**

செல்வி. மகாலட்சுமி மாரிமுத்து அவர்கள் யா/ தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நீண்ட காலமாக கற்பித்து வரும் புகழ் பூத்த ஆசிரியர்களில் இவரும் ஒருவர். வர்த்தக ஆசிரியராகவும் சைவசமயப் பாட ஆசிரியராகவும் சிறந்த வழிகாட்டியாகவும் சமய ஒழுக்க சீலராகவும் வாழ்ந்து மாணவர்களின் மத்தியில் நன்மதிப்பையும் பெற்றவர். இவருடைய அண்ணன் திரு. மா. சண்முகரத்தினம் இப்பாடசாலை யின் பழைய மாணவர் சங்கப் பொருளாளராக இரு ந்து பல்வேறு பணிகளை மேற்கொண்டவர். இவருடைய குடும்ப அங்கத்தவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவர்கள்.

பாடசாலையில் நிகழும் சமய நிகழ்வுகள் எல்லாவற்றையும் தாமே பொறுப்பேற்று சிறந்த முறையில் செய்து நிறைவேற்றுவார். நான் அதிபராக இருந்த காலத்தில் பாடசாலை வளர்ச்சிக்கு அரும்பங்காற்றியிருந்தார். இவரின் ஓய்வுக்காலம் சிறப்படைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.சு.சண்முககுலகுமாரன்**
**M.Ed, B.A. Dip in Edu, Sc.Trd, S.L.P.S.**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில்.**



**ஆளுமை கொண்ட ஆசிரியர்**

யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் உப அதிபர் செல்வி. மாரிமுத்து மகாலட்சுமி அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் எல்லையில்லா மகிழ்ச்சியடைகின்றேன். தாவடிக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு தாவடிக் கிராமத்திலேயே கல்வியைக் கற்று எமது கிராமத்திலேயே ஆசிரியத் தொழில் புரிந்த பெருமை ஆசிரியை அவர்களுக்கு உண்டு. தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவராக, ஆசிரியராக, உப அதிபராக எனப் பல்வேறு படிநிலைகளில் எமது பாடசாலையுடன் தொடர்புபட்டிருந்த அவர் பாடசாலையின் வளர்ச்சிக்காக தன்னையே அர்ப்பணித்தவர் எனக் கூறினால் அது மிகையாகாது. சிறுவயதிலிருந்தே அவரையும் அவரது குடும்பத்தினரையும் நன்கு அறிந்தவன் என்பதனால் அவருடைய ஆசிரியப் பணி பற்றியும் அவரது ஆளுமை பற்றியும் நன்கறிந்துள்ளேன் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன்.

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த அவர் தனது விடா முயற்சியினால் கல்வியில் முன்னேறி ஆசிரியப் பணிக்கே தன்னை அர்ப்பணித்தவர் என்பது பெருமைக்குரிய விடயமாகும். சிரித்த முகத்துடனும் எவரையும் அரவணைக்கும் மனோபாவத்துடனும் காணப்படும் மாணவர் விரும்பும் ஆசிரியர்களில் ஒருவராக விளங்கினார். பெற்றோர்களுடனும் பழைய மாணவர்களுடனும் ஆசிரியர் எத்துணை உறவைப் பராமரித்தார் என்பதைப் பாடசாலையின் 140 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கண்டு மகிழ்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன். இத்தகைய பெருமைகளுடனும் கூடிய ஆசிரியை செல்வி. மாரிமுத்து மகாலட்சுமி அவர்களின் பாடசாலைக்கான அர்ப்பணிப்பு மிக்க சேவை இளைப்பாறியதன் பின்னரும் கிடைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன் அவர் நல்ல உடலாரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழ்ந்து எமது பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை சேர்த்துத் தரவேண்டுமென எல்லாம் வல்ல அம்பலவாண வேதவிநாயகப் பெருமானை இறைஞ்சி நிற்கின்றேன்.

**வைத்திய கலாநிதி பொ.இராமநாதன், தலைவர், பரிபாலனசபை, தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலயம், தாவடி, கொக்குவில்.**




**சேவை நலன் பாராட்டு**

யா/ தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்று பின் கடந்த 15 வருடங்களாக இதே பாடசாலையில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் கடமையாற்றிய செல்வி. மாரிமுத்து மகாலட்சுமி ஆசிரியர் அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்வது பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள் எல்லோருக்கும் பெரும் துயரைத் தந்துள்ளது. இப்பாடசாலையில் ஒவ்வொரு நிகழ்வுகளைப் பார்த்தாலும் அவரது பங்களிப்பு இல்லாத நிகழ்வே இல்லை. எல்லா நிகழ்வுகளின் போதும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர் ஆகியோருக்கு உறுதுணையாக இருந்து செயலாற்றுவார்.

அவர் இதே கிராமத்தைச் சேர்ந்தவர் என்பதால் இப்பாடசாலையில் கல்வி கற்கும் எல்லா மாணவர்களின் குடும்பப் பின்னணியையும் நன்கு அறிந்தவர். இதனால் மாணவர்களின் கல்விக்கு பெரும் உதவியாக இருந்தவர். மாணவர்களை அன்போடும் கண்டிப்போடும் இருந்து வழிநடத்தும் நல்லாசிரியரை நாம் இழக்கின்றோம் என்பதை நினைக்கும் போது மிக வருத்தமாக உள்ளது. ஆனாலும் அவரது சேவை ஓய்வுபெற்ற பின்பும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் கிடைக்க வேண்டும் என்றும் அவரது சேவை தொடர வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம். ஆகையால் அவரது சேவை நலனைப் பாராட்டி அகமகிழ்வுடன் அம்பலவாண வேதவிநாயகரை வேண்டி நிற்கின்றோம். அவர் நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும் என்றும் அவரது சேவை பணி தொடர வேண்டும் என்றும் பாராட்டுகின்றோம்.

**திருமதி. ம.மதுரேஸ்வரி, செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

**யா/ தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் உப அதிபராகக் கடமையாற்றி 20.04.2016 ஆம் திகதி இளைப்பாறிய செல்வி. மகாலட்சுமி மாரிமுத்து அவர்களின் சேவை நலனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**



- ஆசிரியரின் பெயர்: செல்வி மா.மகாலட்சுமி
- தகப்பன் பெயர்: திரு.சின்னத்தம்பி மாரிமுத்து
- தாயார் பெயர்: திருமதி. மாரிமுத்து இராசம்மா
- பிறந்த திகதி: 20.04.1956
- முகவரி: வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்
- கல்வித்தகைமை: உயர் தேசிய வணிக டிப்ளோமா (HNDC)
- தொழிற்றகைமை: பட்டப்பின் கல்வி டிப்ளோமா
- நியமனத் திகதி: 09.09.1998

**சேவைக்கால விபரம்**

| பாடசாலை | பதவி | கடமையாற்றிய காலம் |
|---|---|---|
| யா/ இணுவில் இந்துக் கல்லூரி | ஆசிரியர் | 09.09.1998-17.01.1999 |
| யா/ தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை | ஆசிரியர் | 18.01.1999- 23.01.2014 |
| | பகுதித் தலைவர் | 24.01.2014-09.02.2016 |
| | உப அதிபர் | 10.02.2016-20.04.2016 |



**செல்வி மகாலட்சுமி மாரிமுத்து அவர்களின் ஓய்வு நிலைக்கான வாழ்த்துரை**

என் மதிப்பிற்குரிய ஆசிரியை செல்வி. மகாலட்சுமி மாரிமுத்து அவர்களது ஓய்வு காலம் நலமுடனும் மனநிறைவும் மகிழ்ச்சியுடனும் அமைய என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

''ஆசிரியத்துவம்'' என்ற சொல்லுக்குரிய கல்வியியலாளராக தன் செயற்பாடுகள் ஊடாக வாழ்ந்து காட்டியவர். மாணவர்களை கல்வி, ஒழுக்கம், கலாசார பண்பாடுகள், விழுமியங்களுடன் நிறைவான ஆளுமையுடையவர்கள் ஆக்க வேண்டும் என்ற கடமையை மிக அர்ப்பணிப்புடனும் விருப்புடனும் செயற்பட்டு பெரு வெற்றி கண்டவர். சகல மாணவர்கள் மீதும் அதீத அக்கறையும் அன்பும் நிறைந்தவராகவும் கண்காணிப்பும் கண்டிப்பும் உடையவராகவும் காணப்பட்டார். மாணவர்களின் நிலைக்குச் சென்று அவர்களது தேவையை நிறைவு செய்தமையால் எல்லா மாணவர்களது அன்புக்குரிய ஆசிரியையாகக் காணப்பட்டமையும் இவருக்குரிய சிறப்பாகும்.

பாடசாலை நிர்வாகத்திற்கும் பெரும் பக்கபலமாக இருந்தார். நிதி செயற்பாடுகளுக்கு வகை கூறுபவராகவும் பல நிர்வாக செயற்பாடுகளுக்கு பொறுப்பாளராகவும் சக ஆசிரியர்களுக்கு ஆலோசகராக, வழிகாட்டியாக, தொடர்பாளராக இருந்து நிர்வாகத்திற்குப் பெரும் பக்கபலமாக இருந்ததுடன் சமூகத் தொடர்பாளராகவும் பெரும் பங்காற்றினார்.

மாணவியாக, ஆசிரியையாக, பகுதித் தலைவராக, உப அதிபராக தாவடி அன்னையுடன் ஒன்றிணைந்து தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி ஓய்வுபெற்ற என் ஆசிரியையை வாழ்த்துவதில் நானும் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு. நா. தனபாலசிங்கம் (முன்னாள் அதிபர்), யா/ தாவடி இ.த.க.பாடசாலை.**



**ஓய்வுநிலைக்கான வாழ்த்து**

யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நீண்டகாலமாக ஆசிரியராகக் கடமையாற்றிய செல்வி. மகாலட்சுமி மாரிமுத்து அவர்கள் பாடசாலையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றியுள்ளார். பாடசாலை நிர்வாக செயற்பாட்டிலும் தன்னாலான பங்களிப்பைச் செய்தார். இவரது பணியானது தாவடி இந்துவிற்குக் கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும். இவர் தனது காலத்தில் இந்து மாமன்றம், வணிகமன்றம் போன்றவற்றை சிறப்புடன் வழிநடத்தி மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்த உறுதுணையாக இருந்தார்.

இவர் தனது ஓய்வுக் காலத்தில் பாடசாலையின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து உதவ வேண்டும் என்றும் அவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.சி.பாலச்சந்திரன் (உப அதிபர்), தலைவர், ஆசிரியர் கழகம், யா/தாவடி இ.த.க. பாடசாலை).**



**சேவையாய் வாழ்ந்தவர்**

ஆசிரிய சேவையில் ஆயிரமாயிரம் பேர் அமர்ந்திருக்கின்றார்கள். ஆயினும் சேவையில் ஆசிரியராய் உன்னதமான சேவை ஆசிரியராய் ஒரு சிலரே நிறைந்திருக்கின்றார்கள். இவ்வாறு மிளிர்ந்த ஒருவரின் அகவை அறுபதை அசைபோட வாய்த்த வாய்ப்பை வரமாகப் பார்க்கின்றேன். தவமாக தம் தொழிலை மேற்கொண்ட மகாலட்சுமி என்ற மகோன்னத மாதரசி ஆசிரியத்துவத்திற்கு கிடைத்த ஓர் அணிகலன் என்றே கூறலாம். தாவடியூர் குடியிருந்தோரோடு நாடிவந்தோர் அனைவருக்கும் அருளளிக்கும் அம்பலவாண வேதவிநாயகனின் அதி சிறந்த சேயாக அறிவளிக்கும் தமிழ்க்கலவன் பள்ளியில் பிள்ளைகளின ஆசிரியத் தாயாக பெரும் பங்காற்றியுள்ளார்.

தாவடிப் பாடசாலையின் தவப்புதல்வியாக அங்கேயே அதிக காலம் கடமையாற்றி பெற்ற அன்னைக்குப் போலவே கற்ற அன்னைக்கும் நிறையவே சேவை செய்தவர். எங்கேயும் எப்போதும் எவருக்கும் தன் உதவியை அர்ப்பணம் செய்யும் பாங்கை அருகிலிருந்து கண்டேன். உள்ளத்தனையது உயர்வு. இவர் உயரம் கண்டு வியந்தேன். எந்த உண்மைச் சேவையாளனும் ஓய்வு பெறுவதில்லை. இவரும் ஓய்வுபெறப் போவதில்லை என்பதே உண்மை. ஒரு பாதி அறுபதை நிறைவு செய்த இவர் மறுபாதி அறுபதையும் அடுத்தவருக்குதவும் சேவையோடே தொடர்வார். அதற்கான நலமும் வளமும் நன்றே நிலைத்திட நானும் வேண்டுகின்றேன் வாழ்த்துகின்றேன்.

**திரு.பரமானந்தம் சுதானந்தராஜா**
**அதிபர், யா/ தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.**



**ஆசிரியத் தொழிலுக்கு இலக்கணமானவர்**

யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் உப அதிபர் செல்வி மாரிமுத்து மகாலட்சுமி அவர்களின் மணிவிழாவிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஆசிரியத் தொழிலுக்கு இலக்கணமாக வாழ்ந்து பெற்றோர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் நற்பெயரைச் சம்பாதித்துக் கொண்ட செல்வி மகாலட்சுமி அவர்கள் அத்தொழிலுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் எனக் கூறினால் அது மிகையாகாது. எனது உறவினரான அவரைச் சிறுவயது முதலே நான் நன்கறிவேன்.

பாடசாலையின் வேலையில் எவ்வாறு அக்கறையுடன் தொழிற்பட்டாரோ அதேபோல் சமூக சேவைகளிலும் அவரது ஈடுபாடு காணப்பட்டது. பாடசாலையில் அதிபரதும் ஆசிரியர்களதும் பாராட்டைப் பெற்றுக் கொண்டது மட்டுமல்லாது பெற்றோரதும் மாணவர்களதும் அபிமானத்துக்குரியவராகவும் விளங்கி வந்தார். ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்ற நம்பிக்கையுடன் அவர் பணிபுரிவதனால் ஒருபோதும் அவர் வேலைத்தளத்தில் முரண்படுவதில்லை. இதன் காரணமாகவே இதற்கு முன்னர் பணிபுரிந்த அதிபரதும் ஆசிரியர்களதும் பாராட்டைப் பெற்றுக் கொண்டது மட்டுமல்லாது பழைய மாணவர்களாலும் பாடசாலையின் நலன் விரும்பிகளாலும் விரும்பப்படுகின்ற ஒருவராக இன்னும் அவர் திகழ்வதனைக் காண முடிகின்றது.

செல்வி மாரிமுத்து மகாலட்சுமி அவர்கள் சம்பாதித்த நன்மதிப்பே அவரைப் பகுதித் தலைவராகவும் பின்னர் உதவி அதிபராகவும் உயர்வடையச் செய்தது. அத்துடன் பாடசாலையில் நடத்தப்படும் எவ்விழாவாக இருந்தாலும் அதனை முன்னின்று நடத்துவதிலும் ஏனையோர் ஒத்துழைப்பைப் பெறுவதிலும் அவருக்கு நிகர் எவருமேயில்லை. எவராலும் விமர்ச்சிக்கப்படாத ஆசிரியர் ஒருவரை யா/ தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றுக் கொண்டது பெருமைக்குரிய விடயமாகும். எமது பாடசாலையின் வளர்ச்சியிலும் மாணவர்களது ஒழுக்கத்திலும் அதீத அக்கறை கொண்டவராக செல்வி மாரிமுத்து மகாலட்சுமி பணியாற்றிய காரணத்தினாலே பாடசாலைச் சமூகத்தவரால் பெரிதும் மதிக்கப்படும் ஒருவராக அவரால் விளங்க முடிந்துள்ளது.

இத்தகைய பெருமைக்குரிய ஆசிரியப் பெருந்தகை தனது வாழ்க்கைக் காலத்தில் மகிழ்வுடனும் நல்ல உடலாரோக்கியத்துடனும் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் எமது பாடசாலைக்கும் பழைய மாணவர் சங்கத்திற்கும் அவரது ஆலோசனையும் அரவணைப்பும் என்றென்றும் கிடைக்க வேண்டுமென இறைஞ்சி நிற்கின்றோம்.

**பேராசிரியர் க.தேவராஜா, உபதலைவர் பழைய மாணவர் சங்கம், யா/ தாவடி இந்து த.க.பாடசாலை.**



**ஆசிரியத்துவத்திற்கு ஓய்வு கிடையாது**

யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்று பின் கடந்த 15 வருடங்களாக இதே பாடசாலையில் ஆசிரியராக , உப அதிபராக பணியாற்றிய செல்வி.மாரிமுத்து மகாலட்சுமி அவர்கள் ஓய்வு பெறுகிறார் என்ற செய்தி இப் பாடசாலையின் நலன் விரும்பிகள் அனைவருக்கும் ஒரு அதிர்ச்சியான செய்தியாகத்தான் இருக்கும். இப் பாடசாலையின் முக்கிய நிகழ்வுகளில் அவருடைய பங்களிப்பு மிக அதிகம்.காலையில் பாடசாலைக்கு வந்ததும் மிகவும் சுறுசுறுப்பாக புன்னகை முகத்துடன் அன்றாட கடமைகளை பரிசீலனை செய்து உரிய ஏற்பாடுகளை கவனித்துப் பாடசாலையின் இயக்கத்திற்கு அதிபருக்குப் பெரும் உதவியாகச் செயலாற்றுவார்.

பாடசாலையின் 140 ஆம் வருடக் கொண்டாட்டத்தின் போது இவருடைய பொறுப்புகள் ,பணிகள் ஏராளம் ,எமது பாடசாலை விழா சிறப்புற அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் அவருடைய பணி பாராட்டத்தக்கது.


தாவடிக் கிராமத்தைச் சேர்ந்தவர் என்பதால் அப்பாடசாலையில் கல்வி கற்கும் எல்லா மாணவர்களினதும் குடும்பப் பின்னணிகளை நன்கு அறிந்தவர்.ஆகவே விசேட தேவைகள் உள்ள மாணவர்களுக்கு உதவவும்,கல்வியில் மெதுவாகக் கற்கும் மாணவர்களை இனம் கண்டு அவர்களுக்கு விசேட மேலதிக வகுப்புக்களை நடத்தியும் மாணவர்களில் அன்பும்,கண்டிப்பும் உரிய ஒரு நல்லாசிரியை நாம் இழக்கிறோம்.

இப் பாடசாலையை மகாவித்தியாலயமாக தரம் உயர்த்த முயற்சிகள் மேற்கொண்டு வரும் இவ்வேளையில் இவர் ஓய்வு பெறுவது வருத்தமளிக்கிறது. ஆசிரியர்களும், வைத்தியர்களும் ஓய்வு பெறுவதில்லை. ஓய்வு பெற்ற பின்பும் அவர்களின் சேவை சமூகத்தில் நினைவு கூரப்படும். அவர்களின் மறைவின் பின்பும் இப்பெயர்கள் நிலைத்துவிடும். இந்த வகையில் செல்வி. மகாலட்சுமியின் சேவை தொடர்ந்து எமது பாட சாலைக்குத் தேவை. பாடசாலையில் கற்கும் உயர்வகுப்பு மாணவர்களுக்கு வழிகாட்டலும் உதவியும் தொடர்ந்து தேவைப்படும். பாடசாலையின் பல்வேறு சேவை அமைப்புக்கள் ஊடாக அவரது சேவை தொடர வேண்டுமென எதிர்பார்க்கிறோம். அவரது அனுபவம் ,ஆற்றல் சமூகத்திற்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டும். அவரது ஓய்வுக் காலம் சமூக சேவை நிறைந்ததாக, மன நிறைவு உள்ளதாகவும் அமையவேண்டுமென எமது குல தெய்வமாகிய வேத விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

**S.R. சரவணபவன், முன்னாள் தலைவர், வட பிராந்திய சத்திய சாயி நிறுவனம்**

(ஜ-4666)

# வற்றாப்பளை கண்ணகிக்குப் பெருவிழா



முதல்வாரம் முழுவதும் முள்ளியவளையில் காட்டா விநாயகர் ஆலயத்தில் கண்ணகிக்கு உப்பு நீரில் விளக்கேற்றும் அதிசயம்!

பத்தினித் தெய்வத்திற்கு விழா எடுத்து வன்னிப் பிரதேசம் எங்கும் விழாக்கோலம்! நந்திக்கடல் அருகே... இலட்சோபலட்சம் பக்தர்கள் கூடுவார்கள் என எதிர்பார்ப்பு.

வன்னிப் பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயங்கள் பல உள்ளன. அதில் கண்ணகி அம்மனுக்கென வரலாற்றுப்புகழ் மிக்க பல ஆலயங்கள் உள்ளதை அவதானிக்கும் போது, முள்ளியவளை, வற்றாப்பளை, சிலாவத்தை, கர்கிடங்கு, பனையாண்டாள், அரியாமடு, கொக்கிளாய், குமுழமுனை, முதலிய வன்னிக் கிராமங்கள் பலவற்றிலும் கண்ணகி அம்மனுக்குரிய வழிபாட்டிடங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். ஆண்டு தோறும் வைகாசித் திங்களில் இங்கெல்லாம் கண்ணகி அம்மனுக்கு சிறப்பாக பொங்கல் விழா நடைபெறுகிறது.

முள்ளியவளையிலும், வற்றாப்பளையிலும் நடைபெறுகின்ற பொங்கல் வழிபாடு ஏனைய இடங்களில் இல்லாத பலசிறப்புக்களைக்கொண்டு விளங்குகின்றது. முள்ளியவளையிலே கண்ணகி அம்மனுக்கு கடல் நீரில் விளக்கேற்றி ஒருவாரகாலமாக நடைபெறுகின்ற சிறப்பான வழிபாட்டு மரபுகளை இலங்கையின் வேறு எப்பகுதியிலுமே காணமுடிவதில்லை.

முள்ளியவளையில் இரண்டு வாரங்களாக நடைபெறுகின்ற விழாவின் இறுதிநாள் நிகழ்வு வற்றாப்பளையில் நடைபெறுகின்றது. வன்னிப் பிரதேசத்தவர்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி பிரதேசப் பெருவிழாவாகவே நடைபெறும்.

இவ் விழாவிற்கு இலங்கையின் பல பாகங்களிலும் பெருந்தொகையான மக்கள் ஆண்டுதோறும் வந்து கூடுவர். சித்திரை முடிந்து சோழக் காற்று வீச ஆரம்பிக்க வன்னிப் பிரதேச மக்கள் பொங்கல் வந்து விட்டது என்ற புத்துணர்ச்சியோடும் புதுப்பொலிவோடும் தம்மை தயார்படுத்திக் கொள்வார்கள்.

வீடுகள் புதிய ஓலையால் வேயப்பட்டு, வேலிகள் செப்பனிடப்பட்டு, வீட்டுத் தென்னைகள் அழகாக பசிய சாரிட்டு மெழுகப்பட்டு சுவர்கள் வெள்ளை, சிவப்பு மண்ணால் மெழுகப்பட்டு, அழகுபடுத்தப்பட்டு, கிணறுகள் இறைக்கப்பட்டு துப்புரவு செய்யப்படும். இதனால் வன்னிப் பிரதேசம் புதுப்பொலிவு பெறும்.

வற்றாப்பளையில் நடைபெறுகின்ற பொங்கல் விழாவிற்கு முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயம் முதன்மைப்படுத்தப்படுகின்றது.

முள்ளியவளையிலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள சிலாவத்தை கடலில் இருந்து உப்பு நீர் எடுத்து வந்து முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் கண்ணகை அம்மனுக்கு முதல் வாரம் முழுவதும் கடல் நீரிலே விளக்கெரியும் அதிசயம் நடைபெறுகின்றது.

இதற்கொரு விளக்கமாக அம்மன் சிந்து பாடலொன்று இவ்வாறு கூறுகின்றது.

முந்தித் தடங்கிளியிலே
பாண்டியன் மதுரையை
முதுகனல் கொளுத்தியே
ஒரு சிலம் பதனால்
பிந்திவந் தங்கொணா
மைக்கடவை
தனிலும் பேரான
முள்ளியவளைப்பதி
உறைந்தாய்
தந்திமுகன்
கோவிலில் வந்த
மடை கண்டு தார்
கடல் உப்புத்
தண்ணீரில் விளக்கேற்றி
அந்திப் பொழுதிலே
நந்திக்கடற் கரையில்
வைகாசித் திங்கில்
வந்ததம்மா தாயே

இப்பாடல்... வற்றாப்பளைக்கு போக முன்னர் கண்ணகை அம்மன் முள்ளியவளையிலே பொங்கல் மடை கண்டு போனதாகவும் தந்திமுகன் கோயில் காட்டா விநா யகர் ஆலயத்தையே குறிக்கின்றது. இங்கே தான் உப்பு நீரிலே விளக்கேற்றப்பட்டதாகவும் இப்பாடல் கூறுகின்றது.

வைகாசித் திங்களில் இரண்டு வாரங்களாக நடைபெறுகின்ற பொங்கல் நிகழ்ச்சிகள் முதல் இரண்டு வாரங்களும் முள்ளிவளை காட்டா விநாயகர் கோவிலில் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. வைகாசித் திங்களில் விசாக நட்சத்திரம் கூடிய பூரணையில் வருகின்ற வாரத்தில் திங்கட் கிழமை வற்றாப்பளையில் இறுதியாக ஒரு நாள் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. பொங்கல் விழாவில் இது மூன்றாவது திங்கட்கிழமையாக அமைகின்றது.

பொங்கல் விழாவின் ஆரம்ப நிகழ்ச்சி முதலாவது திங்கட்கிழமை முள்ளியவளையில் இடம்பெறுகின்ற பாக்குத் தெண்டலுடன் ஆரம்பமாகின்றது. பொங்கல்கடமைகளைச் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அதிகாலையில் புறப்பட்டு முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, கேப்பாபிலவு, வற்றாப்பளை, கணுக்கேணி, குமுழமுனை, சிலாவத்தை ஆகிய ஏழு கிராமங்களிலிருந்தும் பூசைக்குரிய மங்கலப் பொருட்களை சேகரித்து வருவார்கள்.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருட்களை மஞ்சள் துணியிலே கட்டி கோவிலில் உள்ள வேப்ப மரமொன்றிலே தொங்க விடுவார்கள். இந்நிகழ்ச்சியே பாக்குத் தெண்டல் எனப்படும்.

இரண்டாவதுதிங்கட்கிழமைமாலை வேளையில் முள்ளியவளையில் இருந்து சுமார் ஏழு மைல் தொலைவில் உள்ள கடற்கரை கிராமமான சிலாவத்தைதீர்த்தக்கரைக்குச்சென்று கடல் நீரை அள்ளி வருவதே தீர்த்தம் எடுத்தல் நிகழ்ச்சியாகும். இரவு வேளை தீப்பந்தங்களின் வெளிச்சத்துடன் பறை மேளங்கள் முழங்க கண்ணகியின் புனித தீர்த்தம் ஊர்வலமாக எடுத்து வரப்படும் போது வழியெங்கும் மக்கள் நிறை குடங்கள் வைத்து அதனை வரவேற்று வழிபடுவார்கள்.

புனித தீர்த்தம் எடுத்து வரும் அன்றைய தினமே வற்றாப்பளையிலிருந்து கண்ணகை அம்மனின் உருவம் எடுத்து வரப்பட்டு அம்மனின் மண்டபத்தில் வைக்கப்படும். இவ்வாறு கொண்டு வரப்பட்ட புனித தீர்த்தம் காட்டாவிநாயகர் கோவிலில் உள்ள அம்மனுக்குரிய மண்டபத்தில் வைக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து புனித தீர்த்தத்தில் கண் ணகிக்கு விளக்கேற்றி விசேட வழிபாடுகள் நடைபெறும். சடங்காசாரங்களுடன் நடைபெறுகின்ற தூளி பிடித் தல், கச்சு நேர்தல், வளந்து நேர்தல் முதலிய வழிபாட்டு முறைகளை பெருந்தொகையான மக்கள் கூடி நின்று பக்தி பூர்வமாக கண்டு களிப்பதை காணலாம்.

தீர்த்தம் எடுத்த நாளிலிருந்து பொங்கல் முடிந்து பத்த ஞானி பொங்கல் முடியும் வரை இப்பகுதி மக்கள் பாட் டிற்குப் போவதில்லை, மரணச் சடங் குகளுக்கு மேளம் அடிப்பதில்லை, உரலில் உலக்கை போட்டு குத்துவதில்லை, வெளியூர்களுக்கு போவதில்லை இது இப்பகுதி மக்களுக்கு ஒரு கட்டுப் பாடாக இருந்தது. இதை மீறுவோருக்கு பரிகரங்கள் அடித்து விடும் என்ற ஒரு பய உணர்வு இருந்து வருகின்றது.

இத்தகைய சடங்கு ரீதியான வழிபாட்டு முறைகளைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை இரவு பொங்கல் நிகழ்ச்சி நடைபெறும். காலை முதல் இரவிரவாக அடியார்கள் காவடி, கரகம், பாற்செம்பு முதலியன சுமந்து ஆடியும் பாடியும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொண்டுள்ள ஊர்ப்பெருவிழாவாகவே பொங்க்ல் நிகழ்ச்சி நடைபெறும். இதுவே முள்ளியவளையில் நடை பெறுகின்ற இறுதி நிகழ்ச்சியாகும்.

முள்ளியவளையில் இருந்து மீண்டும் கண்ணகை அம்மனின் உருவத்தினையும் பூசைக்கு பயன்படுத்திய எஞ்சிய புனித தீர்த்தத்தினையும் வேறு பூசைப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு வற்றாப்பளைக்குச் செல்லும் பூசைக் குழுவினர் அங்கு இறுதிப் பொங்கல் நிகழ்ச்சியை நடத்துவார்கள்.

வற்றாப்பளையில் நந்திக்கடற் கரையில் பெருமரங்கள் சூழ்ந்த சோலை வெளியில் கண்ணகியின் ஊர்விழாவைக் காண இலங்கையில் பல்வேறு பாகங்களிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் வந்து கூடுவார்கள். இவ்வாறாக அம்மன் இங்கு பத்தாவது இடமாக வந்து குடியேறியதாக ஐதீகம்.

அம்மன் பத்தாவது இடமாக இங்கு வந்து எழுந்தருளியதால் இவ்விடத்தை பத்தாப்பளை என அழைக்கலாயினர். காலப்போக்கில் இது மருவி வற்றாப்பளையாக மாறியது என்பது வரலாறு. வற்றாப்பளை யில் கண்ணகி அம்மன் கோயில் வரலாற்றை சிலம்பு கூறல் காவியம் இவ்வாறு கூறுகின்றது.

நந்திக்கடற்கரையில் பிள்ளைகள் மாடுகள்மேய்த்துக்கொண்டுநின்ற போது விளையாட்டுக்காக கோவில் கட்டி பொங்கல் செய்து படைத்தனர் என்றும் அவ்வெளியில் அவ்விடத்தில் மூதாட்டி ஒருத்தி தோன்றினார். அம்மா தாயே நீங்கள் யார் என பிள்ளைகள் கேட்டனர். அப்போது அந்த மூதாட்டி நான் சோழ நாட்டைச் சேர்ந்தவள். கதிர்காமம் போவதற்காக இவ்வீதியால் வந்தேன். உங்கள் பொங்கலையும் பார்த்தேன். பொங்கலுக்கு விளக்கேற்றினால் சிறப்பாக இருக்கும் என மூதாட்டி சொல்ல விளக்கேற்றுவதற்கு எண்ணெய் இல்லையே என்று சிறுவர்கள் சொல்ல நந்திக்கடலிலேயே உப்பு நீரினை அள்ளி விளக்கேற்றுங்கள் என்று மூதாட்டி சொன்னார்.

சிறுவர்களும் அவ்வாறே செய்ய விளக்கு பிரகாசமாக எரிவதை கண்டு அதிசயித்தனர். எனது பெயர் கண்ணகி. வைகாசி மாதத்தில் பூரணை தினங்களில் பூசை செய்தால் நான் வருவேன். உங்கள் குறைகள் தீரும். கேட்டவரங்கள் கொடுப்பேன் என்று கூறி அந்த மூதாட்டி மறைந்தாள். அவர்தான் மானிடத் தெய்வம் கண்ணகி என வரலாறு கூறுகின்றது. மேலும் இந்த ஆலயத்தின் கண்ணகி அம்மனின் அற்புதங்களில் அங்கே தெற்குப் பக்கமாக நின்ற பனிச்சை மரமொன்றின் வரலாறும் குறிப்பிடக் கூடிய ஒன்றாக விளங்குகின்றது.

இலங்கையை ஆண்ட பறங்கியர்கள் காலம் அப்போது முல்லைத்தீவு தலைவராக இருந்த நெவில் என்பவன் இவ் ஆலயத்திற்கு வந்து பூசாரியைப் பார்த்து உங்கள் அம்மனின் அற்புதத்ததை எனக்கு காட்ட வேண்டும். தவறின் கடும் தண் டனை தருவேன் என கட்டளையிட்டான். பயந்து நடுங்கிய பூசாரி அம்மனை வேண்ட குறிப்பிட்ட பனிச்சை மரம் சிலிர்த்து ஆடி தனது காய்களால் குறிப்பிட்ட பறங்கித் துரையை ஓட ஓட துரத்தி துரத்தி எறிந்து கலைத்தது என்றும் அதன் பின் குறிப்பிட்ட மரம் காய்க்கவில்லை என்பதை யும் மக்கள் கண்ணூடாகஅவதானித்தனர்.

திங்கட்கிழமை இரவு பொங்கல் முடிந்ததும் மறுநாள் செவ்வாய்க் கிழமை வற்றாப்பளையிலிருந்து கதிர்காம யாத்திரிகர்கள் கூட்டம் கரையோரமாகத் தமது பயணத்தைத் தொடர்வார்கள். செல்வச் சந்நிதி முருகன் கோவிலிலிருந்து கதிர்காமம் நோக்கி புறப்பட்ட யாத் திரிகர்கள் கொம்படி வழியாக வற்றாப்பளைக்கு வந்து கூடுவார்கள். வன்னிப்பிரதேச யாத்திரிகர்கள் பொங்கல் தினத்தில் இவர்களோடு இணைந்து தமது பயணத்தை ஆரம்பிப்பார் கள். இரண்டு வாரங்களாக ஊரெல்லாம் கூடி எடுத்து பெருவிழா ஓய்ந்து செவ்வாய்க்கிழமை ஊர் உறங்கும்.

பொங்கல் விழாவில் இரண்டு விதமான அம்சங்கள் காணப்படுகின்றன. பாக்குத் தெண்டியது தொடக்கம் தீர்த்தம் எடுப்பது வரையிலான முதல் ஒரு வார காலமும் கண்ணகி தொடர்பான கலைகள்நிகழ்த்தப்படுகின்றன.

கரகம், கும்மி, கோலாட்டம், வசந்தனாட்டம் முதலிய சிறிய சிறிய கலை நிகழ்வுகள் பிரதேசமெங்கும் பர வலாக நடத்தப்படுகின்றன. இதனால் வன்னிப் பிரதேசம் பொங்கல் விழாவிற்குரிய புதுப்பொலிவைப் பெற்றுத் திகழ்கிறது.

இக் கலைநிகழ்வுகளின் உச்சக்கட்டமாக கண்ணகி வரலாறு கூறும் கோவலன் கூத்து வட்டக் கலரியில் நடத்திக் காட்டப்படுகின்றது. முள்ளியவளை காட்டா விநாயகர் கோவில் முன்றலில் விடிய விடிய ஆடப்படுகின்ற இக்கூத்து நிகழ்ச்சி ஓர் விழாவாகவே அமைந்து விடுகின்றது.

அயற்கிராம மக்களெல்லாம் நடந்தும், வண்டிகளிலும் சாரைசாரையாக கூடி வந்து இந் நிகழ்ச்சியைக் கண்டு களிப்பார்கள். இது அவ்வூரின் பழைமை போற்றப்படுகின்ற பண்பை எடுத்துக் காட்டுகின்றது.

கண்ணகியின் புனித தீர்த்தம் முள்ளியவளைக்கு எடுத்து வரப்பட்டதும் ஊர் அமைதியடைந்து வழிபாடு சடங்காசாரங்களுடன் நிகழ்த்தப்படுகின்றது. முதல் வாரத்தில் கூத்தாக காட்டப்பட்ட கண்ணகியின் வரலாறு இங்கே கதைப்பாடலாக படிக்கப்பட்டு கண்ணகியின் பூசை அமைதியுடன் நடைபெறுகின்றது.

ஊர் மூத்த நைனார் என்று பரராசசேகர மன்னனால் பராமரிக்கப்பட்டும் காட்டா விநாயகர் என்று பண்டைப்பழம் சிறப்பு விளங்கியும் போர்த் துக்கேயப் படையினருக்கு கந்தனைக் காட்டாமல் மறைத்து காட்டா விநாயகர் ஆகியும் சிறப்புக்கு விளங்கி வருகின்ற முள்ளியவளை காட்டா விநாயகர் கோவிலில் கண்ணகிக்கு கடல் நீரில் விளக்கேற்றி வன்னிப் பிரதேசம் எங்கும் ஒன்று கூடி நிற்க ஊர்ப் பெருவிழா நடைபெறுகின்றது.

வே.ம.இந்திரநாதன்

## இணையில்லா வாழ்வளிப்பாய் தாயே!

வற்றாப்பளையில்
வீற்றிருந்து
வந்தோர்க்கருளும்
வரலாற்றுத்தாயே
நீதியின் தெய்வமே-நம்
கண்ணகித்தாயே
நாதியற்றுப் போய்விடுமா
நம் எதிர்காலம்
கிராமிய வழிபாட்டின்
எச்சமாய்
உன் வெளியிடை
பொங்கி மடைபரப்பி
நின்றழுகின்றோம்
கூத்தும் பாட்டும்
கொண்டுன்னைக்
கும்பிட்டு நிற்கின்றோம்
இன மத பேதமில்லா
இன்பமுடன் வாழும்
இணையில்லா வாழ்வளிப்பாய் தாயே

புலோலியூர்
வேல்நந்தன்

# தமிழக முதலமைச்சராக மீண்டும் ஜெயலலிதா இன்று பதவியேற்பு

## ஆளுநரை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரினார்





(சென்னை)

**தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா இன்று மீண்டும் பதவியேற்கவுள்ளார். சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு பதவியேற்பு விழா இடம்பெறும். ஜெயலலிதாவுடன் 28 அமைச்சர்களும் பதவியேற்கவுள்ளனர்.**

### ஆளுநருடன் ஜெயலலிதா சந்திப்பு

இதைத்தொடர்ந்து, சென்னையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில், புதிய முதலமைச்சராக ஜெயலலிதா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து, அவர் நேற்று முன்தினம் மாலை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகைக்கு சென்று ஆளுநர் கே.ரோசய்யாவை சந்தித்து, புதிய அரசு அமைக்க தன்னை அழைக்குமாறு உரிமை கோரினார்.

இந்த சந்திப்பின்போது, ஆளுநர் கே.ரோசய்யாவுக்கு ஜெயலலிதா பூங்கொத்து வழங்கினார். பதிலுக்கு, முதலமைச்சராக பொறுப்பேற்க உள்ள ஜெயலலிதாவுக்கு ஆளுநர் கே.ரோசய்யா, அவரது மனைவி சிவலட்சுமி ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர்.

### இன்று பதவி ஏற்பு விழா

பின்னர், அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களின் ஆதரவு கடிதத்தையும் புதிய அமைச்சரவையில் இடம்பெறும் அமைச்சர்களின் பெயர்ப் பட்டியலையும் ஜெயலலிதா ஆளுநர் கே.ரோசய்யாவிடம் அளித்தார். அதைத் தொடர்ந்து, புதிய அரசு அமைக்க ஜெயலலிதாவுக்கு ஆளுநர் கே.ரோசய்யா அழைப்பு விடுத்தார்.

இந்த நிலையில், தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஜெயலலிதா இன்று திங்கட்கிழமை பதவி ஏற்கிறார். சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் பதவி ஏற்பு விழாவில், ஜெயலலிதாவுக்கு ஆளுநர் பதவிப்பிரமாணமும் இரகசிய காப்பு பிரமாணமும் செய்துவைப்பார். ஜெயலலி தாவை தொடர்ந்து, அமைச்சர வையில் இடம்பெற்றுள்ள 28 அமைச்சர்களும் பதவி ஏற்கவுள்ளனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் ஆளுநர் மாளிகையில் இருந்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது,

### அமைச்சர்கள் பட்டியல்

ஆளுநர் மாளிகையில் நேற்று முன்தினம் ஜெயலலிதா ஆளுநரை சந்தித்து தான் அ.தி.மு.க. சட்டமன்ற கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதை தெரிவிக்கும் கடிதத்தை வழங்கினார். ஜெயலலிதாவை முதலமைச்சராக நியமித்து அமைச்சரவை அமைக்கும்படி அவருக்கு ஆளுநர் அழைப்பு விடுத்தார். இதைத்தொடர்ந்து, முதலமைச்சராக பதவியேற்க இருக்கும் ஜெயலலிதா, அமைச்சரவையில் அமைச்சர்களாக நியமிக்கப்படுபவர்களின் பெயர்ப்பட்டியல் கொண்ட கடிதத்தை வழங்கினார். ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளித்தார்.

அமைச்சர்களாக பதவி ஏற்க இருப்பவர்களின் பெயர்களும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இலாகாக்களின் விபரங்களும் வருமாறு,


ஓ.பன்னீர்செல்வம் - நிதி, திண்டுக்கல் சி.சீனிவாசன்- வனத்துறை, எடப்பாடி கே.பழனிச்சாமி - பொதுப்பணித்துறை, செல்லூர் கே.ராஜு - கூட்டுறவு, பி.தங்கமணி - மின்சாரம், டி.ஜெயக்குமார் - மீன்வளம், எஸ்.பி.வேலுமணி - நகராட்சி நிர்வாகம், டி.ஜெயக்குமார்- மீன்வளம், சி.வி.சண்முகம் - சட்டம், கே.பி.அன்பழகன் -உயர்கல்வி, டாக்டர் வி.சரோஜா- சமூக நலன், கே.சி.கருப்பண்ணன் - சுற்றுச்சூழல், எம்.சி.சம்பத்- தொழில்துறை, ஓ.எஸ்.மணியன்- ஜவுளித்துறை, ஆர்.காமராஜ்- உணவு, ஓ.எஸ்.மணியன் - கைத்தறி, உடுமலை ராதாகிருஷ் ணன் - வீட்டு வசதி, டாக்டர் சி.விஜயபாஸ்கர் -மக்கள் நல்வாழ்வு, எஸ்.பி.சண்முகநாதன் - பால் வளத்துறை, ஆர்.துரைக்கண்ணு - வேளாண்மை, கடம்பூர்ராஜு - செய்தி மற்றும் விளம்பரத்துறை, ஆர்.பி.உதயகுமார் - வருவாய் துறை, கே.டி.ராஜேந்திரபாலாஜி - ஊரக தொழில், கே.சி.வீரமணி - வணிக வரி, பி.பெஞ்சமின் - பள்ளிக்கல்வி, வெல்லமண்டி என். நடராஜன் - சுற்றுலா, எஸ். வளர்மதி - பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன், வி.எம். ராஜலட்சுமி- ஆதிதிராவிடர் நலன், டாக்டர் எம்.மணிகண்டன் - தகவல் தொழில் நுட்பம், எம்.ஆர். விஜயபாஸ்கர் - போக்குவரத்து


மேற்கண்டவாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா பதவி ஏற்பது இது 6 ஆவது முறை ஆகும்.

சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெறும் பதவி ஏற்பு விழா நிகழ்ச்சியை பொதுமக்களும் காணும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நவீன மின்னணு திரை வாகனம் (எல்.இ.டி. வீடியோ வான்) மூலம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் (தஞ்சை மற்றும் கரூர் மாவட்டம் நீங்கலாக) பொதுமக்கள் அதிகம் கூடுகின்ற இடங்களில் நேரடியாக ஒளிப்பரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)








மறைந்த தலைவர்களுக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

# இமாச்சலப் பிரதேசத்தில் அடுத்தடுத்து வீதி விபத்து

## 24 மணித்தியாலங்களில் 41 பேர் பலி

(சிம்லா)

**இமாச்சல பிரதேசத்தில் மூன்று வெவ்வேறு இடங்களில் வீதிகளிலிருந்து வாகனங்கள் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 41 பேர் பலியாகியுள்ளனர்.**



இமாச்சல பிரதேச மாநிலம் சம்பா மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பயணிகளை ஏற்றிச் சென்ற ஒரு பேருந்து, பள்ளத்தாக்கில் விழுந்து நொறுங்கியது. இதில் 17 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

இதேபோல் கின்னார் மாவட்டத்தில் சாரா-கம்மா இணைப்பு வீதியில் சென்ற வாகனம் பாடா கம்பா அருகில் உள்ள 300 அடி ஆழ பள்ளத்தாக்கில் விழுந்து நொறுங்கியது.

திருமணமான மணமகளை புகுந்த வீட்டிற்கு கொண்டு போய் விட்ட பின்னர், அவரது குடும்பத்தினர் ஊருக்கு திரும்பியபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் 13 பேர் பலியாகினர். ஒருவர் மட்டும் வாகனத்தில் இருந்து வெளியில் எகிறி குதித்ததால் காயங்களுடன் உயிர் தப்பியதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

நேற்று தியோக் துணைக் கோட்டத்தில் உள்ள பஜ்ரோலி பாலம் அருகில் சென்ற அரச பேருந்து பள்ளத்தில் விழுந்ததில் 11 பேர் உயிரிழந்தனர்.

25 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். 24 மணி நேரத்தில் மட்டும் விபத்துக்களில் 41 உயிர்க்ள் பலியாகியுள்ளன.


இந்த விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உடனடி நிவாரணமாக தலா 50 ஆயிரம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

காயமடைந்து சிகிச்சை பெறுபவர்களை முதலமைச்சர் வீரபத்ர சிங் நேற்று நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறினார்.

மேலும் வாகனச் சாரதிகள் எச்சரிக்கையுடன் வாகனங்களை செலுத்த வேண்டும் என்றும், அலட்சியமாகவோ, தாறுமாறாகவோ செலுத்த வேண்டாம் என்றும் முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

## தமிழக மக்களின் நலனைக் காக்க 6கட்சிகளும் இணைந்து செயற்படும்

### ம.ந.கூட்டணி ஒருங்கிணைப்பாளர் வைகோ உறுதி



தேமுதிக அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்த மக்கள் நலக்கூட்டணி தலைவர்கள்

(சென்னை)

தமிழக மக்களின் நலனை காக்க 6 கட்சிகளும் இணைந்து செயற்படுவது என தீர்மானித்துள்ளோம் என்று வைகோ தெரிவித்தார்.

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தேமுதிக - மக்கள் நலக் கூட்டணி - தமாகா அணி போட்டியிட்ட அனைத்து இடங்களிலும் தோல்வி அடைந்தது. முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட தேமுதிக தலைவர் விஜயகாந்த் உளுந்தூர்பேட்டை தொகுதியில் டெபாசிட் இழந்தார்.

இந்நிலையில் தேமுதிக தலைவர் விஜயகாந்தை கோயம்பேட்டில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் மக்கள் நலக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளரும், மதிமுக பொதுச்செயலாளருமான வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்தனர்.

அப்போது சட்டப்பேரவைத் தேர்தல் தோல்வி குறித்து அனைவரும் ஆலோசனை நடத்தினர்.

இந்த சந்திப்பு குறித்து வைகோ செய்தியாளர்களிடம் கூறியதாவது,

அதிமுகவும், திமுகவும் வாக்குக்கு பணத்தை வாரி இறைத்தனர். 99 சதவீத இடங்களில் இரு கட்சிகளும் பேசி வைத்துக் கொண்டு வாக்காளர்களுக்கு பணத்தை கொடுத்தனர்.

ஆர்.கே.நகரில் முதல்வர் ஜெயலலிதாவுக்கும், திருவாரூரில் கருணாநிதிக்கும், கொளத்தூரில் மு.க.ஸ்டாலினுக்கு வீடுவீடாக வாக்குக்கு பணம் கொடுக்கப்பட்டது. ஏற்கனவே இந்தியாவிலேயே ஊழலில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதும் இந்தியாவில் எங்கும் நடந்ததில்லை. தேர்தலுக்கு முன் கடைசி 3 நாட்களில் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை பொலிஸாரும் அதிகாரிகளும் தடுக்கவில்லை. இதையும் மீறி எங்களுக்கு விழுந்த ஒவ்வொரு வாக்கும் ஒரு கோடி பொன்னுக்கு சமம்.

இந்த விபரீதத்தில் இருந்து தமிழகத்தை மீட்க வேண்டும். மக்கள் நலன், தமிழக வாழ்வாதாரம், எதிர்கால தலைமுறை யின் வாழ்வு, தமிழக மக்களின் மொத்த நலனை காக்க வேண்டும். அதற்காக நாங்கள் 6 கட்சிகளும் இணைந்து செயற்படுவது என தீர்மானித்துள்ளோம். (இ-5)

## ஜெயலலிதா இன்று பதவியேற்பு சுஷ்மா, அருண் ஜெட்லி பங்கேற்பு



தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா இன்று மீண்டும் பதவியேற்றுக் கொளகிறார். இந்த நிகழ்ச்சியில் சுஷ்மா, அருண் ஜெட்லி உள்ளிட்ட மூன்று மத்திய அமைச்சர்கள் பங்கேற்கவுளளதாக தகவல் வெளி யாகியுள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் பெங்களூர் நீதிமன்றத்தால் சிறைத தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜெயலலிதா பின்னர் பிணையில் விடுவிக்கப் பட்டார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா மேல்முறையீடு செய்தார். இதனிடையே, பிணையில் இருந்த ஜெயலலிதாவை, மத்திய நிதித்துறை அமைச்சர் அருண் ஜெட்லி சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்புக்கு பின்னர்தான் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

கடந்த 11ஆம் திகதி சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து ஜெயலலிதாவை, கர்நாடக உயர் நீதி மன்ற சிறப்பு நீதிபதி குமாரசாமி விடுதலை செய்தார். இந்த தீர்ப்பு கருணாநிதி மட்டுமன்றி தமிழக அரசியல் கட்சிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அருண் ஜெட்லி சந்திப்புக்கும், ஜெயலலிதா விடுதலைக்கும் தொடர்பு இருப்பதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர். இதனை தமிழக பாஜக திட்டவட்டமாக மறுத்தது.

விடுதலைக்கு பின்னர் ஜெயலலிதா, முதலமைச்சராக பதவியேற்க இருந்த தடை நீங்கியது.

ஆனால் இந்த தீர்ப்பை எதிர்த்து கர்நாடக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று திமுக தலைவர் கருணாநிதி, பாமக நிறுவுநர் ராமதாஸ், தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். (இ-5)

## ஜெயலலிதா போடும் முதல் கையெழுத்து

முதலமைச்சராக ஜெயலலிதா பொறுப்பேற்றதும்,100 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்திற்கான கோப்பில், முதல் கையெழுத் திடவுள்ளதாக தகவல் வெளியாகி யுள்ளது.

வீடுகளில் இரண்டு மாதங்களுக்கு, ஒரு முறை, மின் பயன்பாடு கணக்கு எடுக்கப்படுகிறது. வீடுகளில் பயன்படுததும் மின்சாரத்திற்கு, 1 - 100 யூனிட் 101-200, 201-500, 500 யூனிட்டுக்கு மேல் என்ற பிரிவுகளில், கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

500 யூனிட்டிற்கு கீழ் மின்சாரம் பயன்படுத்து வோருக்கு, 1 யூனிட்டுக்கு, மூன்று முதல், 4.60 ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்தப் பிரிவு நுகர்வோருக்கு, குறிப்பிட்ட தொகையை, தமிழக அரசு மானியமாக வழங்குகிறது.

ஆனால், 500 யூனிட்டிற்கு மேல பயன்படுத்துவோர், மானியம் இல்லாமல்முழு கட்டணமும்அதாவது, 1யூனிட், 6.60 ரூபாய் செலுத்த வேண்டும்.

தற்போது வீடுகளில், "ஏசி, பிரிஜ், வோஷிங்மெஷின்,லப்டொப்" உள்ளிட்ட மின் சாதனங்களால், மின் பயன்பாடு அதிகமுள்ளது. இதனால், பல வீடுகளில், இரண்டு மாதங்களுக்கு, 500 யுனிட்டிற்கு மேல் மின்சாரம் பயன்படுத்துவதால், பலர் பாதிக்கப்படுகின்றனர்.

இதையடுத்து, தி.மு.க., - பா.ம.க., உள்ளிட்ட கட்சிகள், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மாதந்தோர்றும் மின் பயன்பாடு கணக்கு எடுக்கப்படும் என தேர்தல் அறிக்கையில் அறிவித்தன.

அதேசமயம், அ.தி.மு.க., தேர்தல் அறிக்கையில், தற்போதைய கணக்கீட்டு முறைப்படி, 100 யூனிட் மின்சாரம், கட்டணம் ஏதும் இல்லாமல், வீடுகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, முதலவராக ஜெயலலிதா, இன்று பதவி ஏற்றதும், 100 யூனிட் இலவச மின்சாரம வழங்கும் கோப்பில், முதல் கையெழுத்து போட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-5)

## ஜெயலலிதாவுக்கு விரலை வெட்டி காணிக்கை செலுத்திய தொண்டர்

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று மீண்டும் ஜெயலலிதா முதலமைச்சரானதை தொடர்ந்து அ.தி.மு.க. தொண்டர் ஒருவர் தனது விரலை வெட்டி காணிக்கை செலுத்தியுள்ளார்.


நாமக்கல் மாவட்டம் ஆண்டகலூரைச் சேர்ந்த தங்கராஜ் (வயது 50) என்பவரே தனது விரலை வெட்டி காணிக்கை செலுத்தியுள்ளார்.

தீவிர அ.தி.மு.க. தொண்டரான இவர், தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று மீண்டும் ஜெயலலிதா ஆட்சியமைதததால் தனது விரலை வெட்டி உண்டியலில் காணிக்கை செலுத்துவதாக அங்குள்ள பிரசித்தி பெற்ற முனியப்பன கோவிலில் வேண்டுதல் வைத்துள்ளார்.

இந்நிலையில், அ.தி.மு.க. வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சராக ஜெயலலிதா பொறுப்பேற்கவுள்ளதை அறிந்த தங்கராஜ், தனது வேண்டுதலபடி ராசிபுரம் முனியப்பன் கோவிலில தனது இடது கை சுண்டு விரலை வெட்டிக்கொண்டார். (இ-5)




# மாடு பிடிப்போம்–நாடு ஆள்வோம்



அழகாபுரி ஊர் மக்கள் ஒரே மகிழ்ச்சியாக இருந்தனர். அதற்குக் காரணம், அன்று தான் பொங்கல் பண்டிகை ஆரம்பமானது.

பரமார்த்தரும் சீடர்களும் கூட மிகவும் சுறுசுறுப்பாய் இருந்தனர். மறுநாள் - மாட்டுப் பொங்கலும் வந்து விட்டது. "குருவே... குருவே.." என்று கத்திக் கொண்டே ஓடி வந்தான் மண்டு. "இன்று சாயங்காலம், ஊர் எல்லையில் நிறைய பந்தயம் எல்லாம் நடக்கப் போகுதாம்!"

"பந்தயமா? என்ன அது?" என்றபடி குருவும சீடர்களும் அவனைச் சூழ்ந்து கேட்டார்கள்.

"காளை மாட்டின் கொம்புகளுக்கு வண்ணம் பூச வேண்டுமாம். அப்புறம், ஜல்லிக் கட்டுகூட நடக்கப் போகுதாம். வெற்றி பெறுபவர்களுக்குப் பல கிராமங்களைத் தரப் போகிறாராம் நம் அரசர்" என்று சொன்னான் மண்டு.

இதைக் கேட்டதும் பரமார்த்தரின் மூளை தீவிரமாக வேலை செய்தது.

"சீடர்களே! எப்படியாவது இந்தப் பந்தயத்தில் நாம் ஜெயித்து விட்டால்.... நான் பல ஊர்களுக்குத் தலைவன் ஆகிவிடுவேன்! உங்களுக்கும் பதவி கிடைக்கும். அப்புறம் நமக்கு எந்தத் துன்பமும் இல்லை"

குருவின் திட்டத்தைக் கேட்ட சீடர்கள் மகிழ்ச்சியால் எகிறி எகிறிக் குதித்தனர்.

"குருவே! நீங்கள் கவலையே படாதீர்கள். எப்படியும் நாங்கள் வெற்றிபெற்றுக் காட்டுகிறோம்!" என்று முட்டாள் சொன்னான்.

"நம் குரு மட்டும் எப்படியாவது ராஜா ஆகி விட்டால்... மகிழ்ச்சியாக இருக்கலாமே! விதம் விதமான குதிரைகள் பூட்டிய தேரில் ஜம்மென்று ஊர்வலம் வரலாம்!" என்று கனவு கண்டான் மூடன்.

"அது மட்டுமா? தெருவில் போனால், எல்லோரும் நம் காலில் விழுந்து விழுந்து கும்பிடுவார்களே!" என்று சிரித்தான், மட்டி.

"ஆமாம், ஆமாம். எனக்கும்கூட இலவசமாக நிறைய சுருட்டுகள் கிடைக்கும். பணத்துக்குப் பதில் சுருட்டையே வரியாகக் கட்டச் சொல்ல வேண்டும்!" என்றார் பரமார்த்தர்.

குருவே! இன்னொரு கட்டளையும் போட வேண்டும். "இனிமேல் புதிதாகக் குதிரைகள் போடும் முட்டைகள் எல்லாம் மன்னருக்கே சொந்தம்" என்று சொல்லி விட்டால், எல்லா குதிரைகளும் நமக்கே கிடைத்து விடும் என்று மடையன் யோசனை சொன்னான்.

"சீடர்களே, அற்புதமான யோசனைகள்! அருமையான எதிர்காலம்! வெற்றி நமக்கே! விடாதீர்கள்... ஓடுங்கள்..." என்று ஆவேசமாய்க் கூச்சலிட்டார், பரமார்த்தார். "குருவுக்கு ஜே" என்றபடி எல்லோரும் ஜல்லிக்கட்டு நடக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

ஒரு வீதியில் குருவும் சீடர்களும் எதிர் பாராத நிகழ்ச்சி நடந்தது. "ஐயா! அந்த மாட்டைப் பிடியுங்கள்" என்று கூச்சலிட்டுக் கொண்டு ஒரு தடித்த அம் மாள் பரங்கிக்காய் போன்ற தன் உடலை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு நடந்து வந்தாள். இலேசாகக் காற்று வீசினால் கூட மூன்று முறை குட்டிக்கரணம் போட்டு உருளும் அளவுக்கு ஒரு பசுமாடு வாயில் நுரை வழிய நொண்டி நொண்டித் தள்ளாடி நடந்துவந்தது. அது, அவளுக்குப் "போக்கு" காட்டிக் கொண்டிருந்தது. அதன் விலாவில் வரிவரியாக எலும்புகள் துருத்திக் கொண்டிருந்தன.

மாட்டுப் பொங்கல் என்பதால் கொம்புகளுக்கு வண்ணம் பூசி, பூவும் சுற்றப்பட்டு இருந்தது.

பொங்கல் தயாரித்த பின் அதைத் தன் அரு மையான பசுமாட்டுக்கு ஊட்டுவதற்காக ஒரு பெரிய கிண்ணத்தில் வைத்திரு ந்தாள். அந்தக் கிண்ணம் அடிக்கடி பசுமாட்டுக்கு மருந்து கரைத்து ஊட்டுவதற்குப் பயன்படுத்தப்படுவது. எனவே ஏதோ மருந்து ஊட்ட வருகிறாள் என்று நினைத்துப் பசு தள்ளாடித் தடுக்கி ஓட்டம் பிடிக்கத் தொடங்கியிருந்தது.

இதற்கிடையே தாடி மீசையும், சுருட்டும் புகையுமாக பரமார்த்த குருவும், அலங்கோல விசித்திரங்களாக அவரது சீடர்க ளும் எதிரே வரவே அவர்களைக் கண்டு மாடு மிரண்டது. "இதோ ஒரு ஜல்லிக்கட்டு காளை! மைதானத்திலிருந்து தப்பி வந்திருக்கிறது!" என்று சீடர்கள் அதைச் சூழ்ந்து கொண்டார்கள்

"விடாதே! விடாதே! வாலைப்பிடி! இதை அடக்கி மன்னரிடம் பரிசு வாங்கி விடலாம்!" என்று குரு கட்டளையிட எல்லா சீடர்களும் ஒரே நேரத்தில் மாட்டின் வாலைப் பிடித்து இழுத்தார்கள். வால் பாதியாக அறுந்தது.

வேதனை தாளாமல் குரல் எழுப்பிய மாடு தன்னிடமிருந்த கொஞ்சம் நஞ்சம் சக்தியையும் திரட்டி, கழுதைபோல் ஒரு உதை விட்டது. இதில் மட்டிக்கும் மடையனுக்கும் மூக்கு பிய்ந்தது. இருவரும் கதறிக் கொண்டு தூரப்போய் விழுந்தார்கள்.

"இது மாடா? அல்லது கழுதையா?" என்று திகைத்த குரு, கொம்பு இருப்பதைப் பார்த்து "பொல்லாத மாடாக இருக்கிறதே! கொம்மைப் பிடியுங்கள்! அப்போதுதான் அடங்கும்!" என்று பதறியவாறே சொன்னார்.

முட்டாளும் மூடனும் மண்டுவும், மாட்டின் மீது போய் விழுந்தார்கள். இவர்கள் பாய்ந்த வேகத்தில் இரண்டு கொம்புகளும் பிய்ந்து கையோடு வந்து விட்டன. பசு கால்களை விரித்துப்படுத்தே விட்டது.

"ஆ..! மாடு அடங்கி விட்டது! அடங்கி விட்டது!" என்று குருவும் சீடர்களும் குதித்தார்கள்.

"ஐயோ! என் கண்ணுன! என் செல்லம்.. போச்சே! தினமும் நாலுபடி பால் கறக்கும் அருமைப் பசுவைக் கொன்று விட்டீர்களே! என்று குண்டுக் கிழவி கண்ணீர் விட்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள். "கவலைப்படாதே பாட்டி! மாட்டை அடக்கிய வீரச் செயலை மன்னரிடம் சொல்லி, கிடைக்கும் பரிசுப் பணத்தில் உனக்கு நஷ்ட ஈடு கொடுத்து விடுகிறோம்!" என்று கூறி அவளைச் சீடர்கள் சமாதானப்படுத்தினார்கள். குற்றுயிராகக் கிடந்த பசு மாட்டை ஒரு கட்டை வண்டியில தூக்கிப் போட்டுக்கொண்டு ஜல்லிக்கட்டு மைதானத்துக்குப் போனார்கள. போய் சேருவதற்கள் மாடு இறந்து விட்டது.

ஜல்லிக் கட்டுக் காளையை அடக்குவதாக நினைத்து நோஞ்சான் பசு மாட்டின் உயிரையும் போக்கிய குருவையும் சீடர்களையும் கண்டு மைதானத்தில் திரண்டிருந்த மக்கள் குலுங்கிக் குலுங்கிச் சிரிததார்கள்.

ஆனால், ஒரு பசுவைக் கொன்ற குற்றத்திற்காகக் குருவுக்கும் சீடர்களுக்கும் சாட்டையடிகள் தரப்பட்டன்.




- 1430 - ஜோன் ஒஃப் ஆர்க் பிரான்சில் பேர்கண்டியரினால் கைது செய்யப்பட்டாள்.
- 1568 - நெதர்லாந்து ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1805 - நெப்போலியன் பொனபார்ட் இத்தாலியின் மன்னனாக முடி சூடினான்.
- 1813 - தென்னமெரிக்க விடுதலைப் போராட்டத் தலைவர் சிமோன் பொலிவார் வெனிசுவேலாவின் முற்றுகைக்குத் தலைமை வகித்துச் சென்று "விடுவிப்பாளர்" எனத தன்னை அறிவித்தார்.
- 1846 - மெக்சிக்கோ ஐக்கிய அமெரிக்கா மீது போரை அறிவித்தது.
- 1865 - வாஷிங்டன், டிசியில் அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவுற்றமை கொண்டாடப்பட்டது.
- 1915 - முதலாம் உலகப் போர்: இத்தாலி அவுஸ்திரேலியா-ஹங்கேரி மீது போரை அறிவித்தது.
- 1929 - மிக்கி மவுசின் முதலாவது பேசும் கார்ட்டூன் "கார்னிவல் கிட்" வெளி வந்தது.
- 1949 - ஜெர்மன் கூட்டாட்சி குடியரசு அமைக்கப்பட்டது.
- 1951 - திபெத்தின் விடுதலைக்கான 17 அம்ச உடன்பாட்டில் திபெத்தியர்கள் கட்டாயமாகக் கைச்சாத்திட வைக்கப்பட்டார்கள்.
- 1958 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்மதி எக்ஸ்புளோரர் 1 தனது பூமியுடனான தொடர்பை இழந்தது.
- 1998 - புனித வெள்ளி உடன்பாட்டிற்கு ஆதரவாக வட அயர்லாந்து மக்களின் 71 விழுக்காட்டினர் வாக்களித்தனர்.

**பிறப்புகள்**


- 1707 - கரோலஸ் லின்னேயஸ், தற்கால வாழ்சூழலியலின் முன்னோடி. (இ. 1778)
- 1920 - காயத்திரி தேவி, ஜெய்ப்பூர் மகாராணி. (இ. 2009)
- 1922 - பாலா தம்பு, இலங்கை இடதுசாரித் தொழிற்சங்கவாதி. (இ. 2014)
- 1951 - அனத்தோலி கார்ப்பொவ், ரஷ்ய சதுரங்க வீரர்.

**இறப்புகள்**

- 1906 - ஹென்ரிக் இப்சன், நவீன நாடக இலக்கியத்தின் தந்தை. (பி. 1828)
- 1997 - அல்பிரட் ஹேர்ஷ்லி, நோபல் பரிசு பெற்றவர். (பி. 1908)
- 1981 - உடுமலை நாராயணகவி தமிழ்த் திரைப்பட பாடலாசிரியர். (பி. 1899)

## பாலா தம்பு

### இடதுசாரித்தொழிற்சங்கவாதி



பிலிப்ஸ் பாலேந்திரா தம்பு அல்லது பொதுவாக பாலா தம்பு அல்லது தோழர் தம்பு என அழைக்கப்படுபவர் இலங்கையின் பிரபலமான தொழிற்சங்கத் தலைவரும், வழக்கறிஞரும் ஆவார். இடதுசாரிக் கொள்கையில் ஊறியவர். இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக 1948 ஆம் ஆண்டு முதல் இறக்கும் வரை சேவையாற்றி வந்தவர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றில் பிரான்சிசு தம்பு பிலிப்ஸ், பியூடிஸ் தங்கம்மா சவரிமுத்து ஆகியோ ருக்கு நீர்கொழும்பில் பிறந்தார். இலங்கை சட்டக் கல்லூரி சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார். ரோயல் கல்லூரியில் விவியன் குணவர்தனாவின் சகோதரர் டனிஸ்டர் குணதிலக்கவுடன் நட்புக் கொண்டதனால், அவர் மூலமாக சூரிய மல் இயக்கத்தில் 1935 ஆம் ஆண்டில் இணைந்தார். இக்காலகட்டத்தில் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத் திய இடதுசாரித் தலைவர்கள் என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, பிலிப் குணவர்தன ஆகியோருடன் இணைந்தார். 1941 இல் லங்கா சமசமாஜக் கட்சியில் சேர்ந்தார். 947ஆம் ஆண்டு அரச ஊழியர் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக இவர் பல்கலைக கழகப் பணியில் இருந்து நீக்கப்பட்டார். அதன் பின்னர் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் இணைந்து 1948 பெப்ரவரியில் அதன் செயலாளர் ஆனார். 1928 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வர்த் தக ஊழியர் சங்கம், பாலா தம்பு செயலாளராக ஆன பின்னர் லங்கா சமசமாஜக் கட்சியின் செல்வாக்குக்குள் வந்தது. இக்கட்சி நான்காம் அனைத்துலக அமைப்பின் உறுப்பினராக இருந்தது. 1963 ஆம் ஆண டில், கொழும்பு துறைமுகத்தில் வேலை நிறுத்தம் ஒன்றை தலைமை தாங்கி நடத்தினார். இது பின்னர் நாடு தழுவிய பொது வேலை நிறுத்த மாக உருவெடுத்தது. பாலா தம்பு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் செயலாளராக இறக்கும் வரை தொடர்ந்து பணியாற்றி வந்ததோடு, உழைக்கும் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு அவ்வப்போது நிர் வாகங்களுடனும், அரசுடனும் பேச்சுக்களில் ஈடுபட்டு தீர்வு கண்டு வந்திருக்கிறார்

# தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் சம்பூர் அனல் மின் திட்டப்பணிகள்

(கொழும்பு)

**சம்பூர் அனல் மின் திட்டப் பணிகளை நிறுத்துவதற்கோ, இயற்கை எரிவாயு மின் திட்டமாக மாற்றுவதற்கோ, இந்தியாவின் அரசுத்துறை நிறுவனமான தேசிய அனல்மின் கழகம், எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

சம்பூர் அனல் மின் திட்டப் பணிகளை நிறுத்துமாறு தமக்கு எந்த உத்தரவும் வழங்கப்படவில்லை என்றும் அதற்கான பணிகளைத் தாம் முன்னெடுத்து வருவதாகவும், திருகோணமலை மின் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் பிரவீன் சக்சேனா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கப்பல்களில் மூலப்பொருட்களை எடுத்து வருவதைக் கவனத்தில் கொண்டே, சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைக்க திட்டமிடப்பட்டதான வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இயற்கை எரிவாயுவை ஏற்றி வரும் கப்பல்கள் கொழும்பு மற்றும் காலி துறைமுகங்களுக்கே வரமுடியும் என்றும், திருகோணமலைத் துறைமுகம் அவற்றுக்குப் பொருத்தமானதல்ல என்றும் இலங்கை மின்சார சபையின் முன்னாள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அனல் மின் திட்டப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக மின்சாரசபைத் தலைவர் அனுர விஜேபாலவும் உறுதி செய்துள்ளார். (இ-5)

# உரியமுறையில் நிவாரணங்கள் அரசினால் வழங்கப்படவில்லை

## மகிந்த குற்றச்சாட்டு



வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசால் உரிய முறையில் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

அனர்த்த நிவாரணங்கள் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலவும்அனர்த்த நிலைமை தொடர்பில் எவர் மீதும் குற்றம் சுமத்த நான் விரும்பவில்லை.எனினும், நிவாரணப் பொருட்கள் உரிய முறையில் வழங்கப்படவில்லை என்றே தென்படுகின்றது.

தலைநகரை அண்டிய பகுதிகளை தூய்மைப்படுத்தி வெள்ளத்தை கட்டுப்படுத்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்து வந்தார்.

அந்த நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்ததனைத் தொடர்ந்து சிறிய வெள்ள நிலைமைகளிலும் கொழும்பு நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் மக்களுக்கு உரிய முறையில் நிவாரணம் வழங்கவில்லை என்ற போதலும், முடிந்தளவு உதவிகளை வழங்குமாறு கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சில அரச அதிகாரிகள் தங்களுடைய பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றத் தவறியுள்ளனர்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் அரச அதிகாரிகள் சுயாதீனமாக தீர்மானங்களை எடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதனால் மக்களுக்கு நிவாரணங்கள் உரிய முறையில் வழங்கப்படவில்லை என மகிந்த ராஜபக்ஷ மேலும் குறம் சுமத்தியுள்ளார். (இ-5)

# சர்வதேச நாணய நிதியம் முதல்கட்ட கடனுதவியை ஜூனில் வழங்குகிறது

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் கட்ட கடனுதவி ஜூன் மாதம் வழங்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்குவதாக ஒப்புக்கொண்ட கடனுதவியின் ஓர் கட்டமாக அடுத்த மாதம் 169 மில்லியன் அமெரிக்க டொலர், வழங்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கடனுதவியின் ஏனைய பகுதிகள் எதிர்வரும் மூன்றாண்டு காலப் பகுதியில் கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது.

சரவதேச நாணய நிதியம் இலங்கைக்கு 1500 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கத் தீர்மானிதுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனை வழிகாட்டல்களை இலங்கை எவ்வாறு பின்பற்றுகின்றது என்பதனை மதிப்பீடு செய்ததன் பின்னரே அடுத்த கட்ட கடனுதவிகள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன.

வரவு செலவுத்திட்ட துண்டு விழும் தொகையைக் குறைத்தல், மூலதனச் செலவைக் குறைத்தல் உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (இ-5)

# உள்ளூராட்சி மன்றங்களை ஆணையாளர்களிடம் ஒப்படைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரி தீர்மானம்

உள்ளூராட்சி மன்றங்களை நிர்வாகம் செய்வதற்கு அரசாங்கம் தற்காலிக ஏற்பாடுகளைச் செய்ய திட்டமிட்டுள்ளது.

தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகப் பணிகளை உரிய அதிகாரி ஒருவரிடம் ஒப்படைப்பது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் குறித்து ஆலோனை நடத்த ஜனாதிபதி அண்மையில், சட்ட மா அதிபர் திணைக்கள சிரேஷ்ட அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளை ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது உள்ளூராட்சிமன்ற அமைச்சு ஒரு நிலைப்பாட்டையும், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றுமொரு நிலைப்பாட்டையும் வெளியிட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இறுதியில் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகப் பொறுப்பு உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு 235 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டு ஆணையாளர்களிடம் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, மொரட்டுவ, தெஹிவளை கல்கிஸ்ஸ உள்ளிட்ட 11 மாநகரசபைகளின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூன் மாதம் 11ஆம் திகதியுடன் பூர்த்தியாகின்றது.

இந்த மாநகரசபைகளின் பதவிக் காலத்தை நீடிக்காது, உரிய அதிகாரிகளிடம் நிர்வாகப் பொறுப்புக்களை ஒப்படைக்க ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவசரமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதில்லை எனவும் இந்த பேச்சுவார்த்தையின் போது தீர்மானிக்கப்பட்டது என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை காலம் தாழ்த்தாது துரித கதியில் நடத்துமாறு மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### வீட்டுக்காரர் விரும்பும் குடித்தனகாரராக இருப்பது எப்படி?

முதல் திகதி வாடகையைக் கொடுக்க முடியாவிட்டால் பரவாயில்லை.ஓடி ஒளியாமல் முகத்தைத் திருப்பிக் கொள்ளாமல் காரணத்தைச் சொல்லிவிட்டு வருவது நல்லது. வாடகையை உரிய திகதியில் தராததைவிட, காரணமோ சமாதானமோ சொல்லாததுதான் பலருக்கு எரிச்சலை ஏற்படுத்தக் கூடும். ஒவ்வொரு முறையும் காரணம் கூற உடல் கூசும் போது முதல் திகதி வாடகையை எப்படியும் கொடுத்து விட வேண்டும் என்ற எண்ணம் தானாக வரும்.

சிறு சிறு கருத்து வேறுபாடுகளைப் பெரிது படுத்த வேண்டியதில்லை. அவற்றை அவ்வப்போது மறந்து விட வேண்டும். இல்லாவிட்டால் அது வெடித்துக் கிளம்பி பூகம்பமாகிவிடும்.

வாடகை கொடுத்தால் ஏதோ சொந்தமாகிவிட்டது போல் எண்ணிக் கொள்வதா என்ன? சிறு சிறு ரிப்பேர்களை நாமே செய்து கொண்டு பெரிய ரிப்பேர்களை மட்டும் அதுவும் வீட்டின் நன்மை கருதி செய்து தரச் சொல்வதாக வீட்டுக்காரரிடம் சொல்லுங்கள்.

வீட்டுக்காரருக்கு அசௌகரியக் குறைவு ஏதும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். ஏற்பட நேர்ந்தாலோ, புதிதாக அசௌகரியக் குறைவு ஏற்பட்டே தீரும்படியான செயல்களில் இறங்கினாலோ அதை அவர் காதில் போட்டு வையுங்கள். இதற்கு நான் தரும் அசௌகரியக்குறைவை நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று அனுமதி கேட்கிறேன் என்று அர்த்தம்.

கஞ்சன் என்றும் முரடன் என்றும் வீட்டுக்காரர் காதுக்கு எட்டும்படி அவரைத் திட்டாதீர்கள். அது உண்மையானாலும் கூட நன்மையையும் நல்லுறவையும் கருதி நல்லபடியாகவே சொல்லுங்கள். அவர்கள் காதுகளில் சொல்லாமல் யாரிடம் சொன்னால் அவர்கள் காதுகளுக்கு எட்டும் என்பதைக் கணக்குப் போட்டுச் சொல்லுங்கள்.

வாடகையை உயர்த்தினால் முடியாது என்று சட்டென மறுக்காமல் எனக்கு சற்று அவகாசம் கொடுங்கள் எனக் கேட்டு இயலாமையைப் பண்புடன் தெரிவியுங்கள். நியாயமிருப்பின் அதை யோசித்துச் சம்மதியுங்கள். பெரும்பாலும் நல்ல குடித்தனக்காரர்கள் என்றால் வாடகை உயராது. தொல்லை கொடுப்பவர்களைக் காலி செய்வதற்கு வாடகை உயர்த்துவதே வழி என்பதாகப் பல வீட்டுக்காரர்கள் எண்ணுகிறார்கள். எனவே தொல்லை கொடுப்பதில் இன்பம் காண்பவர்கள் இதை உணரட்டும்.

கடன்காரர்களைப் பார்ப்பதைக் கூடத் தவிர்க்கலாம். ஆனால் வீட்டுக்காரர் முகத்தில் (அவர் அந்த வீட்டிலேயே இருக்கும் பட்சத்தில்) தினமும் விழிக்க வேண்டுமே!அப்படி இருக்கையில் அவரைப் பகைத்துக் கொள்வது என்பது வயிற்றில் பிள்ளைப் பூச்சியைக் கட்டிக் கொள்வது மாதிரி, எப்போதுமே வீட்டுக்காரரின் தயவு நமக்கு வேண்டும் என விரும்புங்கள்.

உங்கள் வீட்டின் சிறு சிறு விசேடங்களுக்கும் அவரை அழையுங்கள். உறவினர்கள், விருந்தினர்கள் வந்தால் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தும் போது செயற்கை இழை ஓடாத படி பாராட்டுங்கள். சிறு சிறு உதவிகளை மனமுவந்து செய்யுங்கள்.

மெல்ல மெல்ல நெருங்கி, நன்கு பழகி, பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு அவரைக் குடும்ப நண்பராக ஆக்கிக் கொள்ளுங்கள்.

இப்படி ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு பற்றுடனும் பாசத்துடனும் நடந்து கொண்டால் அவர்களால் ஏற்படக் கூடிய தொல்லைகள் நீங்குவதுடன் அவர்மூலம் பல அசௌகரியங்களைச் செய்து கொள்வதும் சாத்தியமாகும்.

**லேனா தமிழ்வாணன்**

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 14.05.2016~14.06.2016

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**கடமையில் கண்ணும், கருத்துமாக இருக்கும் கும்ப ராசி நேயர்களே!**

துர்முகி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் ஜென்ம ராசியில் கேது சஞ்சரிக்கின்றார். சப்தம ஸ்தானத்தில் ராகுவோடு குரு இணைந்து சஞ்சரிக்கின்றார். வக்ர இயக்கத்தோடு சஞ்சரிக்கும் குரு, மே 18 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். அதன் பிறகு அவரது பார்வைக்கு பலன் அதிகம் கிடைக்கப்போகிறது.

சப்தம ஸ்தானத்தில் தனலாபாதிபதியாக விளங்கும் குரு பலம் பெறும் பொழுது, வரவு திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சி கூடும். உறவினர் பகை அகலும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். கல்யாணக் கனவுகள் நனவாகும். கல்விக்காகவும், கலைத்துறை சம்பந்தமாகவும் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குரு பார்க்க கோடி நன்மை என்பதால், சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

வாங்கிய கடனைக் கொடுக்க முடியவில்லையே, கொடுத்த கடனை வசூல் செய்ய முடியவில்லையே என்று நினைத்தவர்களுக்கு இந்த மாதம் பல வழிகளில் நன்மைகள் நடைபெறும். நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் செய்து முடிப்பீர்கள். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புக்ளை ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்று சிந்திப்பீர்கள். திசாபுத்தி பலம் பெற்றவர்கள் அதை ஏற்றுக் கொள்ளலாம்.

மூன்றாமிடத்தை குரு பார்ப்பதால், சகோதர ஒற்றுமை பலப்படும். சகாயஸ்தானாதிபதி செவ்வாய் வக்ரம் பெற்றிருப்பதால், வழக்குகளில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் இன்னும் முடிவிற்கு வரவில்லையே என்ற கவலை மேலோங்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், மேலதிகாரிகளின் ஆதரவோடு மிகச் சிறந்த பலனைக் காண்பீர்கள். சக பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும்.

ராசிநாதன் சனி, வக்ர இயக்கத்தில் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை உண்டு. உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கோ, உடல்நலக் கோளாறுகள் உருவாகி விரயங்களை ஏற்படுத்தலாம். மாற்று மருத்துவம் உடல் நலத்தைச் சீராக்கும். வைகாசி விசாகத்தன்று சண்முகநாதப் பெருமானை வழிபடுவதன் மூலம், வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள இயலும்.

**ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!**


உங்கள் ராசிக்கு 4,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். மே 20ஆம் திகதி சுக ஸ்தானாதிபதி சுக்ரன், சுக ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கப் போகின்றார். எனவே வாய்ப்புகள் வந்து கொண்டேயிருக்கும். பொருளாதார நிலை உயரும். புதிய பாதை புலப்படும். ஆடை, ஆபரண சேர்க்கை

## கல்யாணக்கனவுகள் நனவாகும் நேரம்!

அதிகரிக்கும். பெற்றோர் வழியில் இருந்த பரச்சினைகள் அகலும். வாகன மாற்றம் செய்ய முன் வருவீர்கள்.

**ரிஷப புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்குபவர் புதன். அவர் ஜூன் 3ஆம் திகதி ரிஷப ராசிக்குச் செல்கின்றார். புத்திர ஸ்தானாதிபதி கல்வி ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது, பிள்ளைகளின் கல்வி




மேன்மை வெளிப்படும். குழந்தைகளின் வெளிநாட்டுப் படிப்பிற்காகவும், வேலைக்காகவும் செய்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு.

**மிதுன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 13ஆம் திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். சுகாதிபதி புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளால் மேன்மை கிட்டும். அவர்களுக்கு வேலை கிடைத்து அதன் மூலம் வருமானங்களும் வந்து சேரும். பூர்வீக சொத்துக்களில் ஒரு பகுதியை விற்று, அதன் மூலம் வரும லாபத்தை தொழிலுக்கு மூலதனமாக்கிக் கொள்வீர்கள். சான்றோர்களின சந்திப்பு கிடைக்கும்.

இம்மாதம் துர்க்கை வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும் மாதம இது. இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும். கணவன்-மனைவிக்குள அன்னியோன்யம் அதிகரிக்கும். குழந்தைகளின் நன்மை கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. சுபகாரிய நிகழ்வுகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். தாய்வழி ஆதரவு பெருகும். அரசியலில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். அடகுவைத்த நகைகளை மீட்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நினைத்த இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். குரு தட்சிணாமூர்த்தி வழிபாடு குதூகலத்தை நிலைக்க வைக்கும்.



**பார்த்த மாத்திரத்திலேயே மற்றவர்களின் குணத்தைப் புரிந்து கொள்ளும் மீன ராசி நேயர்களே!**

துர்முகி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் குரு வக்ர இயக்கத்தில் இருக்கின்றார். வாக்கு, தனம், குடும்பம் எனப்படும் இரண்டாமிடத்தில் சுக்ரனும், புதனும் இணைந்து சஞ்சரிக்கின்றார்கள். 9இல் செவ்வாய் சொந்த வீட்டில் சஞ்சரிக்கின்றார்.

எனவே வரவு திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சி சென்ற மாதத்தைக் காட்டிலும் கூடுதலாகவே இருக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் முன்னேற்றம் ஏற்படும். உறவினர்கள் பகைமாறி, உற்சாகத்தோடு வந்திணைந்து பணிபுரிவர். தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர். மே 18 ஆம் திகதி குரு வக்ர நிவர்த்தியாகி விடுவதால், அதன் பிறகு படிப்படியான முன்னேற்றங்கள் வந்து சேரும்.

பலம் பெற்ற குருவின் பார்வை 2,10, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே குடும்பத்தினரின் குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்வீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். வீடு கட்டவும், தொழில் தொடங்கவும் வங்கிகளின் உதவியை நாடியவர்களுக்கு சலுகைகள் கிடைக்கும். சொத்துக்களால் லாபம் உண்டு. செவ்வாய் வக்ர இயக்கத்தில் இருப்பதால் வாங்கிய சொத்துக்களில் ஒரு சிலருக்கு பிரச்சினைகள் வந்திருக்கலாம். பத்திரப் பதிவில் தடைகளும், தாமதங்களும் ஏற்பட்டிருக்கலாம். அந்த நிலை மாறும்.

ஆதரவுக்கரம் நீட்ட அரசியல்வாதிகளும் முன்வருவர். சூரியன், சனி பார்வையால் ஒரு சிலருக்கு புதிய வழக்குகள் வரலாம். வருமானப் பற்றாக்குறை அகன்று, பொருளாதார நிலை உயர வடிவேலன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். குறிப்பாக வைகாசி விசாகத் திருநாளில் அருகில் உள்ள முருகப்பெருமான் ஆலயத்திற்கு சென்று தீபம் ஏற்றி வழிபட்டு வாருங்கள். தனாதிபதி செவ்வாயோடு சனியும் இணைந்திருப்பதால் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!**

## பயணங்களால் பலன் கிடைக்கும் நேரம்!

3,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன், மே 20ஆம் திகதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக சகோதரி வழிப் பிரச்சினைகள் சமாதானம் அடையும். உத்தியோகத்திற்காக செய்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். விலை உயர்ந்த பொருட்களை கையாளும் பொழுது கவனம் செலுத்துங்கள். வீடு மாற்றங்கள் இயல்பாக வந்து சேரலாம்.

**ரிஷப புதனின் சஞ்சாரம்!**




ஜூன் 3ஆம் திகதி ரிஷப ராசிக்கு புதன் செல்லப் போகின்றார். 4,7 ஆகிய இடங்களுக்கான அதிபதி சகாய ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கும் பொழுது, தாய்வழி ஆதரவு கிடைக்கும். பூமி விற்பனையில் எதிர்பார்த்த லாபம் உண்டு. வாழ்க்கைத் துணை வழியே இருந்த பிரச்சினைகள் அகலும். கல்யாண வாய்ப்புகள் கை கூடும். எப்பொழுதோ குறைந்த விலையில் வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது அதிக விலைக்கு விற்பனையாகும்.

**மிதுன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 13ஆம் திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். அதே நேரத்தில் ரிஷப ராசியில் புதன் வலிமையிழந்து சஞ்சரிக்கின்றார். பரிவர்த்தனை யோகம் செயல்பட்டாலும் கூட பண வரவில் தடுமாற்றங்கள் ஏற்படும். பயணங்கள் அதிகரிக்கும். நீண்ட தூரப் பயணத்தால் ஆதாயம் உண்டு. அரசியல் வாதிகளால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர்.


இம்மாதம் நவக்கிரக வழிபாடு நன்மையை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இந்த மாதம் ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். மருத்துவச் செலவுகள் குறையும். வருமானம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். மேற்படிப்பிற்காக எடுத்த முயற்சிகள் அனுகூலமாகும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். சகோதரர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தெய்வீகப் பயணங்களை திடீர் திடீரென மேற்கொள்வீர்கள். மாதக் கடைசியில் குடும்பத்தில் மங்கல காரியங்கள் நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட இடத்தில் இடமாறுதல் கிடைக்கும். அம்பிகை வழிபாடு இன்பம் வழங்கும்.

(தொடரும்)

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு வான், கடல் மூலம் இந்தியாவின் உதவிகள்


இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு மனிதாபிமான உதவிகளை அயல் நாடான இந்தியா வழங்கி வருகிறது.

நேற்று முன்தினம் இந்திய அரசு அனுப்பிய 80 டொன் நிவாரணப் பொருட்கள் கடல் மூலமாகவும், ஆகாயம் மூலமாகவும் இலங்கையை வந்தடைந்தன.

முதற்கட்டமாக 30 தொன் பொருட்களுடன் இந்திய கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.எஸ் சட்லெக் மற்றும் ஐ.என்.எஸ்.சுனைனா ஆகிய இரு யுத்தக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன. இரண்டாம் கட்டமாக 50 தொன் பொருட்களுடன் சி 17 விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

அதில் 700 கொட்டகைகள், 1000 தார்ப்பாய்கள், 10 மின் பிறப்பாக்கி இயந்திரங்கள், 100 அவசர சமிக்ஞை விளக்குகள், 10 ஆயிரம் பேருக்கு தொற்று நோய்களுக்கு எதிரான மருந்துகள், ஆடைகள், குடைகள் மற்றும் நீர் சுத்தி கரிப்பு இயந்திரங்கள் ஆகியன அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு திலங்கவிடம் அரசாங்கம் கோரிக்கை

ஶ்ரீலங்கா கிரிக்கெட் தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால விடம் அரசாங்கம் கோரியுள்ளதாக ஞாயிறு பத்திரிகையொன்று முதல் பக்கச் செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவை அமைச்சுப் பதவியொன்றை பெற்றுக்கொண்டு ஶ்ரீலங்கா கிரிக்கெட் தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு கோரப்பட்டுள்ளதாக நம்பத் தகுந்த தகவல்களை ஆதாரம் காட்டி அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் கடந்த வாரம் திலங்க சுமதிபால விடம் விசேட பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஶ்ரீலங்கா கிரிக்கெட் தலைமைப் பதவியிலிருந்து விலகுவது குறித்து திலங்க சுமதிபால இதுவரையில் எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை.

அவ்வாறு தீர்மானம் எடுத்தால் அமைச்சரவை அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொள்வார் என பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஶ்ரீலங்கா கிரிக்கட் தலைவர் பதவியிலிருந்து திலங்கவை நீக்குமாறு முன்னாள் இலங்கை அணித் தலைவரும் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஆளும்கட்சி எம்.பிக்களுக்கு விசேட வாகனச் சலுகையாம்

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட வாகன சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

அமைச்சு, பிரதி அமைச்சு அல்லது இராஜாங்க அமைச்சுப் பதவி வகிக்காத ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மொன்டேரோ ரக வாகனங்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஞாயிறு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, அமைச்சுப் பதவிகளை வகிக்காத நாற்பது ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மொன்டேரோ வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த திட்டத்தின் முதல் கட்டமாக பத்து அதி சொகுசு மொன்டேரோ ரக வாகனங்கள் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் இரண்டு மாதங்களில் வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

அமைச்சுப் பதவி வகிக்காத மாவட்ட இணைப்புக் குழுக்களின் தலைமைப் பதவி வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் அதி சொகுசு வாகனம் வழங்க முன்னதாக தீர்மானிக்கப்பட்ட போதிலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய அனைத்து ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மொன்டேரோ ரக வாகனங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 728


விமலேந்திரன்




அச்சு





கஜரூபன்




ஜெய்




சங்கவி




வின்ஜக்ஷன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

164

## ரிக்ஷாக்காரன் மூலம் எம்.ஜி.ஆருக்கு தேசிய விருது

...நவரசங்களும் கொண்ட கதையை எம்.ஜி.ஆருக்கு ஏற்ற வகையில் சத்யா மூவிஸ் கதை இலாகா உருவாக்க, திரைக் கதையை ஆர்.எம். வீரப்பன் அமைத்தார். வசனத்தை ஆர்.கே. சண்முகம் எழுத, டைரக்‌ஷனை எம். கிருஷ்ணன் கவனித்தார்.

இப்படத்தில் எம்.ஜி.ஆரின் ஜோடியாக மஞ்சுளா நடித்தார். மற்றும் அசோகன், மனோகர், தேங்காய் சீனிவாசன், சோ, ஐசரி வேலன், பத்மினி, ஜோதிலட்சுமி, ஜி.சகுந்தலா, ஜெயகுமாரி, விஜய சந்திரிகா ஆகியோர் நடித்தனர்.

29.05.1971 இல் வெளிவந்த ரிக்ஷாக்காரன் பெரிய வெற்றிப்படமாக அமைந்தது.

எம்.ஜி.ஆரின் நடிப்பு ரசிகர்களைக் கவர்ந்தது. சண்டைக்காட்சிகள் புதுமையாகவும் விறுவிறுப்பாகவும் இருந்தன.

எம்.எஸ்.விஸ்வநாதன் இசையமைப்பில் வாலி இயற்றிய அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் அது ஆணவச் சிரிப்பு, பொன்னழகைச் சிந்தும் பெண்மை, ஆணிப்பொன் தேர்கொண்டு, கடலோரம் வாங்கிய காற்று, அவிநாசிமணி எழுதிய கொல்லி மலைக்காட்டுக்குள்ளே ஆகிய பாடல்கள் ஹிட்டாக அமைந்தன.

சென்னை தேவி பாரடைஸ் தியேட்டரில் 142 நாட்களும் கிருஷ்ணாவில் 142 நாட்களும் சரவணாவில் 104 நாட்களும் ஓடியது.

தமிழ்நாட்டில் மொத்தம் 12 தியேட்டர்களில் 100 நாட்கள் முதல் 150 நாட்கள் வரை ஓடி வசூலைக் குவித்தது.


**பாரத் விருது**

1971 ஆம் ஆண்டின் அகில இந்திய சிறந்த நடிகராக எம்.ஜி.ஆரை மத்திய அரசு தேர்வு செய்து பாரத் விருதை வழங்கியது. தமிழ் நாட்டில் முதன்முதலாக பாரத் விருது பெற்றவர் எம்.ஜி.ஆர்.தான்.

ஆயினும் இந்த விருது கொடுக்கப்பட்டதை சிலர் விமர்சித்த காரணத்தால் விருது எனக்கு வேண்டாம் என்று எம்.ஜி.ஆர். திருப்பிக் கொடுத்தார்.

**நீரும் நெருப்பும்**

1949 இல் ஜெமினி தயாரித்த அபூர்வ சகோதரர்கள் படத்தின் கதையை நியோ மணிஜே சினி புரொடக்‌ஷன்ஸ் சார்பில் டின்ஷா டி.தெஹ்ராணி நீரும் நெருப்பும் என்ற பெயரில் மீண்டும் தயாரித்தார்.



அபூர்வ சகோதரர்கள் படத்தில் எம்.கே.ராதா நடித்த வேடத்தில் எம்.ஜி.ஆரும் பானுமதி நடித்த வேடத்தில் ஜெயலலிதாவும் நடித்தனர். வசனத்தை ஆர்.கே.சண்முகம் எழுத, ப.நீலகண்டன் டைரக்ட் செய்தார்.

இந்தப்படம் 18.10.1971 இல் வெளியாயிற்று. சிறப்பு காட்சிகளுக்கு எம்.கே.ராதா வந்திருந்து எம்.ஜி.ஆரின் நடிப்பைப் பாராட்டினார்.

எனினும் அபூர்வ சகோதரர்கள் ஏற்கனவே மிகச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு மிகப்பெரிய வெற்றியைப் பெற்று விட்டதால் அது அடைந்த சிகரத்தை நீரும் நெருப்பும் நெருங்க முடிய வில்லை.

**ஒரு தாய் மக்கள்**

நாஞ்சில் புரோடக்‌ஷன்ஸ் சார்பில் டி.ஏ.துரைராஜ் தயாரித்த படம் ஒரு தாய் மக்கள்.

இதில் எம்.ஜி.ஆருடன் ஜெயலலிதா இணைந்து நடித்தார்.

சொர்ணம் வசனம் எழுத, ப.நீலகண்டன் டைரக்ட் செய்தார்.

இது சராசரிப் படமாக அமைந்தது.

தோல்வி அடைந்த ஒரு படத்தின் கதையை எம்.ஜி.ஆரை வைத்து மீண்டும் படமாக எடுத்தார் சின்னப்ப தேவர். நல்ல நேரம் என்ற அப்படம் மிகப் பெரிய வெற்றி பெற்றது.

**தெய்வச் செயல்**

சின்னப்ப தேவரின் தண்டாயுதபாணி பிலிம்ஸ் 1967 இல் மேஜர் சுந்தர ராஜனை கதாநாயகனாக நடிக்க வைத்து தெய்வச் செயல் என்ற படத்தைத் தயாரித்தது. (தொடரும்)

# தமிழகம், ஆந்திரத்தை அச்சுறுத்திய "ரோனு" புயல் பங்காளதேசத்தில் கரை கடந்தது

## 24 பேர் பலி, 100 பேர் படுகாயம்

**பங்காளதேசத்தின் தெற்கு கடலோர பகுதியில் நேற்று முன்தினம் கரையை கடந்த "ரோனு" புயலுக்கு 24 பேர் பலியாகினர். மேலும் 100-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.**

பங்காளக் கடலில் மையம் கொண்டிருந்த "ரோனு" புயல் இலங்கையில் மோசமான பாதிப்பை ஏற்படுத்திய பின் சென்னை அருகே மையம் கொண்டது. இதனால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் கடந்த சில தினங்களுக்கு முன் கனமழை பெய்தது. பின்னர் இந்தப் புயல் வடக்கு நோக்கி நகர்ந்து ஆந்திரா மற்றும் ஒடிசா கடலோர மாவட்டங்களில் கனமழையை ஏற்படுத்தியது.



இந்நிலையில் "ரோனு" புயல் வட கிழக்கு திசையில் நகர்ந்து பங்காள தேசத்தின் பாரிசால் - சிட்ட காங் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் மணிக்கு 62 - 88 கி.மீ. வேகத்தில் கரையை கடந்தது. பங்காள தேசத்தின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் பலத்த காற்றுடன் கனமழை கொட்டியது. இதனால் பல இடங்களிலும் வெள்ளப் பெருக்கும் நிலச்சரிவும் ஏற்பட்டது.

இந்நிலையில் சிட்டகாங் மாவட்டம், சிட்டகுண்டு என்ற இடத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் ஒரு பெண்ணும் அவரது குழந்தையும் வீட்டுடன புதையுண்டனர். போலா தீவின, தாஜ்முதின் நகரில் இருவரும், பதுவகாலி என்ற இடத்தில் சுவர் இடிந்து விழுந்து ஒரு பெண்ணும் இறந்தனர். இதுதவிர புயல், மழை தொடர்பான பல்வேறு சம்பவங்களில் 24 பேர் இறந்தனர். மேலும் 100-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

மெகனா நதியில் மணல் ஏற்றி வந்த சரக்கு கப்பல் கவிழ்ந்ததில் 4 பேரை காணவில்லை.

தெற்கு பங்காளதேசத்தின் பல் வேறு மாவட்டங்களில் ஆயிரக் கணக்கான மரங்கள், மின்கம் பங்கள் சாய்ந்தன. முன்னதாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அப்புறப்படுத்தப்பட்டு, 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிவாரண முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளதாக பங்காளதேச பேரிடர் மேலாண்மைத் துறை தெரிவித்தது. கடல் மற்றும் ஆற்று துறை முகங்களை மூட உத்தர விட்ட அதிகாரிகள், மீன்பிடி படகுகள் கடலுக்குச் செல்லவும் தடை விதித்தனர். (இ-5)

# விண்கலத்தை விண்வெளியில் விட்டு பத்திரமாக தரை இறங்கும் ரொக்கெட்

## இன்று ஏவப்படும்



விண்கலங்களை, செயற்கை கோள்களை செலுத்தும் வாகனமாக ரொக்கெட் பயன்படுகிறது. இப்படி விண்வெளியில் ரொக்கெட்டை செலுத்துகிறபோது, விண்கலம் திட்டமிட்டபடி பிரிந்து சென்ற பின்னர், அந்த ரொக்கெட் கடலில் விழுந்து வீணாகி விடுவது வழக்கம்.

அமெரிக்கா இதில் ஒரு முன்னேற்றத்தை உருவாக்கியது. அங்குள்ள ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம்தான் அந்த முன்னேற்றத்தை உருவாக்கியது. அது, ஒரு முறை பயன்படுத்தி விட்டு மீண்டும் பயன்படுத்தத்தக்க பாகங்களை கொண்ட பால்கன்-9 ரொக்கெட்டை உருவாக்கியது.

இந்த ரொக்கெட், விண்வெளியில் விண்கலம் பிரிந்து சென்ற பின்னர் பூமிக்கு பத்திரமாக திரும்பிவிடும்.

இந்த நிறுவனம் முதன்முதலாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பால் கன்-9 ரொக்கெட்டை ஒரு செயற்கைக்கோளுடன் விண்ணில் செலுத்தியது. அந்த செயற்கை கோள் பிரிந்து சென்ற பின்னர், ரொக்கெட், கேப்கேனவரலில் உள்ள ஏவுதளத்தில் பத்திரமாக தரை இறங்கியது. இது ஒரு பெரிய சாதனையாக கருதப்பட்டது.

அதைத் தொடர்ந்து தரையில் ரொக்கெட்டை இறக்கியது போன்று கடலில் தரை இறக்குவதற்கான முயற்சியை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் முயற்சித்தது. ஆனால் இந்த முயற்சி 4 முறை தோல்வி கண்டது.

5ஆவது முறையாக கடந்த ஏப்ரல் மாதம், கடலில் மிதக்கும் ஏவுதளத்தில் இருந்து இந்த பால்கன்-9 ரொக்கெட்டை டிராகன் விண்கலத்துடன விண்ணில் செலுத்தியது. டிராகன் விண்கலம் பிரிந்த பின்னர் ரொக்கெட் கடலில் மிதக்கும் தளத்தில் தரை இறக்கப்பட்டது.

இந்நிலையில் இப்படி மீண்டும் பயன்படுத்தத்தக்க ரொக்கெட்டை உருவாக்கும் சாதனை முயற்சியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு இஸ்ரோவின் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

அதன் முதல்படியாக அப்படியொரு ரொக்கெட்டின் மாதிரியை விட 6 மடங்கு சிறியதாக கிட்டத்தட்ட ஒரு சிறிய கார் அளவில் ஆர்.எல்.வி.-டி.டி. என்ற பெயரில் ரூ.95 கோடியில் உருவாக்கி உள்ளனர். அது, ஒன்றே முக்கால தொன் எடை கொண்டது.

இந்த ஆர்.எல்.வி.-டி.டி. ரொக்கெட்டை பெங்களூருவில் உள்ள தேசிய விண்வெளி ஆய்வுக கூடத்துக்கு அனுப்பி, ஒலியியல் சோதனைக்கு உட்படுத்தினர். பல்வேறு சோதனைகளை தொடர்ந்து இந்த ரொக்கெட் ஏவுவதற்கு தயார் ஆனது. இது ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து இன்று விண்ணில் ஏவப்படுகிறது.

முழுக்க முழுக்க இந்திய தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த செலுத்துவாகனத்தை செலுத்தி சோதித்து பார்ப் பதற்கான இறங்குவரிசை ஏற்பாடு (கவுண்ட் டவுன்) தொடங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தின் ஏவுதளத்தில் இருந்து இன்று காலை 9.30 மணியளவில் இது விண்ணில் செலுத்தப்படுகிறது.

இது 17 மீட்டர் நீளமும், 1.75 தொன் எடையும் கொண்டது. இதன முதல் பகுதி 'சாலிட் புரோ பலன்ட் பூஸ்டர்' ரொக்கெட்டாகவும், 2ஆம் பகுதி 6.5 மீட்டர் நீளம் கொண்ட விமானத்தின் முன் பகுதி போன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் பார்ப்பதற்கு ரொக்கெட்டின் உச்சியில் அமர்ந்திருக்கும் விமானம் போல காட்சி அளிக்கிறது. (இ-5)

# தயவு செய்து யாரிடமும் சொல்லாதீர்கள்

## தொழில் ரகசியம்



நியூயோர்க் என்பது பரோ என்றழைக்கப்படும் ஐந்து தீவுகளால் ஆன நகரம். அந்த ஐந்தில் ஒன்று மான்ஹாட்டன். மாடி ஏறி சொர்க்கம் போக சௌகரியமாக வானம் வரை அடுக்கு மாடி கட்டிடங்கள் தடுக்கி விழுந்தால் இருக்குமே, அந்த இடம்.

அங்கு சென்றால் ஈஸ்ட் வில்லேஜ் என்ற இடத்திற்கு மறக்காமல் செல்லுங்கள். செயிண்ட் மார்க் பிளேஸ் எங்கே என்று விசாரியுங்கள். டாம்ப்கின்ஸ் ஸ்கொயர் பார்க் அருகில் இருக்கிறது. அங்கு பழைய கட்டிடங்கள், புராதன சாமான் விற்கும் கடைகள் அருகில் 'க்ரிஃப் டாக்ஸ்' என்ற சின்ன ரெஸ்டாரண்ட் இருக்கும். ஹாட் டாக் என்ற பதார்த்தம் அங்கு பிரசித்தம். வாசல் மரப் படிகளில் இறங்கி நுழையுங்கள். உள்ளே பழைய ரெலிஃபோன் பூத் கண்ணில் படுகிறதா என்று தேடுங்கள். லேசில் தெரியாது. தேட வேண்டும். பூத் எங்கே என்று யாரிடமும் கேட்காதீர்கள். எல்லோரும் தெரியாது என்று தான் சொல்வார்கள்.

பூத்தை கண்டுபிடித்து போனை எடுங்கள். அக்கால கருப்பு டயல் வளைய போன். அதை சுழற்றாதீர்கள். ஒன்றும் ஆகாது. ரீசிவரை காதில் வைத்து போனில் இருக்கும் பஸ்ஸரை இரண்டு முறை அழுத்துங்கள்.

மறுமுனையில் ஒரு குரல் ஒலிக்கும். 'ரிசர்வேஷன் இருக்கிறதா?'

ஏன், எதற்கு, யார் இது என்று உங்கள் மனம் குழம்பும்.

உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் பூத் பின்னால் பலகை ஒன்று திறக்கும். அது ஒரு ரகசிய கதவு. தைரியமாக நுழையுங்கள். எத்தனை படம் பார்த்திருப்பீர்கள. உள்ளே புதையல், சுரங்கம், ரம்பா மேனகை நடனமெல்லாம் இருக்காது. இருந்தால் அந்த இடத்தை ஏன் உங்களுக்கு சொல்லப் போகிறோம். அங்கேயே தனியாய் செட்டில் ஆகியிருக்க மாட்டோமா!

உள்ளே இருப்பது சரக்கடிக்கும் பார்!' பாரின் பெயர் 'Please Don't Tell'. அதாவது 'யாரிடமும் தயவுசெய்து சொல்லாதீர்கள்'. என்ன அழகான பெயர் பாருங்கள்.

நியூயோர்க் நகரில் இந்த பார் பிரசித்தம். சின்ன பார் தான். மொத்தம் 45 இருக்கைகள். யாரும் ரைட் ராயலாக சென்று அமர்ந்து ஓர்டர் செய்ய முடியாது. ரிசர்வேஷன் வேண்டும். மதியம் மூன்று மணி முதல் அடுத்த நாளுக்கு ரிசர்வேஷன் ஏற்கப்படும். அரை மணி நேரத்தில் புக்கிங் முடிந்துவிடும். தத்கல் வசதியெல்லாம் கிடையாது. தெய்வகடாட்சம் இருந்தால் மட்டுமே பாரின் சன்னிதானத்திற்கு செல்லும் சந்தர்ப்பம் வாய்க்கும்!

இத்தனைக்கும் இந்த பார் இன்றுவரை விளம்பரம் செய்ததில்லை. வெளியே பெயர் பலகை கூட வைக்காத பிருக்கிருதிகளா விளம்பரம் செய்யப் போகிறார்கள். பல காலமாக இருட்டு அறையில் முரட்டு சரக்கு விற்று சக்கைப் போடு போடுகிறார்கள்.

எல்லா மார்கெட்டர்களும் பிராண்டை பிரபலப்படுத்த போஸ்டர், விளம்பரம் என்று படாதபாடு படும் போது இந்த பார் மட்டும் ஏன் இப்படி செய்கிறது. அதை விடுங்கள். விளம்பரம் இல்லாமல் எப்படி வெற்றி பெறுகிறது?

எல்லாம் சைக்காலஜி தான், வேறென்ன. பிராண்டை பிரபலப் படுத்த ஒரு சிறந்த வழி வர்ட் ஒஃப் மவுத். வாய் வழி செய்தி பரவும் மார்க்கெட்டிங். விளம்பரம் சொல்வதை விட தெரிந்தவர்கள் சொல்வதை நம்புகிறோம். தெரிந்தவர் சொன்னார் என்று தேடி பிடித்து ஒரு ஹோட்டல் செல்கிறோம். நாலு பேர் நன்றாக இருந்தது என்றால் குடும்பத்தோடு அவர்கள் சொன்ன திரைப படத்தை பார்க்கிறோம்.

ஏழு கடல், தீவு, ஃபோன், ரிசர்வேஷன், பூத் மேட்டரை எல்லாம் தாண்டி பாரில் குடித்தவர்கள் சும்மா இருப்பாரா? பாரின் புராணம் முதல் சைட் டிஷ் சமாச்சாரம் வரை ஒரு பாடு அனைவரிடமும் ஜபிக்க மாட்டார்களா?

கேட்பவர்களும் சும்மா இருப்பார்களா? ஏதோ அண்டர்க்ரவுண்ட் பாராம். சொகுசான பாதாளத்தில் சோமபான சப்ளையாம். சென்றவர்களுக்கு மோட்சம் கிடைக்கிறதாம். குடித்தவர்களுக்கு சகல சௌபாக்கியம் கிட்டுகிறதாம் என்று கன்னத்தில் போட்டபடி காவடி எடுக்காத குறையாக அந்த பாருக்கு ஷேத்திராடனம் செல்ல மாட்டார்களா?

அதுதான் நடக்கிறது. பாதாள பாரில் பிதுங்குகிறது கூட்டம். அண்டர்க்ரவுண்ட் பாரில் அனுதினம் அடிதடி. பார் தான் சீக்ரெட். இதன் மகிமை உலக ஃபேமஸ்!

ரகசியங்கள் பற்றி ஒரு ரகசியம் சொல்கிறேன். ரகசியம் ரொம்ப காலம் ரகசியமாக நீடிப்பதில்லை. நண்பர் உங்களிடம் ஒரு விடயம் கூறி 'இந்த விடயம் நமக்குள்ளே இருக்கட்டும். யாரிடமும் சொல்லாதே' என்றால் 'சே, யாரிடமும் சொல்லமாட்டேன்' என்பீர்கள். அவர் போனதும் என்ன செய்வீர்கள் என்று தெரியாதா!

மெனெக்கெட்டு ஃபோன் போட்டு யாரிடமாவது சொன்னால்தான் உங்கள் தலை வெடிக்காமல் தப்புகிறது. அதுவும் சொல்லிவிட்டு சும்மா இருப்பீர்களா? முத்தாய்ப்பாக 'இத யார்கிட்டேயும் சொல்லாத' என்று கூறுவீர்கள். அவரும் 'என்னை உனக்குத் தெரியாதா' என்று கூறி அடுத்த நிமிடம் அடுத்தவருக்கு ஃபோன் செய்வார். இனி அந்த ரகசியம் யாருக்காவது தெரியாமல் இருந்தால்தான் அதிசயம்!

மக்களை ஈர்ப்பது இந்த ரகசிய மேட்டர் மட்டுமல்ல. யார் வேண்டுமானாலும் ஈசியாக செல்லக் கூடிய அல்ப பாரை அதற்கு நேரெதிராக மாற்றியமைத்து ரிசர்வேஷன் வேண்டும், கொஞ்சம் இருக்கைகள் தான், பந்திக்கு முந்த வேண்டும் என்று பரபரப்பு காட்டும் போது பார் மீது ஈர்ப்பு கூடுகிறது. அங்கு சென்று? குடிக்காமலேயே கிக் கிடைக்கிறது. எளிதில் கிடைக்காத எதன் மீதும் மதிப்பு வரும் என்பதை விளக்கும் பற்றாக்குறை கோட்பாட்டை பற்றி இப்பகுதியில் ஏற்கெனவே பார்த்தோமே.

குடித்தபின் பில் தந்து பணத்தை பிடுங்கி குடிகாரர்களை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளத்தான் பல பார்கள் பார்க்கும். ஆனால் இது தான் ஸ்பெஷல் பார் ஆயிற்றே. குடித்து முடித்து கிளம்புகையில் சர்வர் உங்களிடம் விசிடிங் கார்ட் தருவார். கருப்பு கலர் கார்ட்டில் சிவப்பு கலரில் 'ப்ளீஸ் டோண்ட் டெல்' என்று எழுதி அதன் கீழ் ஒரு டெலிஃபோன் நம்பர் இருக்கும்.

பார் ஓனர் சைக்காலஜி தெரிந்தவர். பாரை ஊர் முழுவதும் பரப்பும் நோக்கத்துடன் இதை யாரிடமும் கூறாதீர்கள் என்கிறார். அடித்த சரக்கின் போதை தெளிவதற்குள் நீங்கள் இரகசியத்தை அறுபது பேரிடமாவது சொல்வீர்கள் என்று அவருக்குத் தெரியும். பத்தாதற்கு டெலிஃபோன் நம்பர் வேறு தந்திருக்கிறார். ஊரெல்லாம் ஃப்ரீயாக பிராண்ட் பற்றி உங்கள் செலவில் பரப்புவீர்கள் என்று அவருக்கு பரிபூரணமாகப் புரியும். குடித்தவர்கள் உண்மையை கக்கி விடுவார்கள் என்று சும்மாவா சொன்னார்கள்!

பேதை மாந்தருக்கு போதையோடு பாதையும் போட்டிருக்கிறார் மனிதர்.

எம் கவலையெல்லாம் இம்மாதிரி பார் நம்மூரில் இல்லையே என்பதுதான். யாருக்கும் தெரியாமல் குடிப்பவர்களுக்கு எவ்வளவு சௌகரியமாக இருக்கும்!

# லங்கா ஹொஸ்பிட்டலை வாங்க சிங்கப்பூர் நிறுவனம் முயற்சி



லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோப்பரேஷன் லிமிட்டெட்டின் பெருமளவான பங்குகளை கொள்வனவு செய்வதில் சிங்கப்பூர் ஹொஸ்பிட்டல்ஸ் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் உரிமையாண்மையின் கீழ் இயங்கி வரும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸின் உரிமையாண்மையை தனியார் துறைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானிக்கும் பட்சத்தில் அதன் மீது முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வமாக உள்ளதாக சிங்கப்பூர் ஹொஸ்பிட்டல்ஸ் தொடர் அறிவித்துள்ளது.

இந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாடல் பேரம் பேசலை முன்னணி அரசியல் பிரமுகர் ஒருவர் முன்னெடுத்து வருவதாகவும், மேலதிக உரையாடல்களுக்காக சிங்கப்பூரின் அதிகாரிகள் அடுத்த மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். உள்நாட்டு நிறுவனங்களான ஹேமாஸ் மற்றும் சொஃப்ட்லொஜிக் போன்றனவும் முதலீடுகளை மேற்கொள்ளஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன.

ஆசிரிஹொஸ்பிட்டல்குழுமத்தின் உரிமையாண்மையைக் கொண்டுள்ள சொப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ், இந்த வாய்ப்பு மிகவும் அரிதானது என தெரிவித்துள்ளது. ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் குழுமத்தின் உரிமையாண்மையைக் கொண்டுள்ள ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் பங்குகளை அரசாங்கம் விற்பனை செய்ய தீர்மானித்தால் அவற்றை கொள்வனவு செய்வதில் தாம் ஆர்வமாக உள்ளதாக அறிவித்திருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் மறைமுக கட்டுப்பாட்டினுள் இயங்கும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸின் 54.61 பங்குகள் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் வசம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,679.84 | 6,633.27 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,509.85 | 3,454.64⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 4,744.056

***உயர்வடைந்தபங்குகள்(ரூ):*** ஹோட்டல் சிகிரியா(117.70), பிடிஎல்(110.00), கென்வினியன்ஸ் பூட்(473.00)டொல்பின் ஹோட்டல்(52.50), டிமோ(750.00).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** செரன்டிப் லாண்ட்(1, 661.20), கலமசு(2, 099.80), பொகவந்தலவ(10.20), எஸ்எம்பி லீசிங்(0.80), ஏசியா கப்பிரல(7.60).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 144.04 | 147.86 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 209.46 | 217.03 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 160.37 | 166.89 |
| சுவிஸ் பிராங் | 144.36 | 150.52 |
| கனேடிய டொலர் | 109.32 | 113.96 |
| அவுஸ்திரேலிய டொலர் | 103.25 | 108.19 |
| சிங்கப்பூர் டொலர் | 103.99 | 108.09 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.68 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### பனாமா ஆவணங்களில் இலங்கையர்கள் குறித்து

# நடவடிக்கை எடுக்காத நல்லாட்சி அரசாங்கம்

அண்மையில் வெளியான பனாமா ஆவண கசிவின் காரணமாக உலக நாடுகளிலுள்ள பல செல்வந்தர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. இந்த ஆவண கசிவின் ஊடாக இலங்கையைச் சேர்ந்த 67 பேரின் விபரங்களும் வெளியிடப்பட்டது.

இதனை அடிப்படையாக கொண்டு அவர்கள் தொடர்பில் ஆராய்ந்து விசாரணை மேற் கொள்ளப்படும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும், இதுவரையில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வில்லை.

பனாமா ஆவணங்கள் ஊடாக வெளியாகிய ராஜபக்ஷர்களின் பணத்தில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் நந்தன ஜயதேவ லொக்குவித்தானவிடம் இருந்தே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என அரசாங்கம் தீர்மானித்த போதிலும், இதுவரையில் அவர் தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படவில்லை.

நந்தன ஜயதேவ லொக்குவித்தானவினால் டுபாய் மெரியட் ஹோட்டல் கொள்வனவு செய்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை, சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்தமையின் காரணமாக இந்த முடிவு எட்டப்பட்டது.

2005 - 2010 ஆம் ஆண்டு இலங்கையில் வெளிப்படையாக உருவான முதலீட்டாளர் என அப்போதைய காலப்பகுதியில் பிரபலமடைந்த நந்தன ஜயதேவ லொக்குவித்தானவின், நிலோமா பெஷன் லிமிட்டட் நிறுவனத்தின் பெயர் பனாமா பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது சீஷே ல்ஸ் பட்டியலின் கீழ் பெயரிடப்பட்டுள்ளது.

நந்தன ஜயதேவ, உலக புகழ் பெற்ற டுபாய் மெரியட் ஹோட்டல் மற்றும் இலங்கையிலுள்ள இரும்பு சார்ந்த நிறுவனம் ஒன்றின் உரிமையாளராகும்.

டுபாய், அஜ்மான் பிரதேசத்தில் நிறுவனம் ஒன்றின் தயாரிப்பு உதவியாளராக செயற்பட்ட ஒருவர் மிகவும் குறுகிய காலப் பகுதியினுள் 5 நட்சத்திர ஹோட்டல் மற்றும் இலங்கையில் நிறுவனம் ஒன்றை கொள்வனவு செய்யததன் மூலம், எவ்வளவு கறுப்பு பணமாக நாட்டை விட்டு வெறியேற்றப்பட்டிருக்கும் என்பதனை கண்பிடிக்க வேண்டும்.

இதற்கு மேலதிகமாக பெலன்டைன் குரூப் லிமிட்டெட் என்ற பெயர் ஒப்ஷோ நிறுவனத்தின் ஊடாக ஐக்கிய ராஜ்ஜிய பட்டியலில் இலங்கையின் கோடீஸ்வர வர்த்தகரான சேன யந்தேஹிகேவின் பெயரும் பனாமா பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஜபக்ஷர்களுக்கு சார்பான செய்திகளை வெளியிடுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை ஒன்றின் ஆரம்ப உரிமையாளரும் ஆர்ப்பிக்கோ நிறுவனத்தின் உரிமையாளரும் அவராகும்.

அத்துடன் இந்த வகையில் தவறான முறையில் சொத்துக்கள் சேகரித்தமை மற்றும் பணம் தூய்மையாக்கல் நடவடிக்கைகளுக்கு தலையிட்டமை ஊடாக மிகவும் குறுகிய காலப்பகுதியில் கோடீஸ்வரர்களாகிய பலர் தொட ர்பில் தற்போது வெளியாகவுள்ள மையை தடுப்பதற்காக ஊடகவியலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு வெளிநாட்டு பயணங்களை மேற் கொள்ள பல்வேறு வகையில் இந்த நபர்களினால் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது. (இ-5)




| மரக்கறி வகைகள் | திருநெல் வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 140 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 100 | 150 | 110 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 200 | 60 | 120 | 120 | 100 |
| தக்காளி | 250 | 300 | 200 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 | 60 | 80 | 70 |
| கோவா | 140 | 200 | 120 | 140 | 160 | 160 |
| கரட் | 150 | 200 | 100 | 100 | 200 | 100 |
| பூசணி | 60 | 60 | 30 | 40 | 60 | 40 |
| புடோல் | 140 | 100 | 70 | 80 | 120 | 180 |
| வாழைக்காய் | 40 | 50 | 30 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 | 100 | 120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 90 | 120 | 90 |
| பாகற்காய் | 180 | 200 | 140 | 120 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 160 | 150 | 100 | 80 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 80 | 100 | 200 | 100 |
| பயற்றங்காய் | 240 | 300 | 200 | 250 | 120 | 300 |
| லீக்ஸ் | 160 | 250 | 140 | 160 | 320 | 200 |
| பீற்றூட் | 120 | 150 | 120 | 140 | 160 | 150 |
| கறிமிளகாய் | 200 | 200 | 140 | 140 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 120 | 200 | 100 |
| போஞ்சி | 200 | 200 | — | 200 | 280 | 280 |
| கத்தரிதம்புள்ள | 180 | — | 150 | — | 160 | 250 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 15 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 350 | 300 | 180 | 350 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-30 | 20-30 | 15-25 | 40 |
| இராசவள்ளி | 150 | 250 | 130 | 160 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | — | — | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | — | 20 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | — | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | 80 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## குண்டு வெடித்தது ஜனாதிபதி சந்திரிகா படுகாயம் 186

**சந்திரிகா படுகாயம்**

குண்டு வெடிப்பில் சந்திரிகாவும் படுகாயம் அடைந்தார். பாதுகாப்புப்படை வீரர்கள் மின்னல் வேகத்தில் அவரை அலாக்காகத் தூக்கி காரில் ஏற்றி வைத்தியசாலைக்கு பறந்து சென்றனர்.

அவர் நவலோக என்ற தனியார் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். உயர் வைத்தியர்கள் குழு அவருக்குச் சிகிச்சை அளித்தனர். அவருடைய உயிருக்கு ஆபத்து இல்லை என வைத்தியர்கள் தெரிவித்தனர். குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 15 பேர் பலியானதாக விசாரணையில் தெரிய வந்தது. மூத்த அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், கிங்ஸ்லி விக்கிரமசிங்க உட்பட 90 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

**கீழே விழுந்தார்**

சந்திரிகாவுடன் பேசிக்கொண்டிருந்த ஸ்டார் செய்தி தொலைக்காட்சி நிருபர் மாயாவும் போட்டோ கிராபர் கவுரவும் காயமின்றித் தப்பினார்கள். ஆனாலும் அவர்கள் முகத்தில் இரத்த திட்டுகள் சிதறி இருந்தன.

மாயா நிருபர்களிடம் கூறும் போது,

ஜனாதிபதி சந்திரிகா என்னுடன் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் குண்டு வெடித்த சத்தம் கேட்டது. உடனே அவர் கீழே விழுந்ததைப் பார்த்தேன். மெய்க்காவலர்கள் அவரை வேமாகத் தூக்கிச் சென்றனர் என்று கூறினார்.

**பொலிஸ் சுற்றி வளைப்பு**

குண்டு வெடித்த இடத்தை இராணுவமும் பெலிஸ்படையும் சுற்றி வளைத்து பாதுகாப்பு வளையம் அமைத்தது. யாரும் அந்த வளையத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை.

காயம் அடைந்தவர்கள் அம்புலன்ஸில் ஏற்றப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். சந்திரிகா அனுமதிக்கப்பட்டு இருந்த வைத்தியசாலையிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. வெளியாட்கள் யாரும் வைத்தியசாலைக்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை.

**விடுதலைப்புலிகள்**

ஜனாதிபதி சந்திரிகா தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொலைப்பட்டியலில் முதல் இடத்தில் இருந்தார். அவரைக் கொலை செய்ய விடுதலைப்புலிகள் பல முறை முயற்சி செய்ததாகக் கூறப்பட்டது. ஆனாலும் பலத்த பாதுகாப்பு காரணமாக அவரை யாரும் நெருங்க முடியவில்லை.

**உயிர் தப்பியது எப்படி?**

பொலிஸ் படையின் தீவிர கண்காணிப்பையும் மீறி மனித வெடிகுண்டுப்பெண், சந்திரிகாவை நெருங்கியது எப்படி? குண்டு வெடிப்புத் தாக்குதலில் ஜனாதிபதியின் உயிர் காப்பாற்றப்பட்டது எப்படி? என்பது குறித்து பொலிஸ் விசாரணையில் புதிய தகவல்கள் கிடைத்தன.

விடுதலைப்புலிகளின் கொலைப்பட்டியலில் சந்திரிகாவின் பெயர் இருந்ததால் அவருக்குப் பலத்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருந்தது. பொதுக்கூட்ட மேடை அருகே யாரும் நெருங்க முடியாத அளவுக்கு பொலிஸார் பாதுகாப்பு வளையம் அமைத்து இருந்தனர்.

மேடையில் இருந்து சற்றுத்தூரம் தள்ளித்தான் பொது மக்கள் உட்கார்ந்த இருந்தனர். பொதுக்கூட்டம் நடப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பே மேடை அருகேயும் அதைச் சுற்றியுள்ள வீதிகளிலும் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டது. இரவு பகலாக அங்கு பொலிஸ் படையினர் கண்காணித்து வந்தது.

**பெண் தொழிலாளி போல வேடமிட்டு வந்தாள்**

இத்தனை கட்டுக் காவலையும் மனித வெடிகுண்டுப் பெண் சாமர்த்தியமாக முறியடித்து விட்டாள். பொதுக்கூட்ட மேடை அமைக்கும் பணி நடந்தபோது அவள் ஒரு கூலியாள் போல நடித்து பொலிஸ் வளையத்துக்குள் எளிதாக நுழைந்தாள்.

மேடை அமைக்கும் வேலை 2 நாட்களாக நடந்ததால் அங்கிருந்த பெலிஸாருடன் சகஜமாகப் பழக அவளுக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதனால் அவளுடைய நடமாட்டத்தில் பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்படவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வெடிகுண்டுகளை உடலில் மறைத்தபடி மேடை அருகே அவள் நின்றிருந்தாள். கூலிப் பெண்தானே அவளால் என்ன ஆபத்து வந்துவிடும் என்று நினைத்து பொலிஸாரும் அலட்சியமாக இருந்து விட்டதால் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்துவிட்டது.

**காப்பாற்றிய கார்**

தேர்தல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு மேடையில் இருந்து இறங்கிய சந்திரிகா பெண் நிருபர் மாயாவிடம் பேசிக்கொண்டே தனது காரை நோக்கி மெதுவாக நடந்து வந்தார்.

காருக்குள் மறுபுறம்தான் மனித வெடிகுண்டு நின்றிருந்தாள். அவள் சந்திரிகாவை நோக்கி ஓடியபோது பாதுகாப்புப் படைவீரர்கள் மறித்துவிட்டனர். அதனால் காரைத்தாண்டும் முன்பே குண்டு வெடித்து விட்டது. இதில் காருக்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

காயம் அடைந்த சந்திரிகா தடுமாறியபடி கீழே விழுந்த போது மெய்க்காவலர்கள் அவரை அரண்போல் சூழ்ந்து நின்று காப்பாற்றினார்கள்.



குண்டு வெடிப்பில் படுகாயம் அடைந்த சந்திரிகா, கண்ணில் கட்டுடன். அருகே தாயார் சிறிமாவோ பண்டாரநாயகா.

(தொடரும்)

ஒட்ட வந்த பிடாரி
ஊர் பிடாரியை விரட்டியதாம்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை காணவந்த சேர் பொன்.இராமநாதன்

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியை அமைத்தவர் சைவப் பெருவள்ளல் சேர் பொன். இராமநாதன் அவர்கள். அந்தக் கல்லூரிதான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்டது.

ஆக, சேர் பொன்.இராமநாதனின் காணியும் கட்டிடமும் இல்லை என்றால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வந்திருக்க முடியாது.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தன் சொந்தக் காணியை வழங்கிய சேர் பொன். இராமநாதன் அவர்கள் தற்போது தேவலோகத்தில் வசிக்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பார்க்க வேண்டும் என்ற விருப்புக் கொண்ட அவர் தேவலோக சட்ட திட்டங்களுக்கு அமைய யாழ்ப்பாணம் செல்வதற்கு விண்ணப்பம் செய்தார்.

சைவப் பெருவள்ளல் ஆகிய சேர் பொன்.இராமநாதனின் விண்ணப்பத்தை பரிசீலித்த தேவலோக வெளிவிவகார ஆணைக்குழு அவர் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதி வழங்கியதுடன், பாதுகாப்புக் காரணங்களுக்காக மாறு வேடத்தில், மிகவும் எளிமையான தோற்றத்தில் சென்று வரவேண்டும் என்ற நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டது.

அனுமதியைப் பெற்ற சேர் பொன்.இராமநாதன் பரமாஸ் வேட்டி, நஷனல், உத்தரியம், நெற்றியில் திருநீறு அணிந்து, ஊன்று கோலைப் பிடித்தவாறு பழம்பெரும் உபாத்தியாயர் தோற்றத்தில் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு வந்து சேர்ந்தார்.

பலாலி வீதியால் செல்லும் பஸ் ஒன்றில் ஏறிய அவர், பஸ் நடத்துநரைப் பார்த்து தம்பி என்னை பரமேஸ்வராச் சந்தியில் இறக்கி விடும் என்றார்.

நடத்துநர் தலை அசைத்து சம்மதம் தெரிவித்தார். சில நிமிடங்களில் பஸ் புறப்பட்டது. ஆரியகுளம் சந்தி, கந்தர்மடம் சந்தி கடந்து பரமேஸ்வராச் சந்தி இறங்குங்கள் என்ற நடத்துநரின் அறிவிப்போடு சேர் பொன்.இராமநாதன் பஸ்ஸில் இருந்து இறங்குகிறார்.

பரமேஸ்வராச் சந்தியில் இறங்கியவர் அங்கும் இங்குமாகப் பார்க்கிறார். அட, பரமேஸ்வராச் சந்தி என்ன மாதிரி மாறிப் போய்ச்சுது என்று நினைத்தபடி அவர் பல்கலைக்கழகத்தை நோக்கி நடக்கிறார்.

பல்கலைக்கழக நுழைவாயிலை அடைந்ததும் சேர் பொன்.இராமநாதனுக்கு ஐயம் ஏற்படுகிறது. ஒரு பௌத்த விகாரை இருக்கிற இடத்திற்கு வந்து விட்டேனோ? சந்தேகத்தைத் தீர்க்க வாசலில் நின்றவரிடம் தம்பி! யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எங்கே இருக்கிறது? என்று கேட்டார். அதற்கு அங்கு நின்றவர் சேர் பொன். இராமநாதனை ஒரு மாதிரியாகப் பார்த்த படி, இதுதான் ஐயா என்றார்.

தம்பி! அப்ப ஏன்? வெசாக்கூடுகள். இப்ப ஐயா! இது யாழ்ப்பாண பௌத்த பல்கலைக்கழகமாகப் போச்சு. அந்தக் காலத்தில சேர் பொன்.இராமநாதன் என்றொரு பெரியார் இருந்தவராம். அவர் குதிரை வண்டியில் ஏற ஆசைப்பட்டு இலங்கையைப் பிரிக்காமல் சிங்களவர்களுக்குப் பேருதவி செய்து விட்டும் போய்விட்டார். இப்ப நாங்கள் படாப்பாடு...

அப்ப தம்பி! இந்தப் பல்கலைக்கழகத்தில இந்து மாணவர்கள் இல்லையோ? ஏன் இல்லை. ரோசம் கெட்டவன் இராசாவிலும் பெரியவன் என்ற நினைப்பில அவையள் இருக்கினம்.

அப்ப எங்கட பரமேஸ்வரன் கோயில் எங்கே? வெசாக் கூடுகள் கோயிலை மறைத்து விட்டன. வெசாக்கூடுகளைக் கழட்டினால்தான் பரமேஸ்வரன் கோயில் தெரியும். அது சரி தம்பி இந்தப் பல்கலைக்கழகத்திற்கு பேரவை இல்லையோ? ஏன் ஐயா! கேட்கிறியள். பேரவை உறுப்பினர்களாவது வெசாக் கூடு பற்றி கதைக்கலாமல்லவா?

ஐயா! இது ஒரு கதையோ! அந்த இராமநாதனே எங்களுக்காகக் கதைக்கவில்லை. இனிப் பேரவை உறுப்பினர்களோ கதைச்சு ஆகப்போகுது. சரி தம்பி இனி நான் இந்தப் பக்கம் வரமாட்டன். அது சரி ஐயா! நீங்கள் யார்? நான் தம்பி பொருத்துவீடு கட்டவெளிக்கிட்ட அமைச்சருக்கு சொந்தக்காரன். சரி தம்பி இனி நான் இந்தப் பக்கம் வரமாட்டன்.

## ஜெயலலிதாவுக்கு சுரேஷ் வாழ்த்து

பெருமைக்குரிய உங்களது தலைமைத்துவத்தின் கீழ் நடைபெற்று முடிந்த தமிழக சட்டசபைக்கான தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஈட்டிய பாரிய வெற்றிக்கு முதற்கண் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

முன்னை நாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனுக்குப் பின்னர் நீங்கள் பெற்ற தொடர் வெற்றியானது உங்களது ஆளுமை மிக்க தலைமைத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. ஈழத்தமிழர்களாகிய நாம் தாங்கள் மீண்டும் முதல்வராக பொறுப்பேற்றுக் கொள்வதை எதிர்பார்ப்புக்களுடனும் நம்பிக்கையுடனும் வரவேற்று நிற்கின்றோம். தங்களது கடந்த ஆட்சிக் காலத்தில் ஈழமக்களின் விடுதலைக்காக தாங்கள் தமிழக சட்டசபையில் நிறைவேற்றிய துணிச்சலானதும் அறிவுபூர்வமானதுமான தீர்மானங்களையிட்டு நாம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

தமிழக மக்கள் தங்களுக்கு மீளவும் வழங்கிய ஆணை என்பது தமிழகப் பிரச்சினைகளை கையாள்வதற்கான ஆணை மட்டுமன்றி ஈழத்தமிழ்மக்களுடைய தேசிய இனப் பிரச்சினையின்பால் தாங்கள் காட்டிய உறுதியான ஆதரவிற்கு அவர்கள் வழங்கிய அங்கீகாரமுமாகும் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

இங்கு தமிழ் மக்களின் தனித்துவம் என்பதும் இருப்பு என்பதும் இலங்கை அரசால் அழிவின் விளிம்புக்கு தள்ளப்பட்டு வருகிறது. எமது மக்களின் வாழ்க்கை என்பது தொடர்ந்தும் அதிகரித்து வரும் அடக்குமுறைகளுக்கும் அல்லல்களுக்கும் உட்பட்டே இருந்து வருகின்றது. நாம் ஓர் தனித்தேசிய இனமாக தமக்கான நீதியினையும் நிலைத்திருக்கக்கூடிய தீர்வையும் பெற்று வாழ்வதற்கு தமது சர்வதேச நட்பு சக்திகளின் ஆதரவை நாடி நிற்கின்றனர். தமிழ் மக்கள் தமது சொந்த ஆட்சியை நிறுவிக்கொள்வதற்கு ஆவன செய்வதாக தாங்கள் வழங்கிய உறுதிப்பாட்டை நாம் மகிழ்வுடன் வரவேற்கும் அதேநேரம் தாங்கள் தமிழ் மக்களை விடுவிப்பதற்கான போராட்டத்திற்கு தொடர்ந்தும் காத்திரமான பங்களிப்பை வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

எமது கட்சியின் சார்பாகவும் எமது மக்கள் சார்பாகவும தங்களின் பிரமாண்டமான வெற்றிக்காக மீண்டுமொரு முறை எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கினறேன். தாங்கள் நீண்டகாலம் ஆரோக்கியத்துடன் வாழப் பிரார்த்திக்கினறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பொங்கல் விழா

தெல்லிப்பழைமேற்குவிழி சிட்டி வீமசிட்டி (வித்தகபுரம்) சிவகுருநாத சுவாமி ஆலய வைகாசி விசாகப் பொங்கல் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை6மணிக்குநடைபெறும்.

அதனைத் தொடர்ந்து 7.30 மணிக்கு விசேட பூசையும் பொங்கல் உற்சவமும் இடம்பெறவுள்ளது. (இ-7)

## கௌரவிப்பு நிகழ்வு இன்று

யாழ்.மாவட்ட தேசோதய சபை உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு ஏ-9 வீதி நெடுங்குளம் சந்தியிலுள்ள சர்வோதய மாவட்ட நிலையத்தில் சர்வோதயம் கலாநிதி ஏ.ரீ.ஆரியரத்தின தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி க.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் துஷ்யந்தினி அருளானந்தம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.(இ-7)

## உ/த பரீட்சை கால அட்டவணை; மீண்டும் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக, கல்விப் பொதுத் தாராதர உயர்தரப் பரீட்சைக்கான கால அட்டவணை கிடைக்காத மாணவர்களுக்கு அதனை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு கொழும்பு பல்கலைகழகத்தின் விரிவுரையாளர்கள் இணங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் தொடர்பான தகவல்களை வலயக் கல்வி பணிமனைகளூடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எம்.பந்துசேன குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைகள் தொடர்பிலும் தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த தகவல்களை திரட்டுவதற்காக 24 மணித்தியாலங்களும் செயற்படும் விசேட செயலணி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

0112 78 63 84, 0712 365 965 அல்லது 0718 838 212 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு தகவல்களை வழங்க முடியும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எம்.பந்துசேன குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## சீன செஞ்.சங்கம் இலங்கைக்கு நிதியுதவி

இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி, சீன செஞ்சிலுவைச் சங்கம் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

குறித்த நிதியானது, சீன செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பாக, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதி இயக்குநர் எஸ்:பி. முதலிகேயிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## இலங்கை அனர்த்த பாதிப்பு; பாகிஸ்தான் மருத்துவ உதவி

(கொழும்பு)

வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு 30 படுக்கைகளைக் கொண்ட நவீன கள மருத்துவமனையையும், நிவாரணப் பொருட்களையும், பாகிஸ்தான் அனுப்பவுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவியை வழங்குவதற்கு, உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பாகிஸ்தான் வழங்கவுள்ள நிவாரண உதவியில், சத்திரசிகிச்சைக் கூடம், எக்ஸ்ரே வசதிகள் மற்றும் ஆய்வு கூடம் என்பனவற்றை உள்ளடக்கிய 30 படுக்கைகளைக் கொண்ட நவீன கள மருத்துவமனை மற்றும் மருந்துப் பொருட்கள், மின்பிறப்பாக்கிகள், தறப்பாய்கள், கூடாரங்கள் உள்ளிட்ட பல்வேறு நிவாரணப் பொருட்களும் உள்ளடங்கியுள்ளன.

மருத்துவ உதவியை வழங்குவதற்காக, 17 பாகிஸ்தானிய மருத்துவர்களும் இலங்கை வரவுள்ளனர்.(செ-12)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை மணிவரை யாழ்.பிரதேசத்தில சங்கத்தானை, டச்சு றோட் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப் பைக்குளம் பிரதேசம், ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கொம்புவைத்தகுளம் இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### தாத்தாவும் பேரனும்



தத்துவங்களைப் புரிந்து கொண்டால் நம் வாழ்க்கையில் நடைபெறக் கூடிய எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அர்த்தம் புரிந்து விடும். இறைநிலையைத் தாத்தா என்றால், அதிலிருந்து முதலில் தோன்றிய விண் மகன். முதல் விண்ணிலிருந்து இரண்டாவதாகத் தோன்றிய நிழல்-விண்ணோ இறைவெளிக்குப் பேரன்.

பேரன் எங்கே போனாலும் தாத்தாவுடன் சேர்ந்து கொண்டான். நிழல் விண் இறைவெளியோடு கலந்துவிட்டது தான் காந்தம். அப்படியானால் தாத்தாவும், பேரனும் அதாவது இறைவெளியும், நிழல் விண்ணும் ஆடும் கூத்துத் தான் பிரபஞ்சம்.

இறைவெளியில் நிழல் விண்கரைந்த நிலை காந்தம். காந்தம் தான் அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக, மனமாகப் பிரபஞ்சம் முழுவதிலும் எல்லாப் பொருளிலும் இருக்கிறது. இறைவெளி என்ற தாத்தாவும், நிழல் விண் என்ற பேரனும் ஆடுகிற கூத்துத் தானே இவையனைத்தும்!

இறைவெளி புலன்களுக்கு எட்டாது இருந்ததனால் அதை விவரித்துச் சொல்ல முடியவில்லை. ஆனால், எப்படித் தத்துவஞானிகள் கண்டுபிடித்தார்கள்? மனம் சுழல் விரைவு அதிகமாயிருக்கிறபோது அது அலை. அலைக்கு அடித்தளமாக இருப்பது இறைநிலை. இறைநிலையிலிருந்து அலை விலகி நிற்கிற மாதிரி இருக்கும். ஆனால், மன அலைச் சுழல் விரைவு குறையக் குறைய, இறையுணர்வும் இறையாற்றலும் அந்த மனத்திற்கு வலுவைத் தருகின்றன. அப்படியே அந்த இறைநிலையோடு நெருங்கியிருக்கிறபோது, மனம் இறைநிலையைத் தெரிந்து கொள்கிறது.

இறைநிலையிலிருந்து தானே எல்லாமே வந்தன? எல்லா இயக்கங்களும், பதிவுகளும் வான்காந்தத்தில் தான் இருக்கின்றன. அதோடு மனம் இணைகிறபோது அங்கிருக்கக்கூடிய உண்மைகள் எல்லாம் தெரிகின்றன. நேற்று நடந்த செயலை நினைத்தால் நினைவிற்கு வருகிறது போலத் தனக்குள்ளாகவே பிரபஞ்ச ரகசியங்கள் தெரியும்.

# வல்லவன் உதைபந்தாட்ட தொடர்

# சமநிலை தவிர்ப்பு உதையில் சென். அன்ரனிஸ் வெற்றி







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் மணற்காடு சென்.அன்ரனிஸ் வி.க. எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் வி.க. மோதியது.

பரபரப்பான போட்டியில் முதற்பாதி ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் அணிக்கு கிடைக்கப்பெற்ற அரிய தண்ட உதையினை சென்.மைக்கல் வி.க. கோல் காப்பாளர் தடுக்க வாய்ப்பு பறிபோனது. தொடர்ந்தும் இரண் டாவது பாதியில் மீண்டும் சென். அன்ரனிஸ் வி.க. தண்ட உதை கிடைக்கப்பெற்றது. இரண் டாவது தண்ட உதை கோல் கம் பத்தை விட்டு வெளியே செல்ல கோல் வாய்ப்பு தவறவிடப்பட்டது. ஆட்ட நேர முடிவில் இரு அணியின ரும் கோல் பெறாமையினால் சம நிலை தவிர்ப்புக்காக போட்டி சம நிலை தவிர்ப்பு உதைக்கு தள்ளப் பட்டது. சமநிலை தவிர்ப்பு உதை யில் வழங்கப்பட்ட 5 உதைகளில் இரு அணியினரும் 4:4 என கோல் பெறப்பட்டதால் மேலதிக ஒரு உதை யில் சென்.மைக்கல் கோலினை பெறாது போக மணற்காடு சென். அன்ரனிஸ் கோலினை பெற்று 5:4 என வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக சென். அன்ரனிஸ் வி.க. வீரர் சுஜீவன் தெரிவு செய்யப் பட்டு அவருக்கான பணப்பரிசு மற் றும் பதக்கத் தினை வடமாகாண வல்லவன் தொடரின் நலன் விரும்பி யான ரா.திருப்புகழ் வழங்கி கௌர வித்தார். (கு)

## ஹென்றீஸ் சவால் கிண்ண உதைபந்து; சென்.மேரிஸை வென்றது யங்கம்பன்ஸ்



இளவாலை ஹென்றீஸ் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்றின் விலகல் முறையிலான ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணியளவில் நடைபெற்ற முதலாவது போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதியது.

போட்டி ஆரம்பமாகி 15 ஆவது நிமிடத்தில் கிடைக்கப்பெற்ற பனால்டி உதையினை ஜெனற் கோலாக மாற்ற முன்னிலை வகித்தது சென். மேரிஸ் அணி.

இருந்தபோதும் தொட ர்ந்தும் தமக்கு கிடைக்கப்பெற்ற பல சந்தர்ப்பங்களை வீண்டித்து வழமைக்கு மாறான ஆட்டத்தை வெளிப் படுத்தியது.

இதனை சாதகமாகப் பயன்படுத்திய யங்கம்பன்ஸ் அணி ரதன் 27 நிமிடத்தில் சிறப்பான கோலொன்றை போட ஆட்டத்தினை சமப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து ஆட்டத்தில் விறுவிறுப்பு ஏற்பட்டது.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் கடினமான ஆட் டத்தினை வெளிப்படுத்திய போதிலும் கோல் போடும் சந்தர்ப்பங் களை உருவாக்கவில்லை. எனினும் 56 ஆவது நிமிடத்தில் கிடைக்கப் பெற்ற பனால்டி உதையினை தர் சன் கோலாக மாற்ற யங்கம்பன்ஸ் அணி முன்னிலை பெற்றது.

ஆட்டம் மேலும் விறுவிறுப்பானது. சென்.மேரிஸ் வீரர்கள் இறுதி வரை கோல் போட கடினமாக முயற்சித்த போதும் யங்கம்பன்ஸ் அணியின் தடுப்பாட்டம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. இறுதியில் 2:1 கோல் கணக்கில் வெற்றி பெற்று லீக் சுற்றில் A பிரிவில் முதல் அணியாக உள்நுழைந்தது கம்பர்மலை யங் கம்பன்ஸ் அணி. (கு)

## கராத்தே போட்டி
## 7 வயது மாணவனுக்கு 10வது தங்கப் பதக்கம்



கராத்தே சுற்றுப்போட்டியில் வவுனியாவை சேர்ந்த 7 வயது மாணவன் 10 ஆவது தங்கப்பதக் கத்தை பெற்றுள்ளார்.

கண்டி பேராதனை பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடை பெற்ற கராத்தே சுற்றுப் போட்டியில் வவுனியாவை சேர்ந்த நந்தகுமார் ஷபீந்தன் 7 தொடக்கம் 8 வயது பிரிவில் காட்டன் பகுதியில் ஒரு தங்கப்பதக்கமும் குமித்தே பகுதி யில் ஒரு தங்கப்பதக்கமும் ஆக இரண்டு தங்கப்பதக்கத்தை பெற்று பத்தாவது தங்கப்பதக்கத்தை எட்டி யுள்ளார். இதற்கு முன்னர் நடை பெற்ற வேறு வேறு போட்டிகள் சில வற்றில் கலந்து கொண்டு எட்டு தங்கப் பதக்கங்களை குறித்த மாணவன் பெற்றுள்ளதுடன் தனது வயதைக் காட்டிலும் அதிக தங்கப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்




இலங்கை மெய்வன்மை சம்மேளனத்தினால் நடத் தப்பட்ட தேசிய கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வல் லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த ஆர்.தர்சிகா 23 வயதுப் பிரிவு குண்டு எறிதல் போட்டியில் வெண்கலப்பதக்கத்தினை கைப்பற்றினார்.

## இன்றைய போட்டிகள்

அராலி வடக்கு திருமகள் விளை யாட்டுக்கழகம் யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக் கிடையே உதைபந்தாட்ட போட்டி யினை அராலி வடக்கு மடத்தடி திரு மகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்துகின்றது. இன்று திங் கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் விளையாட் டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென்.தோமஸ் விளையாடடுக் கழக த்தை எதிர்த்து காரைநகர் கலாநிதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளன. (கு)

# கடந்த கால ஊழல்கள் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் கலந்துரையாட முடிவு

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் ஊழல், மோசடிகளுக்கு எதிராக துரித விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

கடந்த வார அமைச்சரவைக் கூட்டத்தின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நடைபெற்ற ஊழல்கள் குறித்து துரித விசாரணை மற்றும் அதற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

குறித்த பத்திரத்தை அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, சம்பிக்க ரணவக்க, அர்ஜுன ரணதுங்க மற்றும் சரத் பொன்சேகா ஆகியோர் சமர்ப்பித்திருந்தனர்.

எனினும் ஜனாதிபதியின் எதிர்ப்பு காரணமாக குறித்த அமைச்சரவைப் பத்திரம் விலக்கிக் கொள்ளப்பட்டது. இது குறித்து தொடர்புபட்ட நான்கு அமைச்சர்களும் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

அமைச்சர்களின் அதிருப்தியைப் போக்கும் வகையிலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சியில் நடைபெற்ற ஊழல்கள் தொடர்பிலும் மேலதிக நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதியும் பிரதமரும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலுக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையிலான நான்கு பேர்கொண்ட குழு ஒன்றை அமைக்கவுள்ளதாகவும் தகவல்கள் 'தெரிவிக்கின்றன. (செ-12)

# குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(கரணவாய்)

வெட்டுக்காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் ஒருவரின் சடலம் வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்றிரவு 9.30 மணியளவில் உடுப்பிட்டி இமையாணன் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் அசுவதி (64) என்ற குடும்பப் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த பெண்ணின் பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வருகின்ற நிலையில் தனது கணவருடன் உடுப்பிட்டி பிரதேசத்தல் இவர் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் வீட்டில் வெட்டுக்காயங்களுடன் பிரஸ்தாப பெண் சடலமாக காணப்பட்டதை கண்ட அயலவர்கள் அப்பிரதேசத்துக்கு பொறுப்பான கிராம சேவையாளருக்கு முறையிட்டதுடன் பொலிஸாரிடமும் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த வல்வெட்டித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)

# எவரஸ்ட் மலையில் ஏறிய இரு வழிகாட்டிகள் மரணம்

இலங்கையை சேர்ந்த இருவர் எவரஸ்ட் மலைச் சிகரத்திற்கு செல்ல வழிகாட்டிகளாக செயல்பட்ட இரு வழிகாட்டிகள் உயிரிழந்துள்ளனர்.

நெதர்லாந்தை சேர்ந்த பெண் ஒருவரும் அவுஸ்திரேலியாவை சேர்ந்த பிறிதொருவருமே உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவரஸ்ட் சிகரத்தின் கடும் குளிர் காரணமாகவே இவர்கள் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவரஸ்ட் மலைச் சிகரத்தை சென்றடைந்த இவர்கள் மீண்டும் திரும்பும் வழியிலேயே கடும் குளிர் காரணமாக மரணித்துள்ளனர்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் இலங்கையை சேர்ந்த ஜயந்தி குருவுத்தும்பொல மற்றும் யொஹான் பீரிஸ் ஆகியோர் எவரஸ்ட் சிகரத்தை சென்றடைந்து சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

வேல்,

விரைவாக விஜயம் செய்யும் நோக்கம் எதுவும் இல்லை என்றும் தன்னை யாரும் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார். (செ-12)

# அனர்த்தங்களில்...

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 84 ஆக உயர்ந்துள்ளதுடன், மேலும் 250 பேரை காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள அனர்த்த முகாமைத்துவ மையம் இந்த உயிரிழப்பு எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகிறதாகவும் மத்திய மாகாணத்தில் உள்ள கேகாலையில் பல சடலங்களை மீட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இச்சூழலில் சில பகுதிகளில் மழை வெள்ளம் வடிந்துவிட்டதால் மக்கள் வீடுகளுக்கு திரும்ப தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், மலையகத்தில் ஆங்காங்கே நிலச்சரிவு அபாயம் இருப்பதால் மக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளம் குறைவடைந்த நிலையிலும் பல பிரதேசங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றது.

குறிப்பாக காவத்தை, நிவித்திகலை, கிரியெல்ல, கொலன்னை, எஹலியகொடை, குருவிட்ட, பலாங்கொடை, எலபாத்த ஆகியயாட்டு மைதானத்தில் தற்காலிக கூடாரங்கள் அமைத்து தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பாரிய நிலச்சரிவு அனர்த்தம் ஏற்பட்ட கேகாலை மாவட்டத்திலுள்ள அரநாயக்க பிரதேசத்தில் நிலத்தில் புதையுண்டு காணாமல் போயுள்ளவர்களை தேடும் பணியில் இராணுவம் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.

இந்த பிரதேசத்தில் காணாமல் போனவர்களை தேடும் பணியிலும் நிவாராண பணியிலும் 200க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாக ராணுவ செய்தி தொடர்பாளரான பிரிகேடியர் ஜயநாத் வீரசூரிய தெரிவித்தார்.

இதுவரை, 5 பெண்கள் உட்பட 21 சடலங்களை இராணுவம் மீட்டுள்ளது. இதனைத்தவிர, காணாமல் போன 14 பேருடையதாக இருக்கலாம் என கருதப்படும் சில உடல் பாகங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த பலரின் சடலம் நிலத்திற்குள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரி





நகரை அண்மித்த பகுதிகளில் நேற்று காற்றுடன் கூடிய மழை பெய்துள்ளது.

இதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட லிந்துலை ஊவாக்கலை 3ஆம் இலக்க தோட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நிலம் கீழ் இறங்கியதால் குடியிருப்புகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ள காரணத்தினாலும் மண்சரிவு அபாயத்தின் காரணமாகவும் 12 குடும்பங்களை சேர்ந்த 57 பேர் இடம்பெயர்ந்து தோட்ட விளைவிக்கப்படுகின்ற போதும், அவை கற்பாறைகளுக்கு அடியில் காணப்படுவதால், கற்பாறை உருண்டு பாரிய சேதம் ஏற்படலாமென்ற அச்சத்தில் அப்பகுதியில் மீட்புப் பணிகள் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

இதனிடையே, மீட்புப்பணிகளில் இருந்து விலக்கப்பட்ட இராணுவத்தை பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபடுமாறு இராணுவத்தளபதி உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் கடந்த சில நாட்களாக தொடர்ந்த மழையினால் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி இதுவரை 4 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# கொக்குவில் புதுக்கோவிலில் சிறப்புப் பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலய (புதுக் கோவில்) இந்து இளைஞர்கள் நடத்தும் இசை நிகழ்வும் சிறப்புப் பட்டிமன்றமும் இன்று மாலை 5 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும்.

நா.சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி வி.மணிவண்ணன், நிகழ்ச்சித் திட்ட அலுவலர் சி.அர்ஜீன் ஆகியோர் கலந்து கொள்வர். தொடர்ந்து பக்தி இசையும் சிறப்புப் பட்டிமன்றமும் நடைபெறும். (ந)

# இலங்கை மாணவர்களுக்கான பாக்.அரசாங்க புலமைப் பரிசில்

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தானில் சென்று இலவசமாக படிப்பதற்கு புலமைப் பரிசில் வழங்குவதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2016 ஆம் கல்வியாண்டுக்கே இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

பாகிஸ்தான் அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் கொழும்பிலுள்ள தனது உயர் ஸ்தானிகராலயத்தின் மூலம் இந்தப் புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றது.

கடந்த 2005ஆம் ஆண்டு முதல் இலங்கையிலிருந்து இந்தப் புலமைப் பரிசிலைப் பெற்று அந்நாட்டில் சுமார் ஆயிரத்து 300 இற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

கடந்த 11 வருட காலப்பகுதியில் இந்த மாணவர்களின் படிப்புக்காக மாத்திரம் பாகிஸ்தான் அரசு 43 மில்லியன் ரூபாயை செலவு செய்துள்ளதாகவும் குறிப்பிடத்தக்கது. (செ-12)

# குடும்பத்தில் தகராறு; மனைவிக்கு கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)

கணவன்-மனைவிக்கு இடையே ஏற்பட்ட தகராறு கத்திக்குத்தில் முடிந்ததில் மனைவி படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் வல்வெட்டித்துறை ஊரணி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தை சேர்ந்த புலேந்திரன் கீர்த்தனா (வயது-24) என்ற குடும்பப் பெண்ணே கழுத்து மற்றும் முகப் பகுதியில் கத்தி வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் முறைப்பாட்டினை பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)

# மைத்திரியின்...

பிட்டுள்ளார்.

பொறுப்புக்கூறல் நிலைமாற்று நீதி விடயங்களில் அரசாங்கத்தின் செயற்பாட்டை எவ்வாறு பார்க்கின்றீர்கள் என வினவியதற்கு பதிலளித்துள்ள அவர்,

அரசின் செயல் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் தாம் திருப்திகொள்ளவில்லை எனவும், எவ்வாறு யூன் மாதத்தில் ஜெனிவாவுக்கு இலங்கை முகம்கொடுக்கப் போகின்றது என தான் சந்தேகிப்பதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கு தென் பகுதியில் இன்னமும் பல தெளிவுமிக்க அரசியல் தலைவர்கள் தேவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு எப்போது விஜயம் மேற்கொள்வீர்கள் என்று எழுப்பப்பட்ட வினாவுக்கு பதிலளித்துள்ள அருட்தந்தை இம்மானு

# மகிந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளே...

தங்கம் 1200 அமெரிக்க டொலர்களாக குறைந்துள்ளது. எனவே இதற்கான நட்டத்தை மத்திய வங்கியே ஏற்க வேண்டியுள்ளது.

அதன் பின்னர் 2012-ம் ஆண்டளவில் மகிந்த அரசாங்கம் தனியார் வங்கிகளின் ஊடாக டொலர் நாணயத்தில் கடன்களை வாங்கிக் குவித்தது.

அவ்வாறு கடன் வாங்கும்போது கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தில் டொலரின் பெறுமதிக்கேற்ப வட்டி விகிதம் மற்றும் தவணைக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்றுக் கொண்டிருந்தது.

அன்றைக்கு 110 ரூபாயாக இருந்த ஒரு டொலர் தற்போது 140 ரூபாயுக்கும் மேல் அதிகரித்துள்ளது.

அவ்வாறு பார்க்கும் போது ஒரு டொலருக்கு சுமார் 30 ரூபாய் வரை மேலதிகமாக மத்திய வங்கி செலுத்த நேர்ந்துள்ளது. இதுவும் ஒருவகையில் மத்திய வங்கிக்கு நட்டம்தான்.

இதற்கு மேலதிகமாக கடந்த 2014-ம் ஆண்டளவில் இலங்கையின் வங்கிகள் மற்றும் மத்திய வங்கியில் போதுமான நிதி கையிருப்பில் இருந்த நிலையிலும் மகிந்த அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து பாரிய கடன்தொகையை பெற்றுக் கொண்டிருந்தது.

ஆனால் அந்தப் பணம் எதற்கும் பயன்படுத்தப்படாமல் உறை நிலையில் வைக்கப்பட்டிருந்தது. எனினும் இன்று வரை அதற்கான வட்டியை நாங்கள் செலுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறான விடயங்கள் காரணமாகவே மத்திய வங்கி நட்டத்தில் இயங்குவதாக அறிக்கைகளின் புள்ளிவிபரங்களைக் குறிப்பிட நேர்ந்துள்ளது.

எனினும் இந்த நிலை அடுத்த ஆண்டுக்குள் மாறிவிடும். அத்துடன் மகிந்த அரசாங்கத்தில் தவறான பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நிதி துஷ்பிரயோகங்கள் காரணமாக நட்டமடைந்த அரசாங்க நிறுவனங்களை நடத்திச் செல்ல திறைசேரியில் இருந்து பாரிய நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது.

இதன் மூலம் அரசாங்கத்தின் நிதிக் கையிருப்பில் பாரிய வெற்றிடம் ஏற்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்து கொள்ளவே தற்போது வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி ஏலத்தில் எந்தவொரு முறைகேடும் நடக்கவில்லை.

அதுகுறித்து விடயங்களை தெளிவாக அறிந்து கொள்ளாதவர்களே அவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

இலங்கை மத்திய வங்கியின் நட்டத்தை சமாளித்து அரசாங்கத்தின் நிதிக்கையிருப்பை அதிகரிக்க கடந்த காலங்களில் நாங்கள் ஏராளமான முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம்.

அவை தற்போது வெற்றிகரமாக முன்கொண்டு செல்லப்படுகின்றது. எதிர்வரும் மாதங்களில் அதன் பலனை பொது மக்கள் அனுபவிக்கக் கூடியதாக இருக்கும்.

என்னைப் பொறுத்தவரை பொருளாதாரத்தில் சிறப்பு கற்கை நெறிகளை முடித்துள்ளேன். எனது நாட்டுக்கு சேவையாற்ற வேண்டும என்ற நோக்கத்தில் திரும்பி வந்துள்ளேன். இதற்கு முன்னர் பல்வேறு திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளில் சேவையாற்றியுள்ளேன்.

எனவே மத்திய வங்கியின் ஆளுநராக இன்னுமொரு தடவை கடமையாற்ற வாய்ப்புக் கிடைத்தால் பெரிதும் சந்தோசமாக ஏற்றுக் கொள்வேன் என்றும் அர்ஜுன் மகேந்திரன் தெரிவித்துள்ளார். (செ-12)

## இரு நாள்...

பகலுணவை வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குமாறு தெரிவித்துள்ளனர்.

இந்த பகலுணவுக்காக செலவு செய்யும் நிதியினை சிறைச்சாலை தலைமையகத்தின் ஊடாக வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழுங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதேபோன்று மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலையின் நிருவாகத்தின் கீழுள்ள கல்முனை சிறைக் கூட உத்தியோகத்தர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தினை வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க முன்வந்துள்ளனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் கல்முனை சிறைக் கூட உத்தியோகத்தர்கள் 135 பேர் இவ்வாறு தமது ஒரு நாள் சம்பளத்தினை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவுள்ளதாக மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம அத்தியட்சகர் கே.எம்.யு.எச்.அக்பர் மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலையின் பரதம ஜெயிலர் என்.பிரபா ஆகியோர் மேலும் தெரிவித்தனர். (செ-12)

## அரசாங்கம் செய்த...

நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, வெள்ளத்தால் மண சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதிலும மக்களை நேரில் சென்று பார்வையிட்டு, அவர்களின் குறைகளை கேட்டறிவதில் எமது தரப்பு எம்.பிக்கள் நேரடியாக செல்கின்றார்கள். நானும கடந்த சனிக்கிழமை முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களுடனேயே இருந்தேன்.

ஆனால் பரசூட்களிலிருந்து திடீரென குதித்த ஐ.தே.கட்சி எம்.பிக்கள், அமைச்சர்கள் மக்களின் குறைகளை கேட்கவோ நிவாரணங்களை வழங்கவோ செல்லவில்லை. இதனை மக்கள் அறிவார்கள். நாங்கள் ஊடக கலை விழாக்களை காண்பிக்கவில்லை. அரச தரப்பினர் ஊடக கலை விழாக்களை நடத்துகின்றனரே தவிர மக்களை கவனிக்கவில்லையென்றே கூற வேண்டும்.

அதேவேளையில் வடக்கு உட்பட நாடு முழுவதும் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக முழுமையான அறிக்கையை அரசு சமர்ப்பிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக முன்னெடுத்த நிவாரணங்கள், செலவுகள் என்பது தொடர்பில் பாராளுமன்றம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதற்காகவே பாராளுமன்றத்தில் அனர்த்தம் தொடர்பாக ஒரு நாள் விவாதத்தை கோரியுள்ளோம் என்றும் வாசுதேவ நாணயக்கார எம்.பி.தெரிவித்தார். (செ-12)

## மீண்டும் ஒரு போர்த்திணிப்பாக...

அமைந்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், நாட்டிலுள்ள ஏனைய மாகாணங்களில் உள்ள ஆளுநர்கள் தமது கடமையை மாத்திரம் செய்து கொண்டு இருக்கும்போது, வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தமது அதிகாரத்திற்கு அப்பால் சென்று செயற்பட்டு வருவதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் மற்றும் தமிழ் இளைஞர்கள் இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என கிளிநொச்சி இராணுவ ஒத்துழைப்பு மையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வெசாக் தின நிகழ்வில் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வடமாகாண ஆளுநரின் இக்கருத்துக்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், முன்னாள் போராளிகளை சிறையிலிருந்து வெளியில் கொண்டு வருவதற்கு அருகதையற்ற வடமாகாண ஆளுநர், வெளியில் இருக்கும் முன்னாள் போராளிகளை இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று கூறுவது, நாட்டில் தமிழ் மக்களை மீண்டும் அடக்குமுறைக்குள் வைத்திருக்கும் ஒரு முயற்சி.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல், தமிழ் மக்களை குருதி சிந்தும் நிலைக்கு மீண்டும் தள்ளும் வடமாகாண ஆளுநர் போன்றோரின் செயற்பாடானது மிகவும் வேதனைக்குரியது.

காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவும் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்துவதையே குறிக்கோளாக கொண்டுள்ளது.

போர்க்குற்றங்கள் தொடர்பில் நீதியான சர்வதேச விசாரணை என்ற கோரிக்கையை மழுங்கடிக்கச் செய்வதாகவே இவர்களின் இத்தகைய செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இதன் அடிப்படையிலேயே வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயும் தற்போது செயற்பட்டு வருகன்றார் என சிறிதரன் மேலும் தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்து வரும் கருத்துக்கள் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் மற்றும் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோரும் அண்மையில் கவலையும், விசனமும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## தலாய் லாமா...

யிட்டுள்ளார்.

உயிர் இழப்புக்கள் மற்றும் பாரியளவிலான அழிவுகள் போன்றவற்றுக்காக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாக தலாய் லாமா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைத்துள்ள விசேட கடிதமொன்றில் அவர் இத்னைக் குறிப்பிட்டுள்ளார்.

அனர்த்தம் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கை வாழ் மக்களின் துன்பத்தில் பங்கேற்றுக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## புதிய சூழலில்...

மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சராக இன்று பதவியேற்கவுள்ள அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கு அனுபபிய வாழ்த்துச் செய்தியில் வெளிவிவகார அமைசசர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்த்துச் செய்தியில், உங்களின் அரசியல் மற்றும் தலைமைத்துவம் மீது தமிழக மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு நீங்கள் பெற்ற பெரும் வெற்றி தகுந்த சாட்சியாகும்.

உங்களின் மேற்பார்வையில் இலங்கை மற்றும் தமிழக மக்கள் இடையில் காணப்படும் பன்முக உறவுகள் தொடர்ந்து வலுப்பெற்று, ஆக்கபூர்வமான வழிகளில் மேலும ஒத்துழைப்புகள் மேம்படும் என்பது என்னிடம் பலத்த நம்பிக்கையுண்டு.

இலங்கையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னரான புதிய சூழலில் உங்களுடன் நெருக்கமாகப் பணியாற்ற விரும்புகின்றோம்.

நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பில் நல்லிணக்கம் மற்றும் மீள்குடியேற்றம் போன்றவற்றுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

நீங்கள் நல்ல ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியுடனும் வாழவும், தனிப்பட்ட வாழ்வில் தொடர்ந்து முன்னேற்றம் காணவும், தமிழக மக்களின் மேம்பாட்டுக்காகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (செ-12)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## மகிந்தவின்...

சாங்கம் உரிய விசாரணை நடத்த வேண்டும என்றும் முன்னாள் அமைச்சரும், கடந்த ஆட்சிக் காலத்தில் மகிந்தவின் தீவிர விசுவாசியாகவும் காணபபட்ட மேர்வின் சில்வா தெரிவித்துளளார்.

கடந்த அரசாங்கத்தின் ஊழல் மோசடி குறித்து ஊடகமொன்றிற்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக கொழும்புக்கு வந்த மகிநதவுக்கு, கோடிக்கணக்கான சொதது்க்கள் வாங்கும் அளவிற்கு வசதி இருக்கவில்லையென தெரிவித்த அவர், கடந்த ஆட்சிக்காலத்தில் பாடசாலை அதிபர் ஒருவருக்கு கார் ஒன்றை மகிந்த பரிசளிக்கும்போது, தாமும் உடனிருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஊழலுக்கு எதிராக மக்கள் பிரதிநிதிகளை மகிந்த ஆட்சியாளர்கள் எதிர்த்துப் பேச விடுவதில்லை என்றும், அரசாங்கம் உரிய விசாரணைகளை முன்னெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மேர்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## உடனடி நிவார...

வெல்லம்பிட்டிய பகுதிக்கு சென்ற ஜனாதபதி, வெள்ளத்தினால் பாதிக கப்பட்டு வித்தியாவர்த்தன வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

மக்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தினார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை வழங்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு இதன் போது உத்தரவிட்டார்.

அதனையடுத்து, மீதொட்டு முல்லை தர்மோதய விகாரை மற்றும் கொலன்னாவை நாஹவனாராமய விஹாரைக்கு சென்ற ஜனாதிபதி அங்கிருக்கும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து கொண்டார்.

இதன்போது அனர்த்தத்தினால் பாதிக்கபபட்ட மக்களின் நலன்கள் தொடர்பில் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (செ-12)

CSE COLOMBO STOCK EXCHANGE
பங்குச்சந்தை முதலீடுகளுக்கான முழுமையான அறிவு
அனுபவமுள்ள துறைசார் வல்லுநர்களின் பயிற்சிப்பட்டறை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்.கிளையில்
(C-4669)
பங்கு முதலீட்டு எண்ணக்கருக்கள்
பங்குகளின் தெரிவு மற்றும் உத்திகள்
நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கங்களும் விளக்கங்களும்
முதலீட்டினை ஆரம்பித்தல்
- மேலதிக வருமானம் உங்கள் வீட்டிலிருந்து-
மே 28 (சனிக்கிழமை) முதல் வார இறுதி நாள்களில் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை
முன்பதிவுகளுக்கு:- 222 1455 / 077 782 2014 - 147,2/3, K.K.S.Road,Jaffna. பதிவுக் கட்டணம் ரூபா 500/=

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.